திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

35
GAZETTEER UNIT
404/
17 JUN 1965
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

மாலை 2] விகாரி புரட்டாசி அக்டோபர் 1959 [மணி 1

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



நாகப்பட்டினம் கடலில் அதிபத்த நாயனர் கட்டுமரத்தில் மீன்பிடிக்கும் விழா.

பொருளடக்கம்

1. ஸ்ரீ லங்கா யாத்திரை
2. 'திருக்கோயில்' பற்றிய சிறப்புரைகள்
3. சைவம்
4. வைஷ்ணவம்
5. குன்றக்குடி
6. விநதாசுத வாகனம்
7. சிங்கமாய தேவதேவன்
8. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
9. பேரூர் ஆடவல்லானின் அருள்மேனி
10. திருநீலகண்ட நாயனர்
11. திருப்புத்தூர்
12. பாம்பன் சுவாமிகள்

(முகப்புப்படம்-காட்சி கொடுத்த நாதர், வேதாரண்யம்)

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம், மவுண்ட்ரோட், சென்னை-2.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] விகாரி புரட்டாசி - 1959 அக்டோபர் [மணி 1

GAZETTEER UNIT 4041 17 JUN 1965 MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

ஸ்ரீலங்கா யாத்திரை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

23-7-59 நடுப்பகல் அனுராதபுரம் சேர்ந்தோம். அனுராதபுரம் புராதன நகரம். கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் போகும் பாதையில் இருக்கிறது. பழைய நகரச் சின்னங்கள் இருக்குமிடங்களைக் காலிசெய்து புதிய இடங்களில் நவீன நகரம் கட்டப்பட்டு வருகின்றது. புராதீன நகரச் சின்னங்கள் இருக்கும் பெரும்பகுதி ஆறு கட்டைரோடு என்ற ஒரு சுற்றுக்குள் அடங்கியிருக்கிறது. இலங்கையில் கட்டை என்பதை ஒரு மைலைக் குறிக்க எல்லோராலும் உபயோகப்படுத்தப்படுகின்றது. இதற்குக் காரணம் ஆதியில் மைல் கற்களுக்குப் பதிலாக மரக் கட்டைகளை உபயோகித்ததாக இருக்கலாம் என்று தெரிகிறது. அனுராதபுரம் எல்லைக்குள் பல புத்த ஆலயங்கள் இருக்கின்றன. தூபராமா, இலங்காராமா, அபயகிரி, ஜேதவனராமா, ரூவன்மெளிமகா சேயா முதலிய டகோபாக்களும், மிரிசவேதி, ஈசுருமினி விகார்களும், ஸ்ரீ மகா போதி விருட்சமும் இங்கே முக்கியமாகப் பார்க்க வேண்டியவை. இவ்வூருக்கு வெளியே கதிரேசன் கோயில் என்ற ஒரு முருகன் கோயிலும், அதையடுத்து ஒரு விவேகாநந்த மடமும் இருக்கின்றன. ஆடி வேலுக்கு கதிர்காமம் போகாதவர்கள் இந்த கோயில் திருவிழாவில் கலந்துகொள்கிறார்கள். அன்றுமாலை அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தோம். போகிற வழியில் யானைக்கணவாய் (Elephant Pass) என்ற இடத்தில் கடலின் உப்பங்கழி மத்தியில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இப்பாலம்தான் யாழ்ப்பாணத்தைத் தென்னிலங்கையோடு இணைக்கிறது.

24-7-59 காலை யாழ்ப்பாணத்திலிருந்து 12 மைல் தொலைவிலுள்ள காங்கேசன்துறை என்ற கடற்கரையிலுள்ள நீர் ஊற்றில் ஸ்நானம் செய்தோம். இந்த நீர் ஊற்று கடற்கரையை ஒட்டியிருந்தாலும் தனியே ஆண்களும் பெண்களும் நீராட வசதியாக இரண்டு குளங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கடல் அலைகள் குறைவாக இருக்கும்போது இந்த ஊற்று ஒரு கால்வாய் வழியாக கடலில் சேர்கிறது. கடல் அலைகள் அதிகமாக இருக்கும்போது கடல்நீர் இந்த ஊற்றுநீரோடு சேருகிறது. இந்தக் குளங்களின் அடிமட்டம் நல்ல மணற்பாங்காக அமைந்து ஆழமும் 4 அடிக்குமேல் இல்லாததால் நீராடுபவர்க்கு அனுகூலமாக இருக்கிறது. நான்கு புறங்களிலும் படிக்கட்டுகள் கட்-

92 211, 458 459. 2.1

அனுராதபுரம் ஈசுருமுனியா புத்தர் கோயில்

158333

டப்பட்டிருக்கின்றன. அதிகாலை நீராடும் போது ஊற்றுநீர் இளஞ்சூடாக இருக்கிறது. இதற்கருகில் ஒரு விநாயகர் கோயிலும் சிவன் கோயிலும் தங்குவதற்கு வசதியான சில மடங்களும் இருக்கின்றன. இங்கிருந்து 2 மைல் தூரத்தில் மாவிட்டபுரம் என்ற ஊரில் ஒரு சிவன்கோயில் இருக்கிறது. இக்கோயில் பின்புறம் ஒரு கோபுரம் தமிழ் நாட்டிலுள்ள கோபுரத்தைப் போல் கட்டப்பெற்றிருக்கிறது. இதுதான் இலங்கையில் கட்டப்பெற்றிருக்கும் கோயில்களில் அழகான கோபுரம் என்று சொல்லலாம். சாபத்தால் குதிரை முகத்துடன் இருந்த ஒரு அரசகுமாரன் இறைவனைப் பூசித்து நரமுகம் பெற்ற தலம் என்றும், ஆதலால் மா (குதிரை) விட்டபுரம் என்ற பெயர் வழங்குவதாகவும் சொல்லப்படுகிறது. கோயிலின் உட்புறத்தில் இன்னும் சில திருப்பணிகள் நடைபெற இருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 8 மைல் தூரத்தில் நல்லூர்க்கந்தசாமி கோயில் என்ற முருகன் கோயில் இருக்கிறது. இந்த கோயிலில் வழிபாடு முறைகள் ஆகம விதிப்படி நடைபெறுகின்றன. அர்ச்சனைக்குச் சீட்டுகள் கொடுக்கப்படுகின்றன. பூஜைகள் எல்லாம் குறித்த நேரத்தில் நடைபெறுகின்றன. சிறப்பு வழிபாடுகளுக்கும் தனி ஏற்பாடுகள் செய்யப்பெறுகின்றன. பலபேர்கள் அருச்சனை செய்யும்போது ஒவ்வொருவரிடமும் சங்கல்பம் செய்துகொண்டு ஒரே அருச்சனையாகச் செய்வதால் வழிபடும் மக்களுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கிறது. இந்த கோயிலுக்கு சுமார் 2 மைலுக்கப்பால் செல்லக்கதிரேசன் கோயில் என்ற முருகன் ஆலயம் இருக்கிறது. அங்கும் ஆடிவேல் விழா சிறப்பாக நடத்தப்படுகிறது. அங்கு சுப்பிரமணியருக்கும், வள்ளியம்மைக்கும் தனிக்கோயில்கள் கட்டப்பெற்றிருக்கின்றன. கடலின் உப்பங்கழிகோயில்வரை இருக்கிறது. ஆனால் இந்த கோயிலுக்குள்ளிருக்கும் இறங்குகிணற்றில் நல்ல தண்ணீர் இருக்கிறது. இந்தக் கிணற்றுத் தண்ணீரைப் பாத்திரங்களில் எடுத்துவந்து வெளியில் ஸ்நானம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தை யொட்டிய ஒரு பகுதி திருநெல்வேலி என்று அழைக்கப்படுகிறது. யாழ்ப்பாணம் முக்கிய பகுதிக்கும் திருநெல்வேலிப் பகுதிக்கும் நடுவில் இராமநாதன் கல்லூரி இருக்கிறது. யாழ்ப்பாணத்தின் ஊருக்குள்ளேயே ஒரு சிவன் கோயிலும், மாரியம்மன் கோயிலும், வில்லூன்றி விநாயகர் என்ற கடற்கரைக் கோயிலும் இருக்கின்றன. யாழ்ப்பாணத்துக் கடற்கரையில் பழைய டச்சுக் கோட்டை யொன்றிருக்கிறது. யாழ்ப்பாணத்தை யடுத்து சில தீவுகள் இருக்கின்றன. இத்தீவுகளில் ஒன்றில் நாகபூஷணம் அம்மன் கோயில் என்ற ஒரு பெரிய ஆலயம் இருப்பதாகத் தெரிகிறது. அண்மையில் உள்நாட்டுக்குழப்பங்காரணமாக இக்கோயில் பழுதுபட்டதாகவும் மறுபடியும் கோயில் நல்ல முறையில் கோபுரத்துடன் கட்டப்பெற்றிருப்பதாகவும் தெரிகிறது. இதைப் பார்ப்பதென்றால் இதற்கென ஒருநாள் தங்கி நீராவிப் படகுகள் மூலம்சென்றுபார்த்துவரமுடியும். யாழ்ப்பாணத்துறைமுகத்தில் கப்பல்கள் கரை வரையில் வருவதில்லை. கொஞ்சதூரத்துக் கப்பால் நின்று படகுகள் மூலம்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் பாய்க் கட்டிக் கப்பல்கள் மூலம் போக்குவரத்து வசதிகள் நல்ல முறையில் பயன்படுத்தப் படுகின்றன.

அன்றிரவு யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாகிய **கொழும்புத்துறை** என்ற இடத்

தில் வசித்துவரும் யோக சுவாமி என்ற ஒரு பெரியாரைத் தரிசித்தோம். அவருடைய வயது சுமார் 90-க்கு மேலிருக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் நல்ல உடற்கட்டுடன் மலர்ந்த முகத்துடனும் அருள் நோக்குடனும் காணப்படுகிறார். அவருக்குக் கொடுக்கப்படும் காணிக்கைப் பொருள்களை வந்தவர்களுக்கே விநியோகம் செய்து அவர்களுடன் பங்கு கொள்வது ஒரு அற்புதமான காட்சி. அவர் உபதேசங்கள் எளிய முறையில் ஆண் பெண் பெரியோர் சிறியோர் எல்லோரும் உணரும் வகையில் அமைந்திருந்தது. இப்பெரியார் அதிகாலையில் எழுந்து சென்றால் இரவுதான் தங்குமிடத்துக்கு வருகிற வழக்கம். பகலில் அவர் சுற்றிக் கொண்டிருந்தாலும் யாரிடமும் அதிக நேரம் தங்குவதில்லையாம். இப்பெரியாருடைய ஆசியுடன் சிவத்தொண்டன் என்ற பெயருடன் ஒரு கழகம் நிறுவப் பெற்றிருக்கிறது. இதற்கு ஒரு தனிக் கட்டிடம் இருக்கிறது. நித்திய வழிபாடுகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுவதுடன் சிவத்தொண்டன் என்ற ஒரு பத்திரிகையும் வெளியிடப்பெறுகின்றது. இப்பெரியார் நாள்தோறும் ஒருமுறை இக்கட்டிடத்தருகே சென்று அதன் நடவடிக்கைகளைத் தெரிந்துகொண்டு போகிறது வழக்கமாக இருக்கிறது. ஆனால் அவர் அக்கட்டிடத்திற்குள் செல்வதில்லை. யாழ்ப்பாணம் செல்லும் ஒவ்வொருவரும் இவரைப் பார்க்கவேண்டுவது அவசியம். இப்பெரியார் தொடர்பினால் ஸ்ரீ லங்கையின் முன்னாள் கவர்னர்ஜெனரலாக இருந்த சோல்ஸ்பரி பிரபுவின் மகனும் இன்னொரு மேனாட்டறிஞரும் தவக்கோலம் பூண்டு துறவிகள்போல் பிட்சையெடுத்து உணவருந்தி ஆத்மீகத் துறையில் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இவர்கள்தான் கதிர்காம ஆடிவேல் விழாவின் போது கலந்து கொண்டார்கள். இதே போல் திருக்கோணமலை செல்பவர்கள் அப்பாதுரை செட்டியார் என்ற பெரியாரைக் காணவேண்டியது அவசியம்.

25-7-59 காலை புறப்பட்டு வேதாரண்யத் திருக்கோயிலின் நிர்வாகத்தில் சம்பந்தப்பட்ட பரணி ஆதீனம் என்னும் சங்கத்தாரைக் காணலாம் என்று பரணியாய் என்ற இடத்திற்குச் சென்றோம். ஆனால் அங்கு அவர்களைப் பற்றிய விவரம் ஒன்றும் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அங்குள்ள மாரியம்மன் கோயில் பூசாரி ஒருவர் அலைந்துவிட்டுவந்து அவர்கள் யாரும் ஊரில் இல்லையென்றும் சங்கத்திற்கெனத் தனிக் கட்டிடம் ஒன்றுமில்லையென்றும் சொல்லிவிட்டார். வேதாரண்ணியம் தேவஸ்தானம் சம்பந்தப்பட்ட சொத்துக்களைக் குறித்தும் தகவல் கொடுப்பார்கள் யாருமில்லை. வேதாரணியத்தில் தற்போது தருமகர்த்தராகப் பரணியாதீனத்தாரால் அனுப்பப்பட்டவர் தற்போது அங்கு சென்றிருக்கிறார். அவரையும் காணமுடியவில்லை.

அன்றுமாலை திருக்கேதீச்சுரம் சேர்ந்தோம. பிருகுமகரிஷி பூசித்த புராதன ஆலயம் இருந்த இடம் என்று ஒரு செங்கற் கட்டிடச் சின்னங்கள் உள்ள பள்ளத்தைக் காட்டுகிறார்கள். அங்கே ஒரு புராதன கிணறு ஒன்று இருப்பது பழைய கோயில் இருந்த நிலையமாக இந்த இடம் கருதப்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. இப்போதுள்ள ஆலயம் 1903-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றதாகத் தெரிகிறது. வெளிப்புற மதில், வாகனவீதி, கோபுரங்கள், உற்சவ மண்டபங்கள், தேரோடும் வீதி இவைகள் விரைவில் அமைக்கப் பெறும் என்று தெரிகிறது. நந்தனவனங்களும், மடங்கள், சத்திரங்கள், வேதபாடசாலை, தபோவனம் இவைகள் அமைக்கத் திட்டங்கள் இருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது கட்டப்பெற்றிருக்கும் ஆலயத் திருப்பணி 1952-ல் துவக்கப்பெற்று இப்போது அநேகமாக முற்றுப்பெறும் நிலையில் இருக்கிறது. கேது பூசித்த தலம் ஆதலால் இங்கு அவ்வப்போது பாம்புகள் காணப்படுவதாகச் சொல்கிறார்கள். இந்த கோயிலில் திருஞானசம்பந்தர் மடம் என்ற ஒரு மடமும், ஒரு நூல் நிலையமும், சில கட்டிடங்களும் இருக்கின்றன. கோயிலில் பரிசாரகம் செய்யும் பிராமணர் ஒரு வாடகை கார் வைத்திருக்கிறார். சுமார் 5 மைல் தொலைவிலுள்ள மன்னார் ரயில்வே ஸ்டேஷனிலிருந்தோ, 25 மைலுக் கப்பாலுள்ள தலைமன்னாரிலி

ருந்தோ தந்திமூலமாகத் தகவல் கொடுத்தால் இவர் உடனே காரைக்கொண்டு போய் யாத்திரீகர்களைக் கூட்டிவர ஏற்பாடு செய்கிறார். திருஞானசம்பந்தர் மடத்தில் உணவுக்கும் தங்குவதற்கும் வசதிகள் செய்யப் பெற்றிருக்கின்றன. சம்பந்தரும் சுந்தரரும் தமிழ் நாட்டிலிருந்தே இத் தலத்திலுள்ள இறைவனைப் பாடியிருக்கிறார்கள். சம்பந்தர் தேவாரத்தில் மாதோட்ட என்றும் குறிப்பிடப்படுகிறது. அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகத்தில் 'பூதியணிபொன்னிறத்தர் பூணூலர் பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர் கேசீச்சரம் மேவினார்' என்ற பகுதியில் கேதீச்சரம் குறிப்பிடக் காண்கிறோம். சுந்தரர் தேவாரத்தில் 'கடல் மாதோட்ட நன்னகரம்' என்று குறிப்பிடப்படுவதால் இது அக்காலத்தில் கடற்கரையில் இருந்ததாகத் தெரிகிறது. தேவாரத்தில் 'பாலாவியின் கரையில் கேதீச்சரம்' என்று சம்பந்தரும், 'பாலாவியின் கரைமேல்' என்று சுந்தரர் பாடலிலும் குறிப்பிடப்பெறும் பாலாவி நதி இப்போது காணப்படவில்லை. இப்பொழுது கட்டப்பெற்றிருக்கும் கௌரியம்மை சமேத கேதீச்சுரர் ஆலயத்திலும், திருக்கோணமலை கோணீஸ்வரர் ஆலயத்திலும் தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டுக்கள் அமைக்கப்படும் என்று தெரிகிறது. 'தொண்டர் நாள்தொறும் துதிசெய்ய அருள்செய் கேதீச்சரமது தானே' என்பது சம்பந்தர் தேவாரம். தொண்டர் அனைவரும் ஈழநாட்டுத் தலங்களான திருக்கோணமலையையும் திருக்கேதீச்சரத்தையும் கண்டுகளித்து இவ்விருபுராதீன ஆலயங்களின் திருப்பணிக்கும் வழிபாட்டு வசதிகளுக்கும் தம்மால் இயன்ற உதவிசெய்ய வேண்டுவது மிகவும் அவசியம்.

26-7-59 காலை தலைமன்னாரில் கப்பல் ஏறி தனுஷ்கோடி சேர்ந்து, ரயில் மார்க்கம் 27-7-59 காலை சென்னை திரும்பினோம்.

அ. உத்தண்டராமன்

'திருக்கோயில்' பற்றிய சிறப்புரை

New Journal

I am indeed very happy to learn that the Board is bringing out a Tamil-Journal about our ancient temples. I have often thought that nothing would do more extensive good than by carrying the spiritual message of our ancient Hindu culture and civilisation not only to countrymen but also to the people of the world. In the present context of the world-affairs, which are in no way satisfactory, a journal of this type is very welcome, and I am sure it will do great good to the nation at large. I wish the journal all success.

K. S. RATNAM, 18—11—58.
(S. KANNADIPUTHUR)

திருப்புன்கூர் திரு சொக்கநாயகி அம்பாள் சமேத திரு சிவலோக நாதசுவாமி தெய்வ நிலையத்தின், திருநாளைப்போவார் நாயனார் நூதன ஆலய அஷ்டபந்தன கும்பாபிஷேகம் 13-9-59 தேதி நடைபெற்றது.

வலிவலம், மனத்துணை நாதசுவாமி திருக்கோயில் 10-9-59 இரவு 7-மணிக்கு வாரபழிபாட்டுக் கழகத் துவக்கவிழா, வலிவலம் தேசிகர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு ஆர். சுப்பிரமணிய பிள்ளை, பி. ஏ. எல். டி., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மணக்குடி தலைமையாசிரியர் திரு கே. சுப்பிரமணிய அய்யர் பி. ஏ. எல். டி., அவர்கள் வழிபாட்டைத் துவக்கிவைத்தார்கள். பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார், தேசிகர் உயர்நிலைப்பள்ளி முதலாசிரியர் வை. பக்கிரிசாமிச் செட்டியார், பி. ஏ. (ஆனர்ஸ்) பி. ஈடி., ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். ஆலய மேலாளர் திரு ஜி. வெங்கடாச்சாரியார் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

'திருக்கோயில்' பற்றிய சிறப்புரைகள்

வீரகேசரி, 15-10-58

சென்னை அரசாங்கத்தின் கீழ் உள்ள இந்து சமய அறநிலைய நிர்வாகத்துறை ஆணையர் அலுவலகத்தினின்றும், அரசாங்கத்தின் அனுமதியுடன் 'திருக்கோயில்' என்னும் இத் திங்கள் இதழ் வெளிவந்துள்ளது. 'நம் தேசத்தில் 275 தேவாரப் பாடல்கள் பெற்ற தலங்களும், 108 திவ்யப் பிரபந்தங்களால் மங்களாசாசனம் பெற்ற திருப்பதிகளும் உள்ளன. அவற்றைப் பற்றிய குறிப்புக்களும், மற்றும் சமய சம்பந்தமான கட்டுரைகளும் வரும் இதழ்களில் வெளியிடப்பெறும்' என்று 'திருக்கோயில்' என்னும் முகப்புக் கட்டுரையில் திரு. அ. உத்தண்டராமன் குறிப்பிட்டிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது.

காந்தி பிறந்தநாளில் பிறந்துள்ள இந்த இதழில் பொருத்தமாக ஒவ்வொரு பக்கத்தின் அடிப்பாகத்தில் மகாத்மாவின் மணிமொழிகளை 'இழைத்தி'ருக்கிறார்கள். சமயம், தலங்கள், பக்தர்கள், புனித தமிழ்நாட்டு நதி (காவிரி) ஆகியவைபற்றி தனிக்கட்டுரைகளை வெளியிட்டு இவ்விதழை மணக்க வைத்திருக்கிறார்கள். சைவம், வைஷ்ணம் பற்றியும், திருத்தலங்களாகிய சிதம்பரம், திருவரங்கம், பழனி, கன்யாகுமரி, திருக்குற்றாலம் முதலியவைகளைப்பற்றியும், பக்தர்களாகிய திருஞானசம்பந்தர், நம்மாழ்வார், அருணகிரிநாதர் ஆகியவர்கள் பற்றியும் அரிய தகவல்கள் அடங்கிய கட்டுரைகளை இந்த இதழில் படித்துப் பயனடையலாம். கன்னியாகுமரியம்மன், நடராஜர், ஸ்ரீரங்கநாதர் படங்களுடனும், திருக்கோயிலின் கம்பீரமான கோபுரப் படமும் இந்த இதழை அலங்கரிக்கின்றன. மொத்தத்தில் 'திருக்கோயில்' வெளியீடு ஒரு நல்ல பணி; பாராட்டுகிறோம்.

—(சாது)

* * *

சுதேசமித்திரன், 18-10-58

தெய்வ பக்தியும், சமயப் பண்பாடும் நிறைந்து விளங்கும் நமது தமிழ் நாட்டில் திருக்கோயில்கள் அவற்றுக்கு ஆதாரமான அடிப்படையான சிறந்த அம்சங்களாகத் திகழ்கின்றன. தென்னாட்டுத் திருக்கோயில்களில் பலவற்றின் நிர்வாகத்தை மேற்கொண்டுள்ள நமது சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்பு இலாகாவினர், கோயில்களில் அறப்பணிகள் சிறப்புற நடைபெறவும், மக்களிடையே பக்தி உணர்வு, சமயப்பற்று, பொதுவான கலாசாரச் சிறப்புகள் ஆகியன பெருகவும் பல வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றனர். அவற்றிற்குச் சிகரம் வைத்தாற்போல் சென்ற அக்டோபர் 2-ந்தேதி முதல் 'திருக்கோயில்' என்ற பெயரில் ஒரு மாத வெளியீட்டைத் தொடங்கியுள்ளனர். 'திருக்கோயிலி'ன் முதல் இதழில் ஜி. கலியாணம் (இதன் ஆசிரியர்), திரு. க. வச்சிரவேல் முதலியார், திரு. டி. ஏ. சீனிவாசாச்சாரியார் ஆகியோரது கட்டுரைகள் திகழ்கின்றன. சிதம்பரம், திருவரங்கம், பழநி, கன்யாகுமரி, முதலிய தலங்களைப்பற்றிய பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. தென்திசையின் எல்லைத் தெய்வம் கன்யாகுமரி, ஆடும் கூத்தன் நடராசன், பள்ளிகொண்ட பெருமாள் அரங்கநாதன் ஆகிய தெய்வங்களின் திருவுருவங்கள் புகைப்படவடிவில் மின்னுகின்றன. ஆழ்வார்கள், நாயன்மார்கள், பழந்தமிழ்ப் புலவர்கள் பலரின் பாடல்கள் முத்து சிதறிக் கிடக்கிறாற்போல் ஆங்காங்கே தென்படுகின்றன.

இந்த முயற்சியைப் பாராட்டி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகளும், வானமாமலை மடாதிபதி ஸ்ரீ ராமானுஜ ஜீயரும், தருமபுரம் ஆதீன கர்த்தர், திருப்பனந்தாள்மடாதிபதி, பிரதம நீதிபதி கனம் பி. வி. ராஜமன்னார், முதலமைச்சர், ஸ்ரீ கே. காமராஜ், அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் ஆகியோரும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர். 'திருக்கோயில்' சிறப்பான சஞ்சிகை.

— வை. க.

* * *

கல்கி, 16-11-58

சென்னை மாநில அறநிலையப் பாதுகாப்புப் பகுதியிலிருந்து, சென்னை அரசாங்கத்

தின் அனுமதியின் பேரில், மாதந்தோறும் வெளியிடப்படும் புதுப் பத்திரிகை இத் "திருக்கோயில்". அக்டோபர் மாதம் 2-ந்தேதி காந்தி ஜயந்தியன்று இதன் முதல் இதழ் வெளிவந்துள்ளது. நம் நாட்டில் 275 தேவாரப் பாடல்கள் பெற்ற தலங்களும் 108 திவ்யப் பிரபந்தங்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருப்பதிகளும் உள்ளன. இவை பற்றிய குறிப்புகளும், சமயசம்பந்தமான கட்டுரைகளும், திருக்கோயில் வழிபாடு சம்பந்தமான பல விஷயங்களும் திருக்கோயிலில் இடம்பெறும் என்று முதல் இதழிலிருந்து தெரிகிறது. பத்திரிகை உலகில் இது ஒரு புது முயற்சி. நாத்திகம் மேலோங்கி மக்கள் மனத்தைக் குழப்பி வரும் இந்தக் காலத்தில் அறத்தை வளர்க்கவும் கடவுள் வழிபாட்டை வேரூன்றச்செய்யவும், இம்மாதிரி ஒருமுயற்சி வேண்டியதே.முதல் இதழில் வெளிவந்துள்ள சிறப்பான கட்டுரைகளையும், இதில் அடங்கியுள்ள படங்களையும், உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டிருப்பதையும் பார்த்ததிலிருந்து மற்ற இதழ்களும் இதேபோல் உயர்தரமான விஷயங்களடங்கி யிருந்தால், இப்பத்திரிகையின் உபயோகம் எல்லையற்றிருக்கும். ஆஸ்திகர்கள் இம்முயற்சியைப்போற்றி இப்பத்திரிகைக்கு ஆதரவளிப்பர்.

* * *

தினகரன், 30-11-58

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத்துறை வெளியீடு. திங்கள் வெளியீடு. ஆண்டுக்கையொப்பம் ரூபாய் பத்து.

இந்து சமயத்தில் திருக்கோயில்களும் ஆங்குள்ள மூர்த்திகளும் தீர்த்தங்களும் முக்கியத்துவம் வாய்ந்தன. தவக்கோலத்தில் இருக்கும் கன்யாகுமரியம்மனின் படத்தை முகப்பில் கொண்டுள்ள இவ்விதழில் இந்து சமயத்தின் இருபெரும் பிரிவுகளான சைவம், வைணவம் ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்களை விளக்கும் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. அத்துடன் சிதம்பரம், திருவரங்கம், பழநி, கன்யாகுமரி ஆகியதலங்களைப் பற்றிய குறிப்புக்களும் எளிய தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. திருஞான சம்பந்தர், நம்மாழ்வார், அருணகிரிநாதர் ஆசியோர்பற்றிய குறிப்புக்களும், காவிரி, திருக்குற்றாலம் பற்றிய கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

பத்திரிகை உலகில் **திருக்கோயில்** ஒரு புது முயற்சி. ஆஸ்திகம் அழிந்து நாஸ்திகம் தலையெடுக்கும் இந்நாளில் இது வரவேற்க வேண்டிய ஒன்றே.

—சபா.

* * *

செந்தமிழ்ச் செல்வி, நவம்பர் 1958

இஃதோர் அரிய பெரிய செந்தமிழ்த் திங்கள் வெளியீடாகும். இது "சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத்துறை வெளியீடாக" வருகின்றது. இதன் ஆசிரியர் திருவாளர் ஜி. கலியாணம் பிள்ளை, எம். ஏ. (இராமநாதபுரம் மாவட்டத்தில் தாசில்தாராயிருந்து ஓய்வுபெற்றுள்ளவர்) அவர்களாவர்.

நாடும், மொழியும், நன்னெறியும் பீடுறத் தொன்மையினும் சிறக்க ஓங்கி, மாந்தரும் நல்லொழுக்கினராய் உய்யுநெறி கடைப்பிடித்து ஒற்றுமையுடன் வாழ்தற்கு இது போன்ற தலைசிறந்த வெளியீடு என்றும் இன்றியமையாததாகும். இதன்கண் உலகிற்கு உடலுயிராய், இருகண்ணுய்ப், பெருநெறியாய்த் திகழும் "சைவம் வைணவம்" என்னும் ஒப்பில் சமயங்களின் உண்மைகள் அவ்வத்துறை வல்லாராகிய ஆன்ருேர் பலரால் செவ்வையுற அகச்சான்று புறச்சான்றுகளுடன் எழுதப்பெற்ற கட்டுரைகள் பல, இதன்கண் தொடர்ந்து வெளிவரும்.

சிறப்பாகச் சிதம்பரம், திருவரங்கம், பழநி, கன்யாகுமரி முதலிய மாதவஞ்செய் தென்றமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் திருவரலாறுகளும், ஆண்டுள்ள தெய்வப் படிமங்களின் சிறப்பும், தத்துவவுண்மைகளும், முடிமன்னர் முதலாகத் தெய்வப் பற்றுமிக்க செல்வ அடியார்களும் செய்துள்ள திருக்கோயிற்றிருப்பணி, திருக்கோபுரம் நாள்விழா, சிறப்புவிழாவுக்குரிய முற்றூட்டுக்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் முதலியனவும் செந்தமிழ்மறைகள், திருக்கோயில்களில் சீர் சிறப்புடன் ஓதற்கு வேண்டும் முறைமைகள் அதற்காக வேண்டும் கல்வெட்டுக்கள் கால வரையறையுடன் வெளிவந்துள்ளன.

திருஞான சம்பந்தர், நம்மாழ்வார், அருணகிரிநாதர் ஆகிய மெய்யடியார்களின்

திருவரலாறுகளும், காவிரி, திருக்குற்றாலக் காட்சி முதலியவற்றின் திருவரலாறுகளும் சிறப்புற வந்துள்ளன. இம் மெய்யடியார்கள் பாடியருளிய சிறந்த பாடல்களிற் சிலவும், அவற்றின் மெய்ம்மைக் குறிப்புக்களும் அழகுற அமைந்துள்ளன.

முன்னாளில் கவியரங்கேறிய பாண்டியர் போன்று இந்நாள் அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர் சைவத் திரு அ. உத்தண்டராம பிள்ளை, பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ்., அவர்கள் நுண்மாண் நுழைபுலச்செல்வராய்த் திருவருள் பற்றுமிக்கவராய் அழகுற எழுதியுள்ள "திருக்கோயில்" கட்டுரையும் இன்றியமையாத செந்தமிழ்மறை மேற்கோள்களுடன் திட்பநுட்பஞ் செறியத் திகழ்கின்றது.

"திருக்கோயில் திருப்பணிகள்" என்னும் தலைப்பில் செங்கற்பட்டு மாவட்டம் முதலாகக் கர்னாடகம் ஈருய்ப்பன்னிரு மாவட்டங்களிலுள்ள இருபத்தெட்டுத் திருக்கோயில்களின் திருப்பணிக்காக 55-56 ஆண்டுகளில் அறநிலையப் பாதுகாப்புத்துறையார் வழங்கிய வெண்பொற்காசுகள் இருநூறாயிரம் எனத்தெரிகின்றது. இதுபோற் பின்னுள்ள ஆண்டுகளிற் செய்துள்ளமையும் பின் வெளிவரும் எனவுந் தெரிகின்றது.

இம்மலரினைச் சென்னை மாநில ஆளுநர், உயர்நீதி மன்றநடுவர், முதலமைச்சர், உள்நாட்டமைச்சர், மடாதிபதிகள் முதலிய ஆன்றோர் பலரும் மனமார வாழ்த்திய வாழ்த்துரைகளும் இதன்கண் காணப்படுகின்றன. வானளாவிய அழகிய திருக்கோபுரம், கன்யாகுமரி அம்மன், கூத்தப்பெருமான், திருவரங்கநாதர், தென்குமரி பகவதியம்மன் திருக்கோயில் ஆகிய தெய்வப் பெற்றிவாய்ந்த அழகிய திருவுருவங்களின் திருப்படங்கள் உயர்ந்த நல்ல வழுவழுப்பான தாளில் கண்கவர் வனப்பான பல நிறங்களில் அச்சிட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவையனைத்திற்கும் மணிமுடியாய் ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் காந்தியடிகளின் பொன்மொழிகள் சிலவும் பலவும் சிறந்து திகழ்கின்றன. அவை உண்மையுடன் ஓதி ஒழுகும் தன்மைய.

இவ் வெளியீடு பொதுவாகச் செந்தமிழ் மாந்தர்க்கும் சிறப்பாகச் செந்நெறியாகிய சைவ வைணவ சமயமெய்யன்பர்கட்கும் நல்வழி காட்டும் விளக்கமாய்த் திகழ்கின்றது. திருக்கோயில் அறங்காவலர்கட்கும், ஆணை நிறைவேற்றற் பணியாளர்கட்கும், குருக்கண்மார்கட்கும், ஏனைத்திருப்பணியாளர்கட்கும், கும்பிடவரும் மெய்யன்பர்கள் அனைவர்கட்கும் தத்தங் கடமைகளைச் சரிவரச் செய்தற்கும், தெய்வ அருள் பெறுதற்கும், திருக்கோயிலுண்மை தெளிந்துய்தற்கும் இஃதொரு கருவூலமாகத் திகழ்கின்றது. இதனை அனைவர்களும் வாங்கியும் வாங்குவித்தும் ஆதரிப்பார்களாக. இது நாளும் வளர்ந்து நலம்பெற நாயகனடியை வழுத்தி வாழ்த்துகின்றோம்.

* * *

சித்தாந்தம் அக்டோபர் 1958

"திருக்கோயில்" இஃது ஒரு திங்கள் இதழ். காந்தியடிகளின் பிறந்த நாள் விழா (2-10-58) அன்று முதன் முதலாகத்தொடங்கப்பெற்று, சென்னை அரசியலாரின் அறநிலையப் பாதுகாப்புத் துறையின் வாயிலாக வெளிவருவது. நமது சைவ சித்தாந்த மகா சமாஜத்துடன் 30 ஆண்டுகளாகத் தொடர்புடைய பெருந்தகையாரும், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திரு வி. கலியாணசுந்தரனார் போன்ற சான்றோர்கள்பால் நெருங்கிப் பழகிச் சமயப் பற்றும் மொழியுணர்வும் சமரச ஞானமும் மிக்கு விளங்குபவரும் ஆகிய திரு ஜி. கலியாணம் பிள்ளை, எம். ஏ., டி. எக்கான், அவர்கள் இதன் ஆசிரியராகப் பணியேற்றுள்ளனர். மிகவும் தகுதி வாய்ந்த பொருத்தம் அமைந்த ஆசிரியரைப் பெற்றுள்ள "திருக்கோயிலி"ன் முதல் இதழானது தக்க பல பெரியோர்களின் வாழ்த்துச் செய்திகளுடன், திருக்கோயில் சைவம் வைணவம் சிதம்பரம் திருவரங்கம் பழநி கன்யாகுமரி திருஞான சம்பந்தர் நம்மாழ்வார் காவிரி திருக்குற்றாலக் காட்சி அருணகிரிநாதர் என்னும் சிறந்த பொருட்செறிவு மிகுந்த இலக்கியக் கட்டுரைகள் பலவற்றைக்கொண்டு ஒளி பரப்பி மிளிர்கின்றது. ஒவ்வொரு பக்கத்திலும் காந்தியடிகளின் பொருள் பொதிந்த பொன்மொழிகள் தரப்பெற்றுள்ளமை இவ்விதழ்க்குத் தனிப்பெருஞ் சிறப்பை அளிக்கின்றது. இதழின் முன்புறத்தினைத் திருவண்ணாமலைக் கோயிற் கோபுரமும், பின்புறத்தினைத் தென்குமரி பகவதியம்மன் திருக்கோயிற் காட்சியும், உட்புறத்தினைக் கன்யா

குமரியம்மன் நடராஜர் ஸ்ரீரங்கநாதர் திருவுருவங்களும் கண்ணுடியிடத் தக்கமுறையிற் கவின் சிறந்துஅணி செய்கின்றன. பத்திரிகையுலகிற் புதிய முயற்சியாகப் பூத்துள்ள 'திருக்கோயில்' மலர், அறநிலையங்களின் ஆக்கத்தினைக் குறிக்கோளாகக் கொண்டு சமயம் தத்துவம் இலக்கியம் கலாசாரம் முதலிய பல துறைகளிலும் சிறந்த பெருந்தொண்டுகளை ஆற்றிவரும் என அறிந்து பெரிதும் மகிழ்ந்து இன்புறுகின்றோம். நல்ல தாளில் மிகவும் அழகாக டெம்மி அளவில் 48 பக்கங்கள் கொண்டுள்ள இதன் ஆண்டுக் கையொப்பம் ரூபாய் பத்து (10). சமய உணர்வும் பற்றும் மிக்க தக்கவர்கள் அனைவரும் இச்சிரிய இதழின் வளர்ச்சிக்குப் பேராதரவு புரியக் கடமைப்பட்டவர்களாவர்கள் எனப் பெரிதும் வற்புறுத்துகின்றோம். சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர்கள், "திருக்கோயில், அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம், மவுண்ட்ரோடு, சென்னை-2 என்னும் முகவரிக்குத் தம் சந்தாத்தொகையை அனுப்புக.

நல்ல அறம்சமயம் நன்றுயர்ந்த
மெய்யுணர்வு
எல்லையிலா இன்கலைகள் என்பவெலாம்
தான்பரப்பச்
செந்தமிழில் தோன்றும் **திருக்கோயில்**
சீர்இதழ்தான்
சந்தமுற வாழ்க தழைத்து.

—முருகவேள்.

* * *

தவத் திரு, சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர், கோவை தேதி 29-10-58.

இன்று "திருக்கோயில்" இதழ் கிடைக்கப்பெற்றேன். பல ஆண்டுகளாக நடைபெற்றிருக்க வேண்டிய ஒன்று தங்கள் நன் முயற்சியால் தற்போதாவது வெளிவருவது கண்டு மகிழ்ச்சி......

இத்திங்களிதழுக்கு செம்மனச் செல்வர் திரு ஜி. கலியாணம் அவர்கள் ஆசிரியராக இருப்பது பெரிதும் பாராட்டற்குரியது. "திருக்கோயில்" அகக் கோயில் விளக்காக, அறவாழ்க்கைத் தொகுப்பாக, பழமை பாராட்டும் சுவடியாக, நாளும் வளரச் சாந்தலிங்கப் பெருமான் இணையடிகளை வேண்டுகின்றேன்.

இராமசாமியடிகள்.

* * *

கௌமார மடாலயம், சிரவணபுரம், கோவை. 3-11-59.

தங்கள் முயற்சியால் அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தினின்றும் வெளிவரும் "திருக்கோயில்" சைவ வைணவப் பொதுநோக்குடன், சமயமும் தமிழும் தழைத்தினிதோங்கத் தமிழ் நாட்டுத் திருக்கோயில் திருவுருவம் ஆகிய படங்களுடன் வெளிவருவது காலத்துக்கேற்ற சிறந்த தொண்டாகும்.

மக்கள் சமுதாயத்தில் பெரிதும் இடம் பெறும்படி அரிய கருத்துக்களை எடுத்துக் காட்டி, "திருக்கோயில்" சிறந்து விளங்கத் தண்டமிழ் முருகன்தாண் மலர்களை இறைஞ்சுகின்றோம்.

—சுந்தரம்

* * *

ஸ்ரீ சபாநாயகர் கோயில், சிதம்பரம், 12-12-58.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில் தற்கால செக்ரடரி கே. எஸ். கல்யாணசாமி தீக்ஷிதர் எழுதிக்கொண்டது.

இறைவனருட் துணைகொண்டு தங்களது பெருமுயற்சியால் மிகவும் உயர்ந்த முறையில் பொன்னுன வெளியீடு (திருக்கோயில்) என்ற மாத வெளியீடு இவிடம் ஸ்ரீ தில்லையம்மன் கோயில் மானேஜர் அவர்களால் பார்க்கப் பெற்றேன். இன்றைய உலகத்திற்கு, உண்மையும் நிறைந்த ஆராய்ச்சியுமுள்ள, இந்த பேருபகாரம் மிக மிக அவசியம். நிற்க, சிதம்பரம், என்ற தலைப்பில் சிதம்பரத்தைப்பற்றி இவ்வளவு சுருக்கத்தில், நிறைந்த உண்மை நிரம்பிய விஷயமாக எதிலும் இதுவரை வெளிவந்ததில்லை. ஒவ்வொன்றும் அப்படியே. நடராஜமூர்த்தி அருள் உங்களுக்கும் மேற்படி வெளியீட்டுக்கும் ஏனையோர்கட்கும் நிறைந்திருக்குமாகப் பிரார்த்திக்கின்றேன்.

கே. எஸ். கல்யாணசாமி தீக்ஷிதர்

* * *

நமது தேசம் சுயராஜ்யம் பெற்ற பிறகு நாம் பெற்ற பேறுகளில் சென்னை இந்துமத

அறநிலைய இலாகா என்பதை நமது அரசாட்சியார் திருத்தி அமைத்ததாகும். இதனுல் நமது நாட்டில் உள்ள பல கோயில்கள் மடங்கள், முதலியன மிகவும் சீர்திருத்தப்பட்டன என்பது நிச்சயம். நமது இந்து மதத்தின் கொள்கைகளை நம்மவர் நன்கு அறியும் பொருட்டுப் பிரசாரம்செய்யும்மார்க்கங்களில் தற்காலம் இவர்கள் "திருக்கோயில்" என்னும் ஒரு மாதாந்திர பத்திரிகையை அச்சிட்டு வருவதாகும். இதை ஆரம்பித்தவர் இந்த போர்டின் ஆணையராய் இருக்கும் திரு அ. உத்தண்டராம பிள்ளை அவர்கள், பி. ஏ. பி. எல்., ஐ.ஏ.எஸ்., என்பவர் ஆவார். இந்த பத்திரிகை வெளிவருவதற்கு மூலகாரணமாய் இருந்தவர் அறநிலையப் பாதுகாப்பு மந்திரி கனம் எம். பக்தவத்சல முதலியார் அவர்கள். இந்த மாதாந்திர பத்திரிகையின் மூலமாக நமது நாட்டில் உள்ள ஆலயங்களில் பலருக்குத் தெரியாத விசேஷமான சமாச்சாரங்கள் வெளியாக்கப்பட்டு வருகின்றன. தினம் கோயில்களுக்கு போய் பூஜித்துவரும் பக்தர்கள்கூட அறியாத அரிய பெரிய விசேஷங்கள் எல்லோரும் அறியும்படி இப்பத்திரிகை நமது மதத்திற்கு பேருதவியைச் செய்து வருகின்றது.

இப்பத்திரிகையில் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஓர் சிறப்பு என்னவென்றால், சைவம், வைணவம் முதலிய பேதங்கள் இன்றி எல்லா கோயில்களைப்பற்றியும்எழுதி வருவதாகும். ஒவ்வொரு மாதப் பத்திரிகையிலும் ஒரு சிவாலயம் ஒரு விஷ்ணு ஆலயம் ஒரு முருகர் கோயிலில் ஒரு தேவி கோயில் விவரங்கள் மிகவும் அழகாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டு வருகின்றன. இம் மாதாந்திர பத்திரிகை பக்தர்கள் நமது நாட்டில் உள்ள ஆலயங்களைப் பார்க்க யாத்திரை செய்யும்போது மிகவும் பிரயோசனப்படும் என்பதற்கு ஐயம் இல்லை. இப்பத்திரிகையைப்போல் நமது பரதபூமியில் உள்ளஎல்லா பிரிவுகளிலும் ஆங்காங்குள்ள திருக்கோயில்களைப்பற்றி அச்சிட்டு வெளியிடுவார்களாயின் நமது இந்து மதத்தின் அருமையும்பெருமையும் நமது பரத பூமியில் உள்ள பக்த சிரோமணிகளுக்கு செய்த பெரும் தொண்டாகும் என்பதற்கு சிறிதும் ஐயம் இல்லை.

—ப. சம்பந்தம்

(பம்மல் சம்பந்தம்)

****

திருசெந்தூர், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில், ஆவணித் திருவிழா 24-8-59-ல் ஆரம்பமாகி 4-9-59-ல் முடிவுற்றது.

திருச்சிராப்பள்ளி தாயுமான சுவாமி மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் திருமுறைத் திருவிழா 9-9-59 முதல் 14-9-59-வரை ஸ்ரீ தாயுமான சுவாமி தேவஸ்தானத்தின் ஆதரவிலும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் ஆதரவிலும், மற்றும் பலரின் ஆதரவிலும் சிறப்பாக நடைபெற்றது.

குற்ருலம், ஸ்ரீ திருக்குற்ருல நாதசுவாமி கோயிலின் ஆதரவில், திருக்குற்ருல நாதர் கோயில் திரிகூட மண்டபத்தில் 30-9-59 முடிய தினந்தோறும் மாலை 6-மணி முதல் 8-மணி வரை இலஞ்சி தவத்திரு ஐயாறு அடிகள் திருமுறை விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

புதுக்கோட்டை. ஸ்ரீ வேதநாயகி சமேத ஸ்ரீ சாந்தநாத சுவாமிக்கும் கணேச சுப்பிரமணிய சண்டேசாதி மூர்த்திகளுக்கும், ஸ்ரீ அரியநாச்சி அம்மனுக்கும் 9-9-59 புதன்கிழமை காலை 10-30 மணிக்குமேல் 11-30-மணிக்குள் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

15-9-59 செவ்வாய்க்கிழமை காலை 10-30—12-மணிக்குள் இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம், திருச்சுழியல், ஸ்ரீ துணைமாலை அம்பாள் உடன்கூடிய திருமேனிநாத சுவாமி ஆலயம், சுவாமி சந்நிதி முன் ஆறுகால் மண்டபத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்துள்ள தேவாரத் திருப்பதிகம் பொறிக்கப்பெற்ற கல்வெட்டை சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு அ. உத்தண்டராம பிள்ளை, ஐ. ஏ. எஸ். அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சைவம்

திரு. K. வச்சிரவேலு முதலியார் B.A., L.T.,

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

(5) முதல்வன் இயற்றும் தொழில்

முதல்வன் சத்தியோடு இயைந்து நின்று சங்கற்ப மாத்திரையால் (அருள் நினைவினாலே) உலகுயிர்களைத் தொழிற்படுத்துவன் என்பது மேலே கூறப்பட்டது. அத்தொழிற்பாட்டை ஐந்து வகையாக உணர்ந்து உளம் பற்றவேண்டும் என்பது சைவ நூற்றுணிபு. ஆகவே முதல்வன் தொழில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல். அருளல் என ஐந்தாக வைத்து ஓதப்படும். இவை வடமொழியில் முறையே சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் எனக் கூறப்படும்.

படைத்தலாவது உடம்பு, மனம் முதலிய கருவி, உலகம், நுகர்ச்சிப் பொருள் (தனு கரண புவனபோகம்) என்பவற்றை அவ்வவற்றின் முதற்காரணத்தினின்றும் தோன்றச் செய்தல். **காத்தல்** அவ்வாறு தோன்றிய பொருள்களை உயிர்களுக்கு உபகாரப்பட வைத்தல். **அழித்தலாவது** அங்ஙனம் உபகாரப்பட்ட பொருள்களை மீளவும் அவ்வவற்றின் முதற்காரண ரூபத்தில் மறையச் செய்தல். இம்மூன்று தொழில்களும் அறிவில் பொருள்களாய்ப் புடைபெயர்ச்சியுள்ள சடப்பொருள்களில் நிகழ்வன. (சடம்-அறிவில்லது). சடப்பொருள்கள் எல்லாவற்றுக்கும் முடிந்த ஆதிமுதற்காரணமாயுள்ள பொருளே மாயை எனப்படும். **"மாயையைப் பிரகிருதி என அறிக; மாயையை யுடையவனை மகேசுவரன்** என அறிக" என்னும் சுவேதாச்சுவர சுருதி இதற்குப் பிரமாணம். இங்குப் **பிரகிருதி** என்றது முதற்காரணம் என்னும் பொருளை உடையது.

இனி, **மறைத்தலாவது** உயிர்கள் வீடு பெறுந் தகுதியைப் பெறுதற் பொருட்டு அவற்றைத் தளைகளின் வழிச்செல்லும்படி நடத்துதல். இதனால் உயிர்கள் முதல்வனது உபகாரத்தைப் (அறியாதே) பெற்று, பாச சத்தி மெலிய அறிவு வளர்ச்சியுற்று வரும். இக் கருத்தைப் **"பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே"** என்னுந் திருவாசகத்தால் உணரலாம். இங்குப் பாரித்தல்—வளர்த்தல், அஃதாவது அறிவை வளர்த்து வருதல். **அருளலாவது** பக்குவமுதிர்ச்சி எய்திய ஆன்மாக்களைப் பாசங்களிலிருந்து விடுதலைசெய்து அவை, தன்னைத் தலைப்பட்டு உணர்ந்து பேரின்பம் பெற்றுய்யச் செய்தல். மறைத்தல், அருளல் என்னும் இரண்டும் உயிரின் கண் நிகழ்வன. மறைத்தல் என்பது பாசங்களுக்கே உள்ள செயல்; ஆயினும், நோயுற்ற ஒருவனுக்கு மருத்துவன் அந்நோயின் தன்மைக்கு ஏற்றபடி மருந்து முதலியவற்றைக் கொடுத்து அடைவே நீக்குதல் போல, முதல்வன் மலசத்திகளை உருவு திரியச்செய்து உயிர்களை அறிவாற்றல்களில் சிறக்குமாறு வளர்த்து வருதல்பற்றி, முதல்வனது இவ்வுபகாரம் மறைத்தல் என உபசார வழக்குப் பற்றிக் கூறப்படும்.

(6) முத்தொழில், ஐந்தொழில், இருதொழில் என்பவற்றின் கருத்தொருமை:

நூல்கள் முதல்வன் தொழிலை முந்தொழில் எனவும், இருதொழில் எனவும் சிற்சில இடங்களில் கூறும். மேலே விளக்கிய ஐந்தொழில்களில் **மறைத்தல்** என்பது காத்தல் என்னும் தொழில் நிகழும்போது உயிர்களிடத்து உடன் நிகழ்வது. ஆதலின், அது **காத்தலின்கண் அடங்கும்.** **அருளல்** என்பது மலசத்திகளினின்று விடுபட்ட சுத்த ஆன்மாக்களைத் தன்கண் அடங்கி நின்று இன்புறச் செய்தலே ஆகும். "சேர்வார் தாமே **தானாகச்** செயுமவன்" என்பது ஆளுடைய

பிள்ளையார் திருப்பாட்டு. ஆதலினால், **அருளல்** என்பது **அழித்தலில்** அடங்கும். அடங்குதல்பற்றி, மெய்ந்நூல்கள் முதல்வன் தொழிலைப் படைத்தல், காத்தல், அழித்தல் என மூன்றாகவே வைத்துங் கூறும். **"படைத்துங் காத்துங் கரந்தும் விளையாடி"** (திருவாசகம்), **"மூன்று மூர்த்தியுள் நின்றிய லுந்தொழில்—மூன்றும் ஆயின மூவிலைச் சூலத்தன்"** (திருநாவுக்கரசர்) என்றாற்போன்ற திருவாக்குக்களுக்கு இதுவே கருத்தாம். இனி, படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றும் உயிர்களைப் பாசநெறியுய்ப்பனவே ஆகலின், அவை **மூன்றையும் மறைத்தலின்கண்** அடக்கி, இறைவன் தொழிலை **மறைத்தல், அருளல்,** என **இரண்டாகவே வைத்து உரைத்தலும் உண்டு. "இரண்டும் ஆமவர்க்(கு) உள்ளன செய் தொழில்"** (திருநாவுக்கரசர்) எனவும், **"பந்தம் வீடுதரும் பரமன்"** (பெரிய புராணம்) எனவும் எழுந்த திருவாக்குக்களுக்கு இது கருத்தாம். ஆகவே, எல்லா மெய்ந்நூல்களுக்கும் முதல்வனது தொழிலை ஐந்தாக விரித்து ஓதுதலே கருத்தென்பது உணரப்படும்.

கிருஷ்ணயசுர்வேதம், தைத்திரீய ஆரண்யகம் 17-ஆம் அநுவாகம் முதல் 21-ஆம் அநுவாகம் வரையுள்ள மந்திரங்களில் முறையே வரும் **சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம்,** ஈசானம் என்னும் ஐந்து மந்திரங்களும் மேற்கூறிய படைத்தல் முதலிய ஐந்து தொழில்களைச் செய்யும் முதல்வனது சத்தி பேதங்களைக் குறிப்பனவாம் என்பது சிவாகம நூற்றுணிபு. ! சத்தியோஜாதம்-படைப்பு, வாமதேவம்-காப்பு, அகோரம்–அழிப்பு, தத்புருஷம்-மறைப்பு, ஈசானம்-அருளல்,

எண்குணங்கள்

தன்வயமுடைமை, தூய உடம்புடைமை, இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்றல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்னும் இவை முதல்வனுக்குரிய இறைமைக் குணங்கள் எனச் சைவாகமங்கள் கூறும், திருக்குறளில் முதல்வனை **எண்குணத்தான்** எனக் குறித்துள்ளவிடத்து, பரிமேலழகர் இவற்றையே எண்குணங்கள் என எடுத்தோதி வலியுறுத்துகிறார். பொதுவாக உயிர்களுக்கு உள்ளனவாகக் கூறப்படும் குணங்கள் எல்லாம் மூலப்பிரகிருதியின் காரியமாகிய சத்துவம், ராசதம், தாமதம் என்னும் முக்குணங்களின் விளங்கங்களே ஆகும். முதல்வனுக்கு இம் முக்குணங்களுள் ஒன்றும் இல்லை. ஆதலால் முதல்வன் **நிர்க்குணன்** (குணம் இல்லாதவன்) எனக் கூறப்படுவன். ஆனால் மேலே கூறிய குணங்கள் **ஏவர்தம் பாலும் இன்றி எல்லைநீர் அமலற்கு உள்ள குணன்** " எனக் கூறப்படுவன.

அவை மூலப்பிரகிருதி, மாயை, விந்து என்னும் இவற்றின் சம்பந்தத்தால் வருவன அல்ல. அவை முதல்வனது இயல்பாகிய திருவருளின் விளக்கங்களே ஆகும். இதனால், முதல்வனை **எண்குணத்தான்** எனக் கூறியது **நிர்க்குணன்** எனக் கூறும் சுருதிகளோடு மாறுபடுவதன்று. **நிர்க்குணன்** என்பதன் பொருள் மூலப்பிரகிருதியின் விளக்கமாகிய முக்குணம் இல்லாதவன் என்பதே ஆகும்; திருவருட்குணங்கள் இல்லாதவன், என்பது அன்று. குணாதீதன் என்னும் சொல்லும் முக்குணங்களைக் கடந்தவன் என்றே பொருள்படும், ஆதலின், அதுவும் எண்குணத்தான் என்பதோடு முரணாது.

மேற்கூறிய எண்குணங்களும் வடமொழியில் முறையே சுவதந்திரதை, விசுத்த தேகம், அநாதிபோதம், சர்வஞ்ஞதை, அநாதி முத்தத்துவம், அலுப்த சத்தி, நித்திய திருப்தி எனக் கூறப்படும். அநாதி முத்தத்துவம் என்பதை நிராமயம் (பிணி இன்மை) என்றும் வழங்குவர்.

இவற்றுள் அநாதியே பாசங்களின் நீங்கி நிற்றல் (அநாதி முத்தத்தன்மை) இயற்கை யுணர்வுடைமை (அநாதிபோதம்) அடங்கும்; தூயவுடம்புடைமை (விசுத்த தேகம்) பேரருள் உடைமை (அலுப்த சத்தி) யில் அடங்கும். ஆதலின், எண்குணங்களை ஆறு குணங்களில் அடக்கி, முதல்வனைத் தூய **அறுகுணன்** (சுத்தஷாட் குண்ணியன்) என்றலும் வேதாகம மரபு ஆகும். "ஏவர்தம் பாலும் இன்றி எல்லைதீர் அமலற்குள்ள—மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் உற்ற தென்ன"—என்பது கந்தபுராணம்.

(7) முதல்வனுக்கு உலகத்தோடுள்ள சம்பந்தம்

வேதங்கள் முதல்வனை **விச்சுவாதிகன், விச்சுவகாரணன், விச்சுவாந்தரியாமி, விச்சுவரூபி** என்னும் நான்கு பெயர்களாலும் சுட்டுகின்றன. **விச்சுவம் என்பது உலகம்** என்னும் பொருளது. ஆதலினல், இப்பெயர்கள் தமிழில் முறையே உலகினை இறந்து நின்றவன், உலக முதல், உலகினுக்கு உயிர், உலக உறவினன் என மொழி பெயர்த்துக் கூறப்படும். இவற்ருல் உலகுக்கும் முதல்வனுக்கும் உள்ள சம்பந்தம் விளங்கும். இச் சம்பந்தத்தை விளங்கக் கூறின், முதல்வன் உலகத்திற்கு வேருன பொருளாய்ச் சுட்டியறியப்படாது, யார் உணர்வையும் கடந்தவன்; ஆயினும், உலகம் அனைத்திற்கும் தான் பரம ஆதாரமாய், அவை தன் பெருநிறைவில் அடங்கித் தொழிற்படும்படி, அவற்றைச் செலுத்தி நிற்பவன். உயிர் உடம்பை அபிமானித்து உடம்பாகவே நின்று இயலுதல் போல, முதல்வன் உலகமே தான் எனும்படி நின்று, உலகப் பொருள்களில் தன்னைக் கருதி வழிபடுவோர்க்கு அவற்றில் தங்கி நின்று வழிபாட்டை ஏற்றுக் கொள்வான்—எனக் கூறலாம்.

இவ்வாறு, முதல்வன் உலகிற்கு வேருயினும், அதனேடு ஒன்ருய், அதனைச் செலுத்தி உடனய் நிற்கும் இயல்பையே உபநிடதங்கள் **அத்வைதம்** அல்லது **அத்விதீயம்** என்னும் சொல்லால் விளக்குகின்றன. அத்வைதம் என்னும் சொற்குப் பொருள் **இரண்டாக இல்லாமை, வேறின்மை** எனக் கொள்வதே சைவ மரபு.

சுருதிகள் சிவபிரானை இங்ஙனம் நான்கு வகைப்பட வைத்துக் கூறுகின்றன என்பதையும், அவை சிவபிரானது திருமேனியின் இயல்பை உணர்வார்க்கு விளங்கும் என்பதையும்,

> **"உலகினை இறந்து நின்ற(து)**
> **அரன்உரு என்பதோரார்;**
> **உலகவன் உருவிற் தோன்றி**
> **ஒடுங்கிடும் என்றும் ஓரார்;**
> **உலகினுக்(கு) உயிருமாகி**
> **உலகுமாய் நின்ற தோரார்;**
> **உலகினில் ஒருவன் என்பர்**
> **உருவினை உணரார் எல்லாம்"**

என்னும் சிவஞான சித்தி தெரிவிக்கின்றது.

வேதங்களிற் கூறப்படும் நுண்பொருள்களைப் புராணங்கள் கதை வடிவில் வைத்துப் பருப்பொருளாக விளக்கிக் கூறும். சிவபிரான் **விச்சுவாதிகன் (விஸ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:)** என்னும் சுருதிப் பொருளை, அவன் சோதிப் பிழம்பாகத் தோன்றி நிற்பத் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிக் காணுத வரலாற்றில் வைத்து உரைக்கும்; அவன் **விச்சுவகாரணன்** என்பதை மும்மூர்த்திகளும், பிறரும், பிறவும் முதல்வன் திருமேனியில் தோன்றிய வரலாற்ருல் விளக்கும். இறைவன் யோக நிலையில் இருந்தபோது உயிர்கள் எல்லாம் காம நுகர்ச்சி பெறவில்லை எனவும், இறைவன் திருமேனியில் பட்ட அடி உலகம் எல்லாம் பட்டது எனவும், அம்மை முதல்வன் திருக்கண்களை மூட உலகெலாம் இருண்டது எனவும், பின் நெற்றிக் கண்ணுல் உலகத்திற்கு ஒளியை முதல்வன் அருளினன் எனவும், இவ்வாறு முதல்வன் திருமேனியில் விளைந்த வண்ணமே உலகிற்கும் நிகழ்ந்தது எனக் கூறும் புராண வசனங்கள் எல்லாம் அவன் **விச்சுவாந்தரியாமி** என்னும் சுருதியை விளக்கி வலியுறுத்துவன ஆகும். முதல்வனுக்கு உரிய அம்மையப்பர் (அர்த்தநாரீசுவர) வடிவை எடுத்துக் கூறும் புராண உரைகள் முதல்வனை **விச்சுவரூபி** என்னும் சுருதிப் பொருளை விளக்கி வலியுறுத்துவன.

இங்ஙனம் நுணுகி உணர்வார்க்குச் சிவ புராணங்கள் எல்லாம் வேதப் பொருளை விளக்கி (வேத உபப்பிருங்கணங்களாய்) முதல்வன் பொருள்சேர் புகழைக் கூறுவனவே ஆம்; புனைந்துரை அல்ல என்பது விளங்கும்.

(8) சொரூப நிலையும் தடத்த நிலையும்

நம்மனேர் உணர்வு, தெரிந்ததிலிருந்து தெரியாததில் செல்வது (From the known to the unknown) பருப்பொருளிலிருந்து நுண்பொருளுக்குச் செல்வது (From the concrete to the abstract) ஆதலினல், உயிர்கள் முதல்வனைப் படிமுறையில் உணர்ந்து மெய்யுணர்வின் நிறைவு நிலை

எய்துதற்கு பொருட்டு சிவாகமங்கள் அவன் இயல்பைச் **சுவரூபநிலை** எனவும் **தடத்தநிலை** எனவும் இரண்டு வகைப்பட வைத்து உரைக் கும்.

சுவரூபம் என்பது **தன்னியல்பு**. அதாவது சச்சிதானந்தம் (உண்மை அறிவு இன்பம்) என்னும் வடிவில் மெய்யுணர்ந்தோரால் அநு பவிக்கப்படும் இயல்பு. இவ்வியல்பைக் குறித்து முதல்வனைச் சுட்டும் போதெல்லாம் அவனைச் **சிவம்** அல்லது **சிவன்**, எனச் சுட்டு வது— ஆகம மரபு.

தடத்தம் என்பது அருகில் இருப்பது, கரைக்கண் இருப்பது எனப் பொருள்படும். தடம்—கரை, ஸ்த—இருத்தல். இதனைத் தமிழ்மொழியில் **பொது வியல்பு** என வழங்கு வர். பொதுவியல்பாவது முதற்பொருள் தனக்கு வேறாகிய உலகு உயிர்களோடு கலந் திருக்கும் தொடர்பு பற்றி அவன்கண் உள்ள இயல்பு. அவ்வியல்பை மூவகைப்பட வைத் துக் கூறுவர்: அவை, (1) எல்லாப் பொருள் களிலும் உயிர்க்குயிராய் (சர்வாந்தரியாமி யாய்)க் கலந்து, ஞானம் கிரியை என்னும் சத்தி ரூபமாய் நிற்கும் நிலை; (2) அவ்வாறு நின்று உலகுயிர்களை ஐந்தொழிலிற்படுத்த முற்படும் நிலை; (3) அவ்வைந் தொழிலில் யாதேனும் ஒன்றன்பாற் படுத்தித் தொழிற் படுத்தும் நிலை, இம் மூன்று நிலைகளும் முறையே இலய நிலை, போக நிலை, அதிகார நிலை எனப்படும். இந்நிலைகளை நம்மனோர்க்கு உள்ள உறக்கம், கனவு, நனவு, என்னும் நிலை களைப் போலக் கொள்ளலாம். இந் நிலைகளில் முதல்வனுக்கு உள்ள திருமேனிகள் முறையே அருவம், அருவுருவம், உருவம் எனப்படும். அருவத் திருமேனியைக் குறித் துச் சத்தன், இலயசிவன் எனவும், அருவுரு வத் திருமேனியைக் குறித்து உத்தியுத்தன், சதாசிவன் எனவும், உருவத் திருமேனியைக் குறித்துப் பிரவிருத்தன், மகேசன் எனவும் முதல்வனுக்குப் பெயர்கள் வழங்கும்.

முதல்வனுக்கு உரிய இம்மூன்று நிலை களைப் பின்வரும் எடுத்துக்காட்டில் வைத்து ஒருவாறு உணரலாம்: ஒரு செயலைச் செய் வார் முதற்கண் அதனைச் செய்யவேண்டும் என நினைப்பர். இந்நினைவில் அவருடைய அறிவும் முயற்சியும் பொதுவாக நிகழும். பின் அச்செயலுக்கு வேண்டியவற்றைச் சிறப்பாக அறிதலும் திட்டமிடலும் நிகழும். மூன்றாவ தாக அவ்வச் செயற்கூறுகளைத் திட்டத்தின் படி செய்து முடிப்பர். முன்னிலையில் செய லைச் செய்யக்கூடியவராக இருக்கிறார். செய் யச் சக்தராக இருக்கிறார். இரண்டாம் நிலை யில் அவர் செயலில் முற்பட்டு உள்ளார். இதுவே உத்தியுக்த நிலை அல்லது பாலன நிலை. மூன்றாவதாகிய செயலைச் செய்து முடிக் கும் நிலை அதிகார நிலை. போகம் எனினும் பாலனம் எனினும் பொருந்தும்.

முதல்வனது சொரூப இயல்பும், தடத்த இயல்பும் அவாவறுத்து மெய்யுணர்ந்தோர்க் குப் காட்சிப் படுவன. ஆயினும், நம்மனோர்க் அவனியல்பை முறையே உருவத் திருமேனி, **அருவுருவத்** திருமேனி, **அருவத்** திருமேனி, முடிவில் அவன்றன் **அறிவுரு** என்னும்படி முறையில் அறிந்து அன்பு செய்து வழிபட்டு நன்னெறியில் முன்னேறக் கடவேம். ஆத லால் சிவாகமங்கள் முதல்வனது உருவத் திரு மேனியை இருபத்தைந்து மகேச வடிவம் என வகுத்துக் கூறுகின்றன. அருவுருவத் திரு மேனியைப் பீடமும் இலிங்கமும் ஆக அமைந்த சிவலிங்கத் திருமேனி எனவைத் துள்ளன. அருவத் திருமேனியைப் பிரணவத் தின் மூலங்களாகிய நாதம் விந்து என்னும் ஒலி, ஒளி வடிவாகவைத்து வகுத்துக்கூறுகின் றன. இன்னும் இவற்றின் விரிவு சைவ சாத்தி ரங்களிலும் சைவ பத்ததிகளிலும் அவற்றின் உரைகளிலும் காணத்தக்கது. இங்கு முதல் வனுக்கு அருவம், அருவுருவம், உருவம் என் னும் மூன்று திருமேனிகள் உள்ளன என அறிதல் சாலும்.

முதல்வன் இயல்பு என்னும்இப்பகுதியை நின்றசீர்நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னனுக்கு ஆளுடைய பிள்ளையார் அறி வுறுத்தருளியவற்றுள் மூன்று திருப்பாட்டுக் களைக் குறிப்பதோடு முடித்தல் பொருத்தம் ஆகும்:—

"அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கையர்; ஆயினும்
பெரியர்; ஆரறி வாரவர் பெற்றியே"

(முதல்வன் தன் முனைப்பு உடையார்க் குக் காண அரியவன். அன்பினால் காணலுறு வார்க்கு அங்கையில் நெருப்பும், விடை ஊர்

தியும், நீலகண்டமும், சுடலை ஆடலும் முதலிய உண்மையாம் பெரிய நல்ல திருவடையாளங்களையுடைய திருமேனியை உடையன். இத்திருமேனியே யன்றி உலகு உயிர் அனைத்தும் தன் வடிவேயாக உள்ள விச்சுவரூபியும் ஆவன் அவன்; அவனே யார் உணர்வும் சென்று எட்டொணாத விச்சுவாதீதனும் ஆவன்)

"வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர்; தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்;
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ"

(முற்றழிப்புக் காலத்தில் எல்லாப் பொருளும் தனது திருவருள் ஒளியால் நீறு றப்பட, அந்த நீற்றைச் சாந்தமாக அணியும் ஊழி முதல்வன் எம்பெருமான்; அவனுக்குப் பிறப்பு இறப்பு இல்லை. அவன் தன்னையே சிந்தித்து எழுவார்க்கு இருவினைப் பற்றை அறுத்து மெய்யுணர்வும் பேரின்பமும் தந்தருளுவன். அவனை உலகப் பொருள்களுள் ஒன்றாக வைத்துக் கூறுதல் இயலாது.)

"ஏதுக்க ளாலும் எடுத்த
மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன்
எங்கள் சோதி;
மாதுக்கம் நீங்க லுறுவீர்
மனம்பற்றி வாழ்மின்;
சாதுக்கள் மிக்கீர் இறையே
வந்து சார்மின்களே"

(இறைவன் தனக்கு உவமை இல்லாதவன்; ஆதலால் இங்குக் கூறியஅவன் இயல்புகளை ஏது, திருட்டாந்தம் முதலியவற்றைக் கொண்டு அளந்து உளங்கொள்ளுதல் இயலாது. அன்பால் உணர்வார்க்கு அகத்தே பேரறிவுப் பொருளாய் விளங்கும் அப்பெருமான் புறத்தும் சிவாக்கினி, சிவலிங்கம் முதலிய ஆதாரங்களில் விளங்கி உயிர்களுக்கு அணுக்கமாக உள்ளனன். ஆகலின் யாம் அறிவுறுத்திய லக்ஷியத்தைக் குறிக்கொண்டு வழிபட்டு வாழ்ந்து பிறவித் துயர் நீங்கி இன்புறுக! நல்லோர்களே, யாம் விரும்பும் பொருள் எல்லாம் இறைவனே ஆதலால், அன்பால் சார்மின்கள்.) (தொடரும்)

* * *

களக்காடு, ஸ்ரீ சத்தியவாகீசுவரர் கோமதியம்மன் கோயிலில் 10-8-59, 11-8-59 ஆகிய இரண்டு நாட்களில் பன்னிரு திருமுறைக்கோயில் திறப்பு விழாவும், திருமுறை விழாவும் திருநெல்வேலி மாவட்ட அறநிலையப் பாதுகாப்புத்துறை உதவி ஆணையர் திரு டி. எச். விவேகானந்தம் பிள்ளை, பி. ஏ. எல். டி., அவர்கள் தலைமையில் நடைபெற்றன. திருமுறைக்கோயிலை யானையின்மேல் வைத்து. திரு சுந்தரபாகவதர் அவர்கள் குழுவினர் தேவார இன்னிசைப் பாடல்களுடன் இரத வீதிகளைச் சுற்றி வந்து ஸ்ரீ நடராஜர் சந்நிதியில் திருமுறைக்கோயில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

திரு டி எச். விவேகானந்தம் பிள்ளை, பி. ஏ. எல். டி., அவர்கள் பன்னிரு திருமுறைக்கோயிலைத் திறந்து வைத்து திருமுறைகளின் சிறப்பைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். சென்னை குக ஸ்ரீ பு. ப. இரசபதி அவர்கள் "திருக்கைலாய ஞான உலா" 'சுந்தரர் தேவாரம்" என்னும் பொருள்கள் பற்றியும், களக்காடு கழக உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் திரு பூ. சாம்பசிவன், எம். ஏ, பி. டி., அவர்கள், 'திருவாசகத்தேன்', வித்வான் திரு சண்முகவேல் அவர்கள் 'அப்பர் அருள்மொழி' என்னும் பொருள்கள் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

* * *

சோளசிம்மபுரம், ஸ்ரீ லட்சுமி நரசிம்மசுவாமி கோயிலில் திருப்பவித்ரோத்சவம் 3-9-59-ல் துவங்கி 7-9-59-ல் முடிவுற்றது.

* * *

தஞ்சை மாவட்டம், நன்னிலத்திலுள்ள ஸ்ரீ சுந்திரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்ற நன்னிலத்துப் பெருங்கோயிலில் விளங்கும் ஸ்ரீ மதுவன நாயகி உடன்கூடிய ஸ்ரீ மதுவனேசுவர பெருமாளுக்கும், விநாயகாதி பரிவாரமூர்த்திகளுக்கும், ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 9-9-59-ல் துவங்கி 14-9-59-ல் முடிவுற்றது.

வைஷ்ணவம்

2. நீல்நிற உருவின் நெடியோன்

(பி. ஸ்ரீ)

சங்க காலத்திலே—அதாவது, கடைச் சங்க காலம் என்று சொல்லப்படும் சில நூற்றாண்டுகளுக்கிடையே — நம் தமிழகத்தில் வெறியாட்டு, நடுகல்வழிபாடு முதலியகொள்கைகளுடன், முருகன் வழிபாடும் திருமாலின் வழிபாடும் சிறப்புற்றிருந்தன. கொற்றவை என்ற காளியின் வழிபாடும் தமிழர்களிடையே காணப்பட்டது.

முருகன் இந்திரன் வருணன் ஆகியதெய்வங்களைப்போல் கண்ணன் என்ற திருமாலும் ஒரு நிலத்திற்குரிய தெய்வமாக மதிக்கப்பட்ட போதிலும், கண்ணனை முழுமுதற் கடவுளாகி வழிபட்டு வந்த சாதாரண மக்களும் உண்டு, புலவர் பெருமக்களும் உண்டு.

இருபெருந் தெய்வங்கள்

சிவபெருமானை ஒரு நிலத்திற்குரிய தெய்வமாகக் கருதாமலே முழுமுதற் கடவுளாக மதித்து மக்கள் வழிபட்டனர் என்பதற்குரிய சில குறிப்புக்களைப் பழைய சங்கஇலக்கியப் பாடல்களிலும் காண்கிறோம். அப்படியே, முல்லை நிலக் கடவுளாகிய திருமாலையும் முழுமுதற் கடவுளாக அறிஞர்களும் பொது மக்களும் வழிபட்டுவந்தார்கள் என்று கருதலாம்.

சிவபெருமானுடைய இடபக்கொடி திருமுருகாற்றுப்படையில் வெற்றிக்கு அறிகுறியான கொடியாகப் பிரஸ்தாபிக்கப்படுவது போல், திருமாலின் கருடக்கொடியும் புறநானூற்றில் பிரஸ்தாபிக்கப்படும் தோரணையிலிருந்து, வானுற ஓங்கிய வெற்றிக்கொடிதான் என்று ஊகித்துக்கொள்ளலாம். 'விண் உயர் புட்கொடி விறல் வெய்யோன்' என்பது புறநானூற்றிலே ஒரு புலவர் வாக்கு.

சிவபெருமானை நீலகண்டமூர்த்தியாகவும் முப்புரம் எரித்த மூர்த்தியாகவும் நெற்றிக் கண்ணனாகவும் அப்பெருமானின் தலைமைப் பதவி தோன்றக் குறிப்பிடுகின்றன தொகை நூல்கள். அப்படியே திருமாலின் தலைமைப் பதவியைக் குறிப்பிடும் செய்திகளையும் சங்க இலக்கியங்களில் காணலாம்.

'மால்' என்ற சொல்லே 'பெரியோன்' என்ற பொருளில் பிரயோகிக்கப்படுவதைக் காண்கிறோம். 'பெரியவனை மாயவனை' என்று தொடங்கும் பிரசித்தமான செய்யுள் சிலப்பதிகாரத்தில் வருவதைப் பலரும் அறிந்திருப்பார்கள். 'பிறவாயாக்கைப் பெரியோன்' என்று சிவபெருமான் குறிக்கப்படுவதும் பலரும் அறிந்ததே.

'ஆல்கெழு கடவுள்' என்று சிவபெருமானைத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது என்றால், ஆலிலையில் அமர்ந்த திருமால் என்று பொருள்படுமாறு 'ஆல் அமர்கடவுள்' என்றே புறநானூறு சுட்டிக்காட்டுகிறது.

'நீலமணி மிடற்று ஒருவன்' என்று புறநானூறு ஒப்பற்ற தியாகத்திற்கு அறிகுறியான நீலகண்டத்தைக் குறிப்பிடுகிறது என்றால், அதே புறநானூறு சர்வ வியாபகத்திற்கு அறிகுறியான திருமாலின் நீல மேனியை,

மண்ணுறு திருமணி
புரையும் மேனி

[மண்ணுறு-கழுவப்பட்ட திருமணி- அழகிய நீலரத்தினம். புரையும்-ஒத்திருக்கும்.]

என்று குறிப்பிடுகிறது. திருமாலின் விசுவரூபம் (சர்வவியாபகப் பேருருவம்) 'நீல் நிற உருவின் நெடியோன்' என்று பெரும்பாணாற்றுப்படையில் குறிக்கப்படுகிறது.

சிவபெருமானை மதுரைக்காஞ்சி 'மழுவாள் நெடியோன்' என்று குறிப்பிடுகிறது. இருபெருந் தெய்வங்களும் 'நெடியோன்'

என்று குறிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. சிவபெருமானுடைய சர்வ சக்திக்கு இங்கே மழு நினைவுக் குறி.

திருமாலின் சர்வசக்திக்கு அறிகுறியான சக்கராயுதத்தை இப்பெருமானின் சர்வவியாபக சக்தியுடன் சேர்த்துப் புறநானூறு, 'நீல் நிற உருவின் நேமியோன்' என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

முல்லைப்பாட்டிலே திருமாலின் சக்கரத்துடன் சங்கும் குறிக்கப்படுகிறது. பதிற்றுப் பத்திலே சக்கரப்படை காணும் கண்களை வெறியோடச் செய்யும் என்ற வருணனையைக் காண்கிறோம்.

சிவபெருமானை 'முரண்மிகு செல்வன்' என்று திருமுருகாற்றுப்படையும், 'முக்கட் செல்வன்' என்று புறநானூறும் வருணிப்பதைக் காண்கிறோம். 'இமையா முக்கண்... முரண் மிகு செல்வன்' என்பது திருமுருகாற்றுப்படையில் நக்கீரதேவர் வாக்கு, திருமாலைப் பதிற்றுப்பத்து 'துழாஅய் (திருத்துழாய்) அலங்கற் செல்வன்' என்று வருணிக்கக் காண்கிறோம். நறுமணம் கமழும் திருத்துழாய் மாலை எம்பெருமானின் இம்மை மறுமை என்ற இருவகைச் செல்வங்களுக்கும் ஓர் அறிகுறி என்பது குறிப்பு. திருமகள் எல்லாச் செல்வங்களுக்கும் அறிகுறி. இரு பெருந் தெய்வங்களின் வழிபாடும் தமிழர் தனிப்பெருஞ் செல்வம்.

திருமாலும் திருமகளும்

தன் திருமேனியின் ஒரு பாகத்தில் உமை அமர்ந்து விளங்கப்பெற்றவன் சிவபெருமான் என்ற செய்தியைத் திருமுருகாற்றுப்படையில் காண்கிறோம். திருமாலின் மார்பிலே திருமகள் தங்குகிறாள் என்ற செய்தியைப் **பதிற்றுப்பத்தில்** காண்கிறோம். திருமகளோடு கூடிய திருமாலை **முல்லைப்பாட்டும்** வருணிக்கிறது.

'ஸ்ரீ வைஷ்ணவம்' என்று நம் தமிழகத்தில் தோன்றிப் படர்ந்த பக்தி மதத்தின் கருத்து-விதை ஒன்றை முல்லைப்பாட்டிலும் பதிற்றுப்பத்திலும் காண்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

'ஸ்ரீ' என்று திருமகளை வடமொழியில் குறிப்பிடுகிறார்கள்; தமிழில் 'திரு' என்கிறார்கள். செல்வத்திற்குத் தலைவியாகத் திருமகள் சங்க இலக்கியங்களில் பல இடங்களிலும் குறிக்கப்படுவதைக் காண்கிறோம். முல்லைப் பாட்டிலே திருமகள் 'மா' என்ற பெயரால் குறிக்கப்படுகிறாள். திருமாலின் மார்பில் உறையும் திருமகள் வீரர்களும் வள்ளல்களும் பக்தர்களுமாகிய சிறந்தவர்களின் மார்பிலும் உறைவதாக உபசரித்துப் பேசுவதுண்டு. இந்தப் பழக்கமும் சங்க காலத்தில் நிலவி வந்தது.

அழகான வீடுகளில் திருமகளின் உருவைச் சித்தரித்துவைக்கும் வழக்கம் சங்க காலத்தில் உண்டு. வீட்டு வாசல் நிலைகளிலும் திருமகளின் உருவம் சித்தரிக்கப்பெற்றிருந்ததாக **நெடுநல்வாடை** கூறுகிறது. மதிற் கதவுகளில் திருமகளின் உருவைச் செதுக்கியிருந்ததாக **மதுரைக்காஞ்சி** தெரிவிக்கிறது.

ஊர் அல்லது பேரூரின் (நகரத்தின்) காவல் தெய்வமாகத் திருமகள் கருதப்பட்டாள் என்ற குறிப்பைப் **பட்டினப்பாலையில்** காண்கிறோம். திருமால் நிலத்தின் காவலனாகத் திகழ்கிறான் என்ற குறிப்பை மதுரைக்காஞ்சியில் தெளிவாகக் காண்கிறோம். எனவே, இரண்டு காவல் - தெய்வங்களும் சேர்ந்து ரட்சிப்பதாக ஸ்ரீ வைஷ்ணவம் வெளியிடும் கொள்கை சங்க இலக்கியங்களிலும் வேரூன்றிய கொள்கைதான் எனலாம்.

செல்வத்திற்குத் தலைவி திருமகள் என்ற கருத்திலேயே, அழகுச் செல்வத்திற்கும் அருட் செல்வத்திற்கும் தலைவி இவள் என்ற புதை பொருளையும் கண்டு கொள்ளலாம்.

திருமாலின் மார்பில் திருமகள் அமர்ந்திருப்பது சத்தியத்தின் மார்பிலுள்ள அழகே அழகு என்ற தனிப்பெருங் கொள்கையையும் உணர்த்தக்கூடியதுதான். இது தத்துவ உலகுடன் கலையுலகையும் ஒளிரச் செய்யும் ஒரு பேருண்மையாகும்.

ஸ்தூல அழகு மட்டும் அழகாகாது. அக அழகிலே வேரூன்றிப் படர்ந்திருப்பதுதான் உண்மையான முக அழகுமாகும். எனவே, உண்மையழகு உள்ளத்தின் அழகு, உள்ளத்திற்கும் உள்ளே ஆன்ம அழகு, சுருங்கச் சொன்னால், உண்மையின் இதயத்திலே நாம் காணும் அழகைத்தான் உண்மையழகு என்று போற்றக்கூடும்.

இந்தத் தத்துவத்தையும் திருமாலின் மார்பிலே திருமகள் உறைகின்ருள் என்ற வைணவ சமயக் கொள்கையின் உட்பொருள் களில் ஒன்ருகக் கருதலாம்.

பாம்பணைப்பள்ளி (சர்ப்பசயனம்)

'ஆயர்புத்திரன் அல்லன், அருந்தெய் வம்' என்று ஆயர்கள் குழந்தைக்கண்ணனைக் கண்டு மகிழ்ந்ததாகப் பெரியாழ்வார் கூறியுள் ளார். பொய்கையாழ்வாரோ அரவணையில் துயிலும் ஆதிமூர்த்தியை 'அரவணைமேல் பேராயன்' என்று குறிப்பிடுகிருர். ஆதிப் பரம்பொருள் தெளிவாகிய பாற்கடலில் 'தொல்லறிவு' என்ற பாம்பின் மேல் அறி துயில் அமர்ந்திருக்கிறது என்ற வைணவக் கொள்கையை நமது மறுமலர்ச்சிக்கவியான பாரதியாரும் பாடியிருக்கிருர். 'பாம்பணைப் பள்ளி' சங்க இலக்கியத்திலும் பிரஸ்தாபிக் கப்படுகிறது.

பாம்பணைப்பள்ளியில் பரம்பொருளா கிய பேராயன் யோகநித்திரை புரிகின்ருன் என்பது வைணவத்தின் மூலக்கொள்கைக ளில் ஒன்று. இந்த மூலக்கொள்கையையும் பத்துப் பாட்டுள் ஒன்ருகிய பெரும்பாணுற் றுப்படையில் காண்கிருேம். தொண்டை மான் இளந்திரையனைக் **கடியலூர் உருத்திரங் கண்ணனூர்** பாடியதுதான் பெரும்பாணாற்றுப் படை. இது கி. பி. முதல் நூற்ருண்டில் தோன்றியதென்று கருதுவோருண்டு.

இளந்திரையனது இராஜதானி காஞ்சி புரம். இந்த அரசனிடம் போய்ப் பரிசில் பெற்றுவந்த ஒருவன் பழுத்தமரம் தேடித் திரியும் பறவைபோல் திரிந்துகொண்டிருந்த ஏழைப்பாணன் ஒருவனை நோக்கி, 'நீயும் அந்த வள்ளலிடம் சென்ருல் உன் வறுமை தீரும்' என்று சொல்லி அவனை அனுப்புகி ருன். அந்தப் பாணனுக்கு வழி சொல்லும் போது, இப்போது காஞ்சிபுரத்தின் பகுதி யாக இருக்கும் 'திருவெஃகா' என்ற தலத்தை யும் குறிப்பிடுகிருன்.

திருவெஃகா திருமால் பள்ளிகொண் டிருக்கும் மிகப் பழைய தலங்களில் ஒன்ரு கும். 'நீண்ட பூங்கொத்துக்கள் நிறைந்த காந்தள் வளர்கின்ற அழகிய பக்கமலையிலே யானை படுத்துக்கிடந்தாற்போல், பாம்பணை யாகிய படுக்கையில் திருமால் பள்ளி யமர்ந் திருக்கிருன்' என்று பொருள்படத் திருவெஃ காவைப் பாடுகிருர் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் என்ற சங்கப் புலவர்:

காந்தளஞ் சிலம்பில்
களிறுபடிந் தாங்கு,
பாம்பணைப் பள்ளி
அமர்ந்தோன்

[அஞ்சிலம்பு–அழகிய பக்கமலை. களிறு–ஆண் யானை. படிந்தாங்கு–கிடந்தாற்போல.]

இந்தப் பெருமானை யாழை வாசித்துப் பாடி வாழ்த்திய பின், பாணனும் அவனைச் சேர்ந்தவர்களும் அப்பால் போகவேண்டும் என்பது அரசனிடம் பரிசில் பெற்று வந்த புலவனின் விருப்பமாகும். 'உம்முடைய கரிய தண்டுடன் கூடிய இனிய யாழை வாசித்துத் திருவெஃகாவிலிருக்கும் கடவுளை வாழ்த்தி அவ்விடத்திலிருந்து போங்கள்' என்று பொருள்பட உருத்திரங் கண்ணனுர் பாடியிருக்கிருர். இதிலிருந்து திருமால்மீது உருத்திரங் கண்ணனுருக்கு உள்ள பரம பக்தி சிறப்பாகப் புலனுகிறது என்று கருது வதும் தவருகாது.

சங்ககாலமும் அவதாரங்களும்

வாமனவதாரத்தைக் குறிப்பிடுகிறது முல்லைப்பாட்டு. மகாபலி மூன்றடிமண் கொடுத்து அந்தத் தானத்திற்கு அறிகுறி யாகத் தண்ணீரை வார்த்தானல்லா? அந்த நீர் தன் கையில் பட்டதும் குள்ளன் வான் முட்ட நிமிர்ந்துவிட்டான் என்பது புராணம். இந்தக் கதையைக் குறிப்பிடும் முல்லைப் பாட்டு, 'தடக்கை நீர் செல நிமிர்ந்த மாஅல் (மால்) என்கிறது,

நிலம் கடந்த நெடுமுடி அண்ணலும் சடைமுடி அண்ணலைப் போல் தமிழர்கள் அன்றுமுதல் இன்றளவும் வழிபட்டு வரும் தெய்வம்தான் என்பது தெளிவு.

இராமாவதாரத்தையும் குறிப்பிடுகிறது சங்க இலக்கியம். இளஞ்சேட் சென்னி என்ற சோழனை **ஊன்பொதி பசுங்குடையார்** என்ற சங்கப் புலவர் பாடியிருக்கிருர். இவர் இராமாயணச் செய்தியைக் கூறும் இரண்டு சந்தர்ப்பங்களைப் புறநானூற்றில் காண் கிருேம்.

புலவர் அரசனைப் பாடியதும் அவன் அவர் வறுமை நீங்க வண்மை பொழிகின்றுன். பொன்னல் செய்த ஆபரணங்களையும் அள்ளிக் கொடுக்கிறுன். கிடைத்த பரிசுகளுடன் புலவர் தம் வீட்டுக்குப் போகிறுர். பரம ஏழைகளான இவர் மனைவி மக்கள் பேராசையுடன் அந்த நகைகளை அணிந்து கொள்ளுகிறுர்கள். ஆனல் எந்த நகையை எங்கே அணிந்து கொள்வது என்பதை அவர்கள் அறிந்திருக்க வில்லையாம்.

இடையில் அணிந்துகொள்ள வேண்டிய மேகலை முதலியவற்றைக் கழுத்தில் அணிந்து கொண்டார்களாம். கழுத்தில் அணிந்து கொள்ளவேண்டிய ஆபரணங்களை இடையில் கட்டிக் கொண்டார்களாம். இப்படி அலங்காரம் அலங்கோலமாகவதைக் காணும் புலவருக்குச் சிரிப்பு வருகிறது; இராமாயணக் காட்சி ஒன்றும் நினைவிற்கு வருகிறது.

இராவணன் சீதையை வஞ்சித்து இலங்கைக்கு எடுத்துச் செல்லும் போது, அவள் அடையாளத்திற்காகத் தன் ஆபரணங்களைக் கழற்றி யெறிகிறுளல்லவா? அந்த ஆபரணங்களை வானரங்கள் கண்டெடுத்ததும் இராமாயணப் பிரசித்தமான செய்திதான். ஆனல் கம்பராமாயணத்தில் இல்லாத ஒரு நகைச் சுவைச் செய்தியை இந்தச் சங்கப் புலவர் குறிப்பிடுகிறுர், அதாவது, அந்த ஆபரணங்களால் குரங்குகள் தங்களை அலங்காரம் செய்து கொள்ள விரும்புகின்றன. ஆனல் எந்த ஆபரணத்தை எந்த அங்கத்தில் அணிந்து கொள்ளவேண்டுமென்று குரங்குகளுக்குத் தெரியுமா? அதே கதைதான் தம் வீட்டிலும் நிகழ்ந்தது என்கிறுர் புலவர்.

'குரங்கின் செம்முகப் பெருங்கிளை இழைப் பொலிந்தாஅங்கு' என்பது புலவர் வாக்கு. 'செம்முகப் பெருங்கிளை' என்று குரங்கின் சுற்றத்தைச் சுட்டிக் காட்டுவது எவ்வளவு ரஸமாயிருக்கிறது, பாருங்கள்! அந்தக் குரங்குகள் இழைகள் அல்லது ஆபரணங்களை அணிந்து பொலிந்தது போலத் தான் தம் 'பெருங்கிளை'யாகிய மனைவி மக்கள் சோழன் அளித்த நகைகளால் பொலிவுற்றதும் என்று கூறுவதைப் பாருங்கள்!

இதே புலவர் இராமன் இலங்கையை வென்று பிடித்துக் கொள்வதற்கு முன்பே விபீஷணனை இலங்கைக்கு அரசனுக்கிவிட்டதையும் குறிப்பிடுகிறுர். அந்த விதமாகத் தாம் பாடும் அரசனும் எதிரிகளின் கோட்டை கொத்தளங்களைப் பிடித்துக் கொள்வதற்கு முன்பே பாணர்களுக்குப் பரிசில் வழங்கத் துணிந்து விடுவானும்.

பலராம அவதாரம் குறித்த செய்தியையும் புறநானூற்றில் காண்கிறேம். பலராமன் கண்ணன் என்ற சகோதரர் இருவரையும் தசாவதாரத்தில் சேர்த்திருக்கிறுர்கள். இந்த இரட்டைத் தெய்வங்களைப் பற்றிய செய்தி புறநானூற்றில் நக்கீரராலும் காரிக் கண்ணனுர் என்ற புலவராலும் பிரஸ்தாபிக்கப் படுவதை ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

கிருஷ்ணவதாரம் சிறப்பாகப் போற்றப் படுகிறது என்பதையும் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். கண்ணனின் திருவிளையாடல்களையும் சங்க காலத்து மக்கள் அறிந்திருந்தார்கள். அகநானூற்றிலே, யமுனை யாற்றில் ஆயர் மகளிர் நீராடும்போது, அவர்கள் துகிலைக் கவர்ந்த சிறுவனுகிய கண்ணன் அவர்கள் மரத் தழையை உடுத்துக் கொள்ளுமாறு குருந்த மரத்தை வளைத்துக் கொடுத்தான் என்ற செய்தி வருணிக்கப் பெற்றிருப்பதைக்காணலாம். இதன் உட்பொருள் பற்று அற்ற கடவுளைப் பற்ற பற்று அற்றநிலை வேண்டும் என்பது.

மக்களின் தெய்வம்

திருமாலை முழுமுதற் கடவுளாகப் பொதுமக்கள் வழிபட்டார்கள் என்பதற்கு உரிய சான்றுகளையும் சங்க நூல்களில் காணலாம். மனைவி மக்களுடன் பூவும் புகையும் (தூபமும்) கொண்டு வழிபடுகிறுர்கள் புருஷர்கள். இளம் பெண்கள் ஆபரணங்களை அணிந்து தங்களை அழகு செய்து கொண்டு கணவரோடும் குழந்தைகளோடும் திருமாலை வழிபடுகிறுர்கள். இச்செய்தியை வசீகரமாக வருணிக்கிறது மதுரைக் காஞ்சி.

அசுரர் கூட்டத்தை வென்ற திருமால் அகப்பகையையும் புறப்பகையையும் ஒருங்கே வெல்லத் துணை புரிவான் என்ற குறிப்பையும் மதுரைக் காஞ்சியில் காணலாம். திருமால் பிறந்த திருவோண நன்னளை ஊர்களிலுள்ள மக்கள் விழாவாகக் கொண்டாடி

தொண்டை நாட்டுத்தல யாத்திரை

தருமபுர ஆதீனபிரசார நிலையத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் தொண்டை நாட்டுத்தல யாத்திரை 2-8-59 மாலை பாடி என வழங்கும் திருவலிதாயத்தில் நடைபெற்றது. ஸ்ரீசோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமைவகித்தார்கள். திரு. A. N. பரசுராமன் M.A. வழிபாட்டுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார். திருவாளர்கள் ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A.L.T., N. சங்கரன் M.A.L.T., A. V. ஆவுடைநாயகம் B.A.B.L., V.M. கடிகாசலம் J.P., M. சுப்பிரமணிய முதலியார், ச. சிவகுமாரன் M.A., N. R. முருகவேள் M.A.M.O.L. G. கலியாணம் M.A., வே. நடராஜன் B.Sc. (Hons), மேயர் கம்பெனி மாசிலாமணி முதலியார் முதலியவர்கள் கலந்து கொண்டும், சொற்பொழிவுகளும் ஆற்றினர்கள்.

20-9-59 மாலை திருப்பாசூரில் வழிபாட்டுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீசோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில், திருவாளர்கள் கயப்பாக்கம் சோமசுந்தர செட்டியார் ச. சிவகுமாரன் M.A., N. R. முருகவேள் M.A.M.O.L., G. கலியாணம் M.A., வே. நடராஜன் B.Sc, (Hons), யாழ்ப்பாணம், கணபதி திருமதி. பாப்பாத்தி அம்மாள் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். அடுத்த மாத வழிபாட்டுக் கூட்டம் காட்பாடிக்கருகிலுள்ள திருவல்லம் என்றபதியில் 4-10-59-ல் நடைபெறும்.

✦ ✦ ✦ ✦

'திருக்கோயில்' இதழாசிரியர் திரு. G. கலியாணம் M.A., அவர்கள் கொங்கு நாட்டுப் பதிகளான பேரூர், மருதமலை, காரைமடை, அவிநாசி, திருமுருகன்பூண்டி, வாழைத்தோட்டத்து ஐயன் கோயில், பவானி, பாரியூர், சென்னிமலை, பாண்டிக்கொடுமுடி, கருவூர், வெஞ்சமாக்கூடல், வெண்ணெய்மலை முதலியவற்றைச் சுற்றிப் பார்த்து வந்தார்கள். அவைகளைப் பற்றிய கட்டுரைகள் இவ்விதழிலும் பின்வரும் இதழ்களிலும் வெளி வருகின்றன.

✦ ✦ ✦ ✦

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் ஸ்ரீ பெரியநாயகி அம்பாள் உடன்கூடிய ஸ்ரீ நாகேசுவரர் ஆலய ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 9-9-59-ல் தொடங்கி 14-9-59-ல் முடிவுற்றது.

✦ ✦ ✦ ✦

கரூர், தான்தோன்றி ஸ்ரீ கல்யாண வெங்கட்ரமண சுவாமி கோயிலில் புரட்டாசி பிரமோற்சவம் 30-9-59 ஆரம்பித்து 18-10-59 வரை சிறப்பாக நடைபெறும்.

✦ ✦ ✦ ✦

நாகை ஸ்ரீ கைலாசநாதர் நித்திய கல்யாணியம்மன் கோயில், அதிபத்தநாயனர் விழா 11-9-59 ல் கடற்கரையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினமே நாகை, தேசீய உயர் நிலைப்பள்ளி தமிழ்ப் புலவர் திரு. சண்முகசுந்தர தேசிகர் அவர்களைக்கொண்டு காலட்சேபமும் நடத்தப்பட்டது. நாகை அறநிலையத்துறை உதவி ஆணையாளர் திரு என். சி. நாராயணசாமி அவர்களும் விழாவில் கலந்துகொண்டார்கள்.

✦ ✦ ✦

திருவாதவூர் ஸ்ரீ வேதநாயகி அம்பிகையுடன் வீற்றிருக்கும் திருமறைநாத சுவாமி திருக்கோயிலில் 11-9-59-ல் தொடங்கி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா 14-9-59-ல் நடைபெற்றது.

மகிழ்ந்தார்கள் என்ற செய்தியையும் மதுரைக் காஞ்சியில் காணலாம்.

'நெடியோன்' என்றும், 'இருநிலங் கடந்த திருமறு மார்பின் முந்நீர் (கடல்) வண்ணன்' என்றும் பெரும்பாணாற்றுப்படை திருமாலின் புகழைக் குறிப்பிடுவதும் சிந்திக்கத்தக்கது.

சங்க காலத்திலே திருமால் மக்களின் தெய்வமாகவும் முழுமுதற் கடவுளாகவும் வழிபடப் பெற்றுன் என்பதற்குப் பரிபாடலிலும் சான்றுகள் உண்டு. இது குறித்து சில விவரங்களை அடுத்த கட்டுரையில் காணலாம்.



குடைவரைச் சிற்பங்கள்

குன்றக்குடி

தவள மதிய மெறிக்குந் தணலாலே
சரச மதனன் விடுக்குங் கணையாலே
கவன மிகவு முரைக் குயிலாலே
கருதி மிகவு மயக்கம் படவோநான்
பவள நிகரு மிதழ்ப்பைங் குறமானின்
பரிய வரையை நிகர்க்குந் தனமேவுந்
திவளு மணிகள் கிடக்குந் திருமார்பா
திகழு மயிலின் மலைக்கண் பெருமாளே

—அருணகிரிநாதர்.

'சேயோன் மேயமைவரை யுலகம்' என்று மிகவும் பழந்தமிழ் நூலான தொல்காப்பியம் கூறுகிறது. மலையும் மலைசார்ந்த இடமான குறிஞ்சி நிலத்துக்கு தெய்வம் குமரக் கடவுள். முருகப் பெருமானுக்கு மலைகள்மீது திருக்கோயில்கள் அமைத்து வழிபட்டனர் பண்டைத் தமிழ் மக்கள். அவ்வழிபாடு இன்றும் குன்றாது நடைபெற்று வருகின்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தலைமைப் புலமை பெற்றிருந்த நக்கீரனார் இயற்றிய திருமுருகாற்றுப் படையில் முருகவேள் கோயில் கொண்டெழுந்தருளிய இடங்களை ஆறுபடை வீடுகளாக அமைத்தனர். அதில் குன்றுதோருடல் என்பது ஒன்று. எங்கெல்லாம் முருகன் குன்றக் கோயில்களில் அமர்ந்துள்ளானோ அவை குன்று தோருடலின் பாற்படும். மலையரசி மைந்தன் மலைமேல் இருப்பது இயல்புடையதுதானே!

நம் நாட்டில் குமரப் பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் எண்ணில. அவைகளில் சிறந்தவைகளாகக் கருதப்படும் பதிகளில் ஒன்று குன்றக்குடி. இது இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புத்தூர்ப் பகுதியிலுள்ளது. காரைக்குடி புகை வண்டி நிலையத்திலிருந்து மேற்கே ஏழுகல் தொலைவிலுள்ளது; மதுரையிலிருந்து 45 கல் தூரம்.

இத்தலத்திற்கு, குன்றக்குடி மயூரநகரம், குன்றமாநகர், அரசவனம், கிருஷ்ணநகரம், மயில்மலை, மயூரகிரி என்ற பல பெயர்கள் உள்ளன. குன்றைத் தன்னகத்தே கொண்ட ஊராக இருத்தலின் குன்றக்குடியென்றும், மயில் வழிபட்டுச் சாபவிமோசனம் பெற்றதால் மயூரநகரம் என்றும், மலையே மயில் போன்ற உருவத்துடன் இருப்பதால் மயில்மலை என்றும், அரச மரங்கள் நிறைந்திருப்பதால் அரசவனம் என்றும் பெயர்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஊருக்கு நடுநாயகமாக மலைமீது கோயில் அமைந்திருக்கிறது. வெகு தொலைவு நான்கு பக்களிலும் கோயில் தெரியும். மலைமீது முருகப் பெருமான் கோயிலும், மலையின்கீழ் சிவபெருமான் கோயிலும் இருக்கின்றன. மலைமேல் செல்ல அழகிய படிக்கட்டுகள் உள்ளன. வள்ளி தெய்வ யானையோடு ஆறு திருமுகங்களுடன் மயில் மீதமர்ந்து குன்றக்குடிக் குமரன் காட்சியளிக்கிறார். பிரகாரத்தில் விநாயகர், நால்வர், தட்சிணாமூர்த்தி, நடராஜா, சண்டேசுவரர் முதலிய மூர்த்திகள் எழுந்தருளியிருக்கின்றனர். மலை முன் மண்டபத்தில் வீரபாகு தேவரும் இடும்பனும் இருக்கின்றனர். நுழைவாயிலில் 'தோகையடி விநாயகர்' எழுந்தருளியுள்ளார். மலைத்தோற்



குடைவரைச் சிற்பங்கள்

றத்தின் மயில் தோகை போன்ற இடத்தில் இருப்பதால் அவ் விநாயகருக்கு அப்பெயர் ஏற்பட்டது.

மலைமேல் உள்ள மூர்த்தியின் திருநாமம் ஆறுமுகக் கடவுள். கீழ்க்கோயிலிலுள்ள இறைவன் இறைவியின் திருப்பெயர்கள் தேனுற்றுநாதர், அழகம்மை என்பன. கண்ணன், நான்முகன், இந்திரன், சூரியன், இடும்பன், கருடன், மன்மதன், நாரதர், வசிட்டர், விசுவாமித்திரர், அகத்தியர், பாண்டவர் முதலியோர் இத்தலத்து இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது.

சரவணப் பொய்கை, மதுபுஷ்கரணி, மயில்தீர்த்தம், தேனாறு, சண்முக நதி முதலியவை இத்தலத்தின் தீர்த்தங்கள். சரவணப் பொய்கை மலையடி வாரத்தின் தென்மேற்கிலுள்ளது; தேனாறு ஊருக்குக் அரைகல் தொலைவில் ஓடுகிறது.

குமார தந்திர முறைப்படி நாள்தோறும் ஐந்து கால பூசை நடைபெறுகிறது, மாதக் கிருத்திகைவிழா உண்டு.வைகாசி விசாகம்,ஐப்பசி கந்தர்சஷ்டி,தைப்பூசம், பங்குனி உத்திரம் முதலிய சிறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன. விழாக் காலங்களில் காவடி எடுத்தல், தீமிதித்தல் முதலியவற்றை மக்கள் மிகவும் பக்தியுடன் கொண்டாடுகின்றனர். விழாவின் ஒரு நாள் அண்மையிலுள்ள **மயிலாடும் பாறை** என்ற இடத்திற்கு ஆறுமுகக் கடவுள் எழுந்தருளியிருந்து திரும்புவது வழக்கம்.

அடி வாரத்தில் மூன்று பெரிய குகைக் (குடை) கோயில்கள் இருக்கின்றன. இவைகனில் மலையிலேயே அமைக்கப்பட்ட ஐந்து சிவலிங்கங்கள் இருக்கின்றன. குடைவரைச் சுவர்களில் துவார பாலகர்கள், திருமால், பிரமன், ஈசுவரன், துர்க்கை, சங்கரநாரயணன், தாண்டவ மூர்த்தி முதலிய உருவங்கள் மிகவும் அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. (படங்கள் காண்க.) மலைமேல் குமரன் கோயிலுக்குப் பின் புறம் ஒரு பாறை கூரைபோல் இயற்கையாக அமைந்துள்ளது. அதை **ஞானியார் மடம்** என்று சொல்கின்றனர். அதில் பிராமி எழுத்துக் கல்வெட்டொன்று இருக்கிறது.

இத்தலத்தைப் பற்றித் தென் மொழியிலும் வடமொழியிலும் புராணங்கள் இருக்கின்றன. மயூரகிரிக்கலம்பகம், மயூரகிரிக்காதல், சண்முகநாதர் உலா, மயூரகிரிக் கோவை, மயூரகிரிப்பிள்ளைத் தமிழ் முதலிய நூல்கள் இப் பதியைப் பற்றியவை, பல தனித் தோத்திரப் பாடல்களும் உள்ளன. அருணகிரிநாதர், **குன்றக்குடி** என்ற பெயரில் இரண்டு பாடல்களும், **குன்றநகர்** என்ற பெயருடன் இரண்டு பாக்களும், **குன்றை** என்ற பெயர் வரும் ஒரு திருப்புகழும், **மயிலின்மலை** என்ற பெயருடன் ஒரு பாடலும், **மயூரகிரி** என்ற பெயரமைத்து ஒரு பாடலும் அருளியுள்ளார். ''வானடு புகழ்நாடு தேனாறு புடைசூழு மாயூரகிரிமேவு பெருமாளே'' '' வானடேழ் நாடும் புகழ் பெற்றிடு தேனாறே சூழ் துங்கமலைப்பதி மாயூரா வாழ்குன்றை தழைத்தருள் பெருமாளே'' என்பவற்றில் தேனாற்றைப் பற்றிக் கூறுகிறார். ''குலகிரி துங்கக் கிரியுயர் குன்றக் குடிவளர் கந்தப் பெருமாளே'' என்று ஒரு திருப்புகழ்ப் பாடலில் அழகு பெறப்பாடுகிறார்.

மலையின் கீழுள்ள குடைவரைக் கோயிலுள் தூண்களிலும் சுவர்களிலும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை, சுந்தர பாண்டியன், திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன், விக்கிரம பாண்டியதேவன், ஜடாவர்மன் என்ற ஸ்ரீவல்லப தேவன் முதலிய அரசர்களின் காலத்தவை. கோயிலில் பூசை நைமித்திகங்களுக்கும், விளக்கெரிப்பதற்கும், நந்தவனப் பாதுகாப்புக்கும் நிலங்கள் முதலிய தானங்கள் வழங்கியதைக் குறிக்கின்றன. ஒரு கல்வெட்டு கோயிலுக்குச் சொந்தமான நிலங்களின் பேரிலுள்ள வரியை நீக்கியதைக் குறிக்கின்றது. மற்றொன்று, **ஆளுடைய பிள்ளையாரு** (திருஞானசம்பந்தரு)க்காக நிலம் விட்டதை அறிவிக்கின்றது. கேரள சிங்க வளநாட்டின் அதளையூர்நாடு, இராஜராஜ பாண்டிய நாட்டின் இராஜேந்திர சோழ வளநாடு இவைகளிலுள்ள **திருக்குன்றக்குடி** என்று கல் வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. குன்றக்குடிக்குத் **தென் புகலூர்** என்ற பேரும் காணப்படுகின்றது. தேனாற்றுப் பாய்ச்சலில் உள்ள திருக்குன்றக்குடி என்றும் கூறப்பட்டிருக்கிறது. இடைக்குடி என்கிற இரவிகுல மாணிக்க நல்லூர், நியமம் முதலிய ஊர்களின் பெயர்களும்

காணப்படுகின்றன. திருமலையுடைய மகா தேவர், தேனுற்று நாயகர், மூலஸ்தான முடைய நாயனர், திருமலையுடைய நாயனர் என்றெல்லாம் இறைவனின் திருப்பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. வட்டெழுத்தி லுள்ள கல்வெட்டில் 'மாசிலீச்சுரம்' என்ற ஒரே சொல் காணப்படுகிறது.

இக்கோயில், திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனத்தின் நிர்வாகத்தி லுள்ள ஐந்து கோயில் தேவஸ்தானங்களில் ஒன்று. மற்றவை திருப்பத்தூர் திருத்தளி நாதர் கோயில், பிரான் மலைக்கோயில் (திருக் கொடுங் குன்றம்), திருக்கோளக்குடிக் கோயில், தேனுட்சியம்மன் கோயில் என்பன.

மயில்மே லொளிர் மணியே!
உயர்மலைமேல் திகழ்மருந்தே!
உயிர்கோயிலி னெளியே!
உணர்ந்தோதற் கரும்பொருளே!
துயில்கூரி ருட்டுன்பங் கெடத்
தொடுவேலவ! வாழி
குயில் கூவுநற் குன்ருக்
குடிக்கோனே! சிவகுருவே.

—திரு. வி. கலியாணசுந்தரனுர்.

செப்டம்பர் திங்களில் அறநிலையத்துறை ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

9-9-59 நெல்லை ஸ்ரீ காந்திமதி அம்பாள் நெல்லையப்பர் கோயிலில், நெல்லை மாவட்டத்திலுள்ள ஓதுவார்களுக்காக திருமுறைப் பயிற்சி ஆரம்பித்து வைத்தல்.

10-9-59 நெல்லை மாவட்டத்தில் நடராசருக்கான நான்கு முக்கிய இடங்களுள் ஒன்ருன கத்தாரிமங்கலத்தில் நடராசருக்குப் பால் அபிஷேகம் செய்வித்தல்.

11-9-59 திருவரங்கம் ஸ்ரீரங்கநாத சுவாமி கோயிலில் வண்ணம் தீட்டப்பட்ட சில 'திவ்வியதேசங்கள்' திறப்பு விழா.

,, திருச்சி, ஸ்ரீ தாயுமானசுவாமி கோயிலில் திருப்பனந்தாள் மடத்துத் தலைவராகிய திரு. காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்படுத்தப் (Endowed) பட்ட திருமுறை ஒலி பரப்பு துவக்க விழா.

12-9-59 திருவாடானை ஸ்ரீ ஆதிரத்னீசுவரர் கோயிலில் தேவாரக் கல்வெட்டுத் திறந்து வைத்தல்; திருமுறைக் கோயில் நிறுவுதல்.

13-9-59 காளையார்கோயில், ஸ்ரீசுவர்ணகாளீசுவரர் கோயிலில் தேவாரக் கல்வெட்டுத் திறந்து வைத்தல்; திருமுறைக் கோயில் நிறுவுதல்.

,, மதுரை ஸ்ரீ மீனுட்சிசுந்தரேசுவரர் கோயில் ஆடிவீதியில் தேவாரப் பாடசாலைத் துவக்க விழா.

,, திருபுவனம் ஸ்ரீ பூவணநாதர் கோயிலில் தேவாரக் கல்வெட்டுத் திறந்து வைத்தல்; திருமுறைக் கோயில் நிறுவுதல்.

14-9-59 திருவாதவூர் ஸ்ரீ திருமறை நாதர் கோயில் மகா கும்பாபிஷேகம்.

,, அழகர் கோயில் ஸ்ரீ கள்ளழகர் கோயில் அலுவலர்கள் இல்லங்களுக்கு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் கால்கோல் விழா.

15-9-59 திருச்சுழியல் ஸ்ரீ திருமேனிநாத சுவாமி கோயிலில் தேவாரக் கல்வெட்டுத் திறந்து வைத்தல்; திருமுறைக் கோயில் நிறுவுதல்.

விநதாசுத வாகனம்

(கருடாழ்வார்)

திரு. ஏ. டி. கிருஷ்ணமாச்சாரியார் B.A., B.L.

விரற் கிடை ரிஷிகள்

காச்யப முனிவர் விநதை கத்ரு என்று இருவரை மணந்து அவர்களுக்கு புத்திரனை விரும்பி யாகஞ் செய்வதற்கு சமித்து கொண்டு வரும்படி தேவர்கள், ரிஷிமுனிவர்களை ஏவினர் வாலகில்யர் என்கிற ரிஷிகள் அகத்திய (கட்டை விரல் அளவுள்ளவ)ரைவிட சிறியவடிவினர்; கட்டைவிரல் உள்ரேகை அளவினர். அவர்கள் ஏழெட்டுப் பேர் ஒரு பலாசஞ் சமித்தை தோளின்மேல் தூக்கிக் கொண்டு வருகிற வழியில் பசுவின் குளம்பு பதிந்த சுவடு நீரால் நிறைந்திருக்க அதில் மூழ்கிப்போய் தத்தளித்து திணறுவதைப் பார்த்து இந்திரன் பரிகாசமாய்ச் சிரித்தான்.

கருடன் தவப் பிறப்பு

வாலகில்யர்கள் கோபம் அடைந்து வேறு இந்திரனை உண்டாக்குவோம் என்று முனைந்தார்கள். இந்திரன் நடுங்கிப்போய் காச்யபரை சரண் அடைந்தான். காச்யபர் வாலகில்யரை அழைத்து அவர்கள் உண்டாக்கும் இந்திரனை தம் மகனுக்கு அளிக்கும்படி வேண்டிப் பெற்று அவனுக்கு பட்சி இந்திரன் கருடன் என்று பேரிட்டார். காச்யபரின் மனைவியர் இருவரும் கருத்தரித்து முட்டைகளைப் பெற்றார்கள். விநதை முதல் முட்டையை உடைத்தாள். அதனின்று இடுப்புக்குமேல் முழுவளர்ச்சி பெற்ற அருணன் வந்தான். அவன் தாயை வணங்கி அந்த முட்டையை உடைக்காதே. அதுவே நிறைவர்கி வெடித்து கருடன் தோன்றுவான் என்று கூறி தான் சூரியனுக்கு தேரோட்டியாகப் போய் விட்டான். கத்ருவின் முட்டைகள் (1000) பாம்புகளாயின.

விநதை அடிமை ஆதல்

விநதைக்கும் கத்ருவுக்கும் நடந்த ஒரு வாத விவாதத்தில் விநதை தோற்றுப்போனாள். கத்ருவின் மோச ஏற்பாட்டின்படி அவன் பிள்ளைகளான பாம்புகள் போய் தேவலோக குதிரையின் வெள்ளை வாலை மறைத்துக் கருப்பாகத் தோற்றுவித்தன. அதனால் பந்தயப்படி விநதை கத்ருவுக்கு அடிமை ஆனாள். கத்ரு மக்கள் பாம்புகள் விநதை மைந்தன் கருடனை அடிமைபோல் நடத்தினார்கள். எங்களைச் சுமந்து கொண்டு இங்கே போ அங்கே போ என்று அதட்டினார்கள்.

பட்சீந்திர பட்டாபிஷேகம்

தனக்கும் தன் தாய்க்கும் அடிமைத்தனம் வந்த காரணத்தைக் கேட்டு கருடன் என்ன செய்தால் சுதந்திரம் பெறுவோம் என்று நாகங்களைக் கேட்க, அமிருத கலசத்தைக் கொண்டு வந்தால் அடிமைத்தனை நீக்குவதாக சொன்னார்கள். உடனே கிளம்பி தேவலோகம் சென்று அமிர்த கலசத்தை எடுக்கையில் தேவர்களுடன் போரிட்டார். அவர்களுக்குத் துணை வந்த விஷ்ணுவும் அமிர்த கலசத்தை காக்க கருடனோடு யுத்தஞ் செய்லு ஓய்ந்து போனார். கருடா மெச்சினேன் உன் பலத்தை; என்ன வரம்வேண்டும் கேள் என்றார். நான் உமக்கு வரந்தருகிறேன். நீர் கேளும் என்றார் கருடன். எனக்கு வாகனமாயிரு என்றார் பகவான். சரி நான் உமக்கு மேலே இருக்க வரம் தாரும் என்றார் கருடன். பகவான் இவரைக் கொடியாக வைத்துக் கொண்டார். இந்திரனை வென்று திக்பாலகர்களை ஜயித்து நாகர்களை அழிக்கவே, தேவர்களும் நாகர்களும், யக்ஷர்களும் கூடி ருத்ரை, ஸுகீர்த்தி என இரு மகிஷிகளை மணம் செய்துவைத்து, பக்ஷிராஜ (இந்திரன்) பட்டாபிஷேகஞ் செய்து வைத்தார்கள்.

இராமருக்கும் கிருஷ்ணருக்கும் உதவி

கருடன் பகவானுக்கு மேல் கட்டியாகவும் விசிறியாகவும் கொடியாகவும் தோழனாகவும் தாசனாகவும் சகாயனாகவும் இருப்பார். இராமர் ஸுவேல பர்வதத்தில் நாகபாசத்தால் கட்டுண்ட பொழுது கருடன் வந்து விடுவித்தார். கிருஷ்ணவதாரத்தில் (பிரஹலாதன் பிள்ளை) விரோசனனை ஜெயித்து திருவபிஷேகத்தை (கிரீடத்தை) மீட்டு வந்து கண்ணனுக்குச் சூட்டினார். இந்த ஐதிஹ்யம் தான் நாளைக்கும் பங்குனி மாதம் ஏகாதசியன்று திருநாராயணபுரத்தில் வைரமுடியைக் கீல்கருடன் கையினலெடுத்து செல்வப்பிள்ளைக்கு சாற்றுதல். கருடபிம்பத்தில் வாஸுகி பூணூலாகவும், தக்ஷகன் அரைஞாணாகவும், கார்கோடகன் ஹாரமாகவும், குளிகனும் திருவனந்தாழ்வானும் வளைகளாகவும், பத்மன் மஹாபத்மன் குண்டலங்களாகவும், குளிகன் முடியாகவும் பன்னக (பாம்பு) பூஷணனாகவே காட்சி அளிக்கிறார். மனித உருவமும் தேவ கிரீடமும் இயற்கையும் கொண்ட இவருக்கு பெரிய திருவடி நாயனார் என்பது வைஷ்ணவ சம்பிரதாயப் பெயர். விஷ்ணுவின் மற்றொரு வாகனமான அநுமாருக்கு சிறிய திருவடிநாயனார் என்று பெயர்.

கருடன் உருவம்

ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருமாளிகை வாயிற்படி மேலும், கோயில் முகப்புகளிலும், எடுபிடி கொடி விருதுகளிலும், ஸ்ரீமுகங்களிலும் சம்பிரதாய நூல் முகப்புப் பக்கங்களிலும், திருமண், சங்கு சக்கரத்தோடு இடதுபுறம் கருடனு (பெரிய திருவடியு)ம் வலதுபுறம் ஆஞ்சநேயரு (சிறிய திருவடியும்)ம் கூப்பிய கையுடன் சேவை சாதிப்பர். இவரை வேதாத்மா என்றும் பஞ்சப் பிராணன்களுக்கும் அதிதேவதை என்பதற்கு ஸத்ய, ஸுபர்ண. கருட. தார்க்ஷ்ய விஹகேச்வரர் என்றும் பிராணனுக்கே பிராணன் என்றும் பாஞ்சராத்ர, பாத்ம ஸம்ஹிதைகள் வர்ணிக்கின்றன.

காலை கருட தரிசனம்

உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்து ஆகுமா என்று ஒரு பழமொழி. இதிலிருந்து மிகச் சிறிய பறவை குருவி. மிகப் பெரிய பறவை பருந்து என்பது தெரிகிறது. அந்தப் பருந்துக்கே கழுத்தைச் சுற்றி வெளுப்பாய் இருந்தால் அதைக் கருடன் என்கிறோம். கருடனைக் கண்டால் பலர் கை கூப்பி வணங்குகிறார்கள். காரணம் கருடன் கிருஷ்ணனுடைய வாஹனம். அது அவரைக் கூப்பிடுகிறது என்கிறார்கள். காலையில் கருடனைக் கண்டால் கருட சேவையைக் கண்டாற்போல் அதிருஷ்டமாம்.

மதில்மேல் கருடன்

ஹிந்துக்களுடைய ஆலயங்களில் சிவன் கோவில், காளிகோவில், பெருமாள்கோவில் என்று பொதுவாக மூன்று வகை. இவற்றை வெளியிலிருந்தே இன்னகோவில் என்று கண்டு பிடிப்பதற்கு ஒருவழி மதிலின் நாலு மூலைகளிலும் வைத்திருக்கும் சின்னம் ரிஷபமா, சிங்கமா, கருடனா என்பதைப் பார்த்தாலே சொல்லிவிடலாம். மதில்மேல் உள்ள கருடன் கூப்பிய கையுடன் பத்மாசனத்தில் வீற்றிருப்பார். வாகன கருடன் ஒரு கால் மண்டியிட்டு இரு கைகளையும் ஏந்தியபடி வீற்றிருப்பார்.

கருட வாகனம் பலவிதம்

பெருமாள் கோயில்களில் ஆண்டுதோறும் பிரம்மோற்சவம் நடைபெறும். கோவிலின் ஆகமம் பாஞ்சராத்ரமானால் மூன்றும் நாள் காலையும் வைகானசமானால் ஐந்தாம் நாள் இராத்திரியும் கருடன்மீது சுவாமி புறப்பாடு நடக்கும். அதற்கு கருடசேவை என்று பெயர். மார்கழி மாத (வைகுண்ட) ஏகாதசி அன்று தனி கருடசேவை உண்டு. கருட வாகனங்கள் பல விதம். மரம், வெள்ளி, பொன், கல்லால்கூட செய்திருக்கும்.

கல் கருட சேவை

திருநறையூர் என்கிற நாச்சியார் கோயிலில் கருடன் கல் கருடன். ஆஸ்தானத்திலிருந்து நாலு அர்ச்சகர் அக்கல்கருடனை வெளியே கொண்டு வருகிறார்கள். பதினாறு பிராமணர் எடுத்து மண்டபத்தில் வைக்கிறார்கள். முப்பத்திரண்டு பிராமணர் மகாமண்டபத்துக்கு எடுத்து வருகிறார்கள். நறையூர்நம்பி (பெருமாள்) ஆரோகணித்த பிறகு இருநூறு ஸ்ரீபாதந்தாங்கிகளால் திருவீதி உற்சவம் நடக்கிறது. முக்கோடி துவாதசியன்று காலையிலும், மாசி பிரம்மோற்சவத்தில் ஒரு நாள் இராத்திரியும் இந்தக் கல்கருடசேவை நடைபெறும். திருமங்கை ஆழ்வார் திரு இலச்சினை பெற்ற ஸ்தலம் இதுதான்.

600 008. ★
158333

காஞ்சி கருட சேவைகள்

அத்திகிரி என்கிற காஞ்சீபுரம் வரதராஜப் பெருமாளுக்கு வைகாசி விசாகத்தன்று ஜகத் பிரசித்தியான கருடசேவை. இக்கருடன் ஸ்வர்ன ஸ்வரூபி இவர் கோபுர வாசலில் வரும்போது கற்பூர ஹாரதி செய்து அர்ச்சகர் குடையினால் திருமுக மண்டலத்தை மறைப்பது தக்கான் குளக் கரையில் (சோளங்கிபுரம்) தொட்டையாசாரியருக்கு சேவை சாதிக்க என்கிறார்கள். மீண்டும் ஆனிமாதம் ஸ்வாதி நட்சத்திரத்தில் (பெரியாழ்வார் சாற்றுமறை) வைநதேயஜயந்தி என்று மற்றொரு தங்கக் கருடன் மேல் கருடசேவை உண்டு. மூன்றாவதாக ஆடிப் பௌர்ணமியன்று கஜேந்திர மோட்சத்துக்கு ஒரு கருடசேவை குளத்துக்கு எழுந்தருளுகிறார்,

ஏழு கருட சேவைகள்

வைகுண்ட ஏகாதசியன்று இந்தத் திவ்ய தேசத்தில் வைகுண்டப் பெருமாள், எதோத்காரி பெருமாள், அஷ்டபுஜப் பெருமாள், விளக்கொளிப் பெருமாள், உலகளந்த பெருமாள் (வாமனாவதாரம்), பாண்டவ தூதப் பெருமாள், பவளவண்ணப் பெருமாள் ஆகிய ஏழு மூர்த்திகளும் தனித்தனியே கருடவாகனத்தின்மீது ஆரோகணித்து கங்கைகொண்டான் மண்டபத்துக்கு எழுந்தருளி மண்டகப்படி ஆனபிறகு நாலு இராஜ (காமாட்சியம்மன் மாட) வீதிகளிலும் பவனி வந்து திரும்பிச் செல்வது வழக்கம்.

ஐந்து கருட சேவைகள்

ஒவ்வொரு ஊரிலும் பெருமாள் கோயிலுக்கு எதிரே பெருமாளைப் பார்த்து கைகூப்பிய வண்ணம் நிற்பவர் கருடன் என்கிற பெரிய திருவடி நாயனார். ஸ்ரீ வில்லிபுத்தூரில் மட்டும் இவருக்குத் தனி கௌரவம் அளித்து அரங்க மன்னாருக்குத் ஆண்டாளுக்கும் சரிசமமாகப் பக்கத்தில் இடங் கொடுத்திருக்கிறார்கள். இங்கே திருவாடிப்பூர உற்சவம் ஐந்தாம் நாள் காலை திருத்தங்காலப்பன், அழகர் கோயில் சுந்தரராஜப் பெருமாள், திருமலை ஸ்ரீநிவாசன், வட பெருங்கோயிலுடையான், அரங்கமன்னார் ஆக ஐந்து மூர்த்திகளும் ஐந்து கருட சேவையாக ஆண்டாள் ஹம்ச வாகனத்தின் மேலும், பெரியாழ்வார்

ஆனை வாகனத்தின் மேலும் எழுந்தருளுவது வழக்கம்.

ஒன்பது கருட சேவைகள்

ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வார் உற்சவத்தில் ஐந்தாம் நாள் இராத்திரி நவதிருப்பதி என்கிற ஒன்பது திவ்விய தேசத்து எம்பெருமான்கள் திருக்குருகூர் பொலிந்து நின்ற பிரான் என்கிற ஆதிநாதப் பெருமாள், வரகுணமங்கை விஜயாஸநர், திருக்குளந்தை மாயக்கூத்தர், திருப்பேரை மகர நெடுங்குழைக்காதர் என்கிற நிகரில் முகில் வண்ணர், ஸ்ரீ வைகுண்டத்து கள்ளபிரான் என்கிற வைகுந்த நாதர், திருப்புளிங்குடி காய்சின வேந்தர் என்கிற வைகுந்த நாதர், திருப்புளிங்குடி வைத்தமாநிதி, திருக்கோளூர் தேவபிரான் என்கிற அரவிந்தலோசனர், தொலைவில்லிமங்கலம் ஸ்ரீநிவாசன் என்கிற செந்தாமரைக் கண்ணன் ஆகிய ஒன்பதின்மரும் ஒன்பது கருட வாகனங்களின்மேல் எழுந்தருள அவர்களை ஒவ்வொருவராக நம்மாழ்வார் மங்களாசாஸனம் (வலம் வரல்) செய்வது சேவிக்கத் தக்கது.

பதினொரு கருட சேவை

மணி மாடக் கோயில் என்கிற திருநாங்கூரில் தை அமாவாசையன்று பதினொரு கருடசேவை உண்டு. திருமங்கை ஆழ்வாருக்கு சேவை சாதிக்க பதினொரு திவ்ய தேசத்து எம்பெருமான்கள் முறையே மணிமாடக் கோயில் நந்தாவிளக்குப் பெருமாள், வைகுந்த விண்ணகரம் தாமரைக் கண்ணுடையபிரான், அரிமேய விண்ணகரம் குடமாடு கந்தப் பெருமாள், வண்புருடோத்தமம் (திருத்தேவனார் தொகை) மாதவப் பெருமாள் என்கிற புருஷோத்தமப் பெருமாள், செம்பொன் செய்கோயில் தெய்வநாயகன், திருத்தெற்றியம்பலம் செங்கண்மால், திருமணிக்கூடம் மணிக்கூட நாயகன், காவளம்பாடி கோபால கிருஷ்ணன், திருவெள்ளக்குளம் கண்ணன் நாராயணன், திருப்பார்த்தன்பள்ளி தாமரையாள் கேள்வன், தலைச்சங்க நாண்மதியம் நாண்மதியப் பெருமாள் என்கிற வெண்சுடர்ப் பெருமாள் ஆகிய பதினொருவரும் தங்கக் கருட வாகனத்தில் ஆரோகணித்து எழுந்தருள திருமங்கை ஆழ்வார் (ஆலிநாடன், அருள்மாரி, அரட்டமுக்கி, அடையார்சீயம், கொங்குமலர்க் குழலியர்வேள், மங்கை வேந்தன், பரகாலன், கலியன்) ஹம்ஸ வாகனரூடராய் அப்பதினொரு எம்பெருமான்களையும் மங்களாசாஸனம் செய்வது ஒரு முறை சேவித்தவர் நெஞ்சைவிட்டு ஒரு நாளும் அகலாது.

நூறு கருட சேவைகள்

வடவேங்கடமென்கிற திருமலையில் ஒரேநாளில் பல கருடோற்சவங்கள்கூட நடைபெறுவதுண்டு (பிரார்த்தனைக்காரர் பணங்கட்டினால்). எனவே வருஷத்தில் நூறு இருநூறு கருடசேவைகள்கூட நடைபெறும். இவற்றுக்கு நாள் நட்சத்திரம், வேளை சமயம் என்கிற பாகுபாடு இல்லை என்றும் எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கும். இந்தக் கருடவாகனப் பெருமையை தியாகராஜர் "வினதாசுதா வாகனுடை" என்கிற (ஹரிகாம்போதி) அமர கீர்த்தனத்தில் பாடியிருக்கிறார்.

நாகப்பட்டினத்தில் விழா—நம்பியார் பொன் மீனுடன் திரும்புதல்.

நாமக்கல்—நரசிம்மசுவாமி கோயில்

'சிங்கமாய தேவதேவன்'

(நரசிம்மாவதாரம்)

பி. ஸ்ரீ.

இரணியாட்சன் வராக மூர்த்தியால் கொல்லப்பட்டபின், அண்ணனாகிய இரணியன் தன் வரபலத்தையும் வேறு பலங்களையும் பெருக்கிக் கொண்டு, பழிக்குப் பழிவாங்கும் உள்ளத்துடன் உலகத்தை ஹிம்ஸித்து வந்தான். மக்களைத் துன்பப்படுத்துவது கண்ணால் காணமுடியாத கடவுளைத் துன்பப்படுத்துவதுதான் என்று எண்ணமிட்டான் இரணியன். மக்களுக்குப் பணிசெய்வது ஆண்டவனுக்கே பணிசெய்வதாகும் என்ற பக்தர் கொள்கையைத் திரித்து இந்தச் சர்வாதிகாரி தன் ஹிம்ஸைக் கொள்கையையும் உருவாக்கிக்கொண்டான்.

தன்னுடைய தவவலிமையையும் வரபலத்தையும் சொத்தாகக் கொண்டு செல

வழித்து ஹிம்ஸை—வாழ்க்கையும் நிகரற்ற போக வாழ்க்கையும் வாழ்ந்தான். இவனுடைய இராச்சியத்திலே திருமாலின் திருநாமத்தையோ, சிவநாமத்தையோ ஒருவரும் சொல்லக்கூடாது; இரணிய நாமத்தையே சொல்ல வேண்டும்; இரணியனையே கடவுளாக வணங்கவேண்டும். இரணியன் புகழையே பாடசாலைகளில் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆணோ பெண்ணோ அலியோ, உயிர் உள்ளதோ இல்லாததோ, காண்பதோ கருதுவதோ, தன்னைக் கொல்ல முடியாதபடி வரம் பெற்றிருந்தான். மண்ணிலும் மரணமில்லை: விண்ணிலும் மரணமில்லை. எவரும் கொல்லவும் முடியாது, இவன் வலிமையைக் குறைக்கவும் முடியாது. சாபமும் இவன் விஷயத்தில் பலிக்காது.

பகலிலும் சாவு இல்லை; இரவிலும் சாவு இல்லை; வெளியிலும் சாவு இல்லை; உள்ளிலும் சாவு இல்லை. 'ஆத்மாவைத் தீ சுடாது; ஆயுதம் கொல்லாது......' என்றெல்லாம் ஞானிகள் சொல்லுகிறார்கள் அல்லவா?— அத்தகைய சக்தியை ஆத்மாவில் நம்பிக்கையில்லாத இரணியன் தன் உடம்பு விஷயத்தில் பெற்றிருந்தான், வரபலத்தினால், 'பக்தரும் மெய்ஞ்ஞானியரும் நமனுக்கும் அஞ்சுவதில்லை, சாவுதான் அவர்களைக் கண்டு செத்துப் போகிறது!' என்று கூறுவதுண்டு: இரணியன் ஆதிக்கத்திலோ எமனும் நடுநடுங்கிச் சாவாமல் செத்துக் கொண்டிருந்த கோழைகளில் ஒருவனாகவேதான் இருந்தானும்.

தவ-வரபலங்களின் சக்தியுடன், பகுத்தறிவின் பரிபூர்ண சக்தியையும் இரணியன் உணர்ந்திருந்தான். எனவே, பகுத்தறிவைக் கொண்டு தன் வலிமைக்கு எப்படியெல்லாம் அரண்கள் அமைத்துக்கொள்ள முடியுமோ அப்படியெல்லாம் அமைத்துக் கொண்டான். இத்தகைய இரணியன் பக்தியெல்லாம் மூடபக்திதான் என்று நம்பிய போதிலும், அந்த மூட பக்தியின் சக்தியையும், தன் ஆதிக்கத்திற்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்ள முயன்று, தெய்வ வழிபாட்டுக்குப் பதில் இரணியவழிபாடு மக்களிடையே தழைக்க வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் அதிஜாக்கிரதையாகச் செய்திருந்தான்,

செய்துகொண்டே இருந்தான். எத்தகைய நாத்திகம் இது, பாருங்கள்!

'ஆளும் அரசன் ஆண்டவன் ஆகப் பார்க்கிறானே' என்றால் அது எதேச்சாதிகாரத்தின் 'எவரெஸ்ட்' சிகரத்தைக் குறிப்பிடுவதாகும். இத்தகைய நிலையை இரணிய ஏகாதிபத்தியமும் அடைந்தது என்பது ஹிரண்யன் 'வதைப்படல'த்திலே கம்பன் குறிப்பு. இத்தகைய அதிகாரத்தால் எந்த அரசனும் அசுரனாகக்கூடும் என்றும் உய்த்துணர வைக்கிறான் கவிஞன்.

'கடவுளுடைய வழிகள் விசித்திரமானவை' என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள். ஆண்டவனின் தண்டனை-வழிகளும் விசித்திரமானவை. தன்னை நம்பாதவர்களைக் கடவுள் எப்படித் தண்டிக்கிறான் என்பதை ஒரு புலவர், 'இலன் என இகழ்ந்தார்க்கு இல்லையும் ஆயினை!' என்று சொல்லி இருக்கிறார். 'இல்லை' என்பவர்களுக்குத் தன்னை 'இல்லை' என்பதாகவே செய்து கொண்டு விடுகிறாராம். இரணியன் விஷயத்திலும் இப்படிச் செய்து கொண்டதுடன் வேறொரு விசித்திரமான தண்டனையையும் ஆண்டவன் அவனுக்குக் கொடுக்க உளம் கொண்டான்.

மகன்தான் தந்தைக்குத் தண்டனை! மகன் இளம் பருவத்திலிருந்தே தருமப்பற்றும் தெய்வபற்றும் உள்ளவனாக வளர்ந்து வந்தான். இரணியனுக்கும் பிள்ளைமைப் பாசத்திற்குக் குறைவில்லை! பிள்ளையைக் கண்டதுமே மனம்மகிழ்ந்து உருகினான். கல்வி கற்கும் பிராயம் வந்ததும் அந்தணன் ஒருவனை அழைத்துக் கற்பிக்க ஏற்பாடு செய்தான். இந்த ஆசிரியனைக் கம்பன் 'எல்லையில் அறிஞன்' என்று குறிப்பிடுகிறான்.

இரணியன் பெயரை ஓதச் சொன்னான் குரு. சிறுவனோ, ஓம் நமோ நாராயணாய என்றான். அந்தணன் நடுங்கி,

கெடுத்து ஒழிந்தனை
என்னையும் உன்னையும்,
கெடுவாய்!

என்று சொன்னதாகக் கம்பன் பாடுகிறான். அறிவு எல்லையில்லாமல் இருந்த போதிலும் ஒழுக்க வன்மை இல்லாவிட்டால் பயனில்லை என்பது குறிப்பு.

அந்தணன் தொடர்ந்து, 'இப் பெயர் உரைத்து எனைக் கெடுத்திடல் (கெடுத்து விடாதே)' என்று சொன்னான். இரணிய புத்திரனான பிரஹலாதனே இந்த அந்தணன் வற்புறுத்தலுக்கு இசையவில்லை. உடனே மறையவன் இரணியனுக்கு அறிவிக்கிறான். நடந்ததை அப்படியே சொல்லவும் தைரியமில்லையாம். 'மைந்தன் சொன்ன சொல்லைச் சொல்லுவாய்' என்று இரணியன் தைரியப் படுத்தியும், அந்தணன் அதைச் சொல்லப் பயப்படுகிறான். தலைமீது கையை வைத்துப் கொண்டு,

உரகம் அன்னசொல்
யான்உனக்கு உரைசெயின்,
உரவோய் !
நரகம் எய்துவென்;
நாவும்வெந்து உகும் !

[உரகம்-பாம்பு, உரவோய்-அறிவாளியே, உகும்-உதிர்ந்துவிழும்.]

என்று பதில் சொன்னான்.

மைந்தனை வரவழைத்துத்தான் அவன் சொன்னது இன்னது என்பதையே இரணியன் தெரிந்து கொள்ள முடிந்தது. மகனுடைய மனநிலை கோபம் மூட்டியது. 'என் தம்பியை, உன் சிற்றப்பனைப் பன்றியாகிக் கொன்றவனுடைய திருநாமம் சொல்லிப் பக்தி பண்ணுவதற்கோ உன்னைப் பெற்றேன்' என்று சீறினான். பிரகலாதன் எவ்வளவோ அறிவுறுத்திப் பார்த்தும் பயன்படவில்லை.

இரணியன் பெருஞ்சினமுற்றுப் பிரகலாதனைக் கொல்லுமாறு தன் வீரர்களை ஏவுகிறான். கொலையாளிகளின் ஆயுதங்களால் பிரகலாதனைக் கொல்ல முடியவில்லை. 'தீயில் தள்ளுங்கள்' என்கிறான். ஹரிநாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும் பிரகலாதனுக்குத் தீயும் குளிருகிறது. பாம்புகளைக் கடிக்க விடுகிறான். அஷ்ட நாகங்கள் கடித்துப்பார்த்தும், அந்த விஷமும் அமிர்தமாகிறது ஆண்டவன் திருப்பெயரை மறவாதவனுக்கு. யானையை ஏவுகிறான்; அதுவும் அஞ்சித் தொழுது அப்பால் போகிறது! மறுபடியும் வற்புறுத்தி ஏவ அந்த யானையின் கொம்புதான் முறிந்து போகிறது. கல்லைக்கட்டிக் கடலில் போட்டுப் பார்த்தும், அந்தக் கல்லும் தெப்பமாகி மிதக்கக் காண்கிறோம்.

தன்னுடைய கொலை முயற்சிகள் எல்லாம் வீணாகிவிட்டது என்று கண்டதும் இரணியன் 'நானே இவன் உயிரை உண்டு விடுவேன்' என்று வானம் நடுங்க வருகிறான் இரணியன். அப்படி வருகிறவனை வணங்குகிறான் மைந்தன். கடவுள் நிலைகுறித்து உரையாடுகிறான்.

சாணினும் உளன்; ஓர்தன்மை
அணுவினைச் சதகூறு இட்ட
கோணினும் உளன்; மாமேருக்
குன்றினும் உளன்; இந்நின்ற
தூணினும் உளன்; நீசொன்ன
சொல்லினும் உளன்; இத்தன்மை
காணுதி விரைவின் !

என்றான்.

'இந்தத் தூணிலும் இருக்கிறானா பார்த்து விடுவோம்! இங்கே உன்னால் காட்ட முடியாவிட்டால், நான் யானையைச் சிங்கம் அடித்துத் தின்பது போல் உன்னைத் தின்று இரத்தத்தையும் குடிப்பேன்' என்று கர்ஜித்துக்கொண்டே கையால் தூணில் ஓங்கி அறைகிறான். உடனே பிளந்த தூணுக்கு இடையே சிவந்த கண்களுடன் சிரிக்கும் சிங்கத்தைப் பார்த்து விடுகிறான்.

இரணியனின் கொடுமையெல்லாம் திரண்டு ஒரு உருவமாகத் தோன்றுவதுபோலக் காட்சியளிக்கிறது நரசிங்கம். இரணியன் சிறிதும் பயப்படாமல் போருக்குச் சித்தமாகிறான். தூணில் பிறந்த சிங்கம் வளருகிறது வளர்ந்து கொண்டே இருக்கிறது. இரணியனுடைய அசுரசேனை எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவிற்குத் தக்கபடி வளர்ந்து விடுகிறது நரசிங்கம்!

துஷ்டர்களையெல்லாம் அழிக்கும் அந்தச் சிங்கம் அசுரர் அல்லாதாரைத் தாய் போல் வயிற்றில் வைத்துக் காப்பாற்றுகிறது என்றும் கம்பன் கூறியுள்ளான். நரசிங்கம் அசுரர்களுடன் செய்த அந்தப் பெரும் போராட்டத்திலே,

தருமமும் சலித்தது
அம்மா

என்கிருன் கவிஞன். எனினும் தருமம் பேரன்புடன் பாதுகாக்கப்பட்டது என்றும் தெரிவிக்கிருன். அதர்மத்தையே 'கருவும் தள்ளி' அழித்தொழித்து விட்டதாம்.

இர்ணியன் ஒருவன்தான் மிச்சம். உருவிய வாளுடன் போரிடுகிருன். இந்த நிலையில் கூடப் பிரகலாதனின் பேச்சை அலட்சியமாக உதறித்தள்ளுகிருன். 'வணங்காமுடியனு'கிய நான் வணங்குவேனே உன் தெய்வத்தை என்கிருன். 'நரசிங்கத்தை வீழ்த்திக் குற்றுயிராக்கிய பின் உன்னையும் வெட்டித் தள்ளுவேன்' என்கிருன். 'பிறகு இரத்தம் சொட்டும் அந்த வாளைத் தொழுவேன்' என்று சொல்லிச் சிரிக்கிருன்.

தெய்வத்தைத் தொழ மறுப்பவன் வாளைத் தொழ விரும்புவதன் மனோதத்துவம் ஊன்றி உணரத் தக்கது. தெய்வ பக்தியை ஒழிக்க முயல்பவனுக்குக் கொலைக் கருவியே தெய்வமாகி விடுவதைக் காண்கிறோம். இந்தத் தெய்வம்தான் எந்த அளவிற்குக் காப்பாற்ற முடியும்? வாளை எடுத்தவன் வாளால் அழிவான், கொடுமை இழைத்தவன் கொடுமையால் ஒழிவான் என்பது சூட்சும இயற்கை விதி அல்லவா ?

அவதார தத்துவம்

நரசிங்க மூர்த்தி இரணியனது மார்பைப் பிளந்து இவனை அழித்துவிட்டான் என்பது கதை.

தீயெழப் பிளந்து நீக்கித்
தேவர்தம் இடுக்கண் தீர்த்தான்.

என்பது கம்பன் வாக்கு. கொடுமை தன்னைக் காட்டிலும் பெரியதொரு கொடுமையால் அழித்து ஒழிக்கப்படும் என்பது நரசிங்க அவதாரத்தின் சன்மார்க்க உட்பொருள்.

இப்படிக் கொல்லப்பட்ட இரணியன் விஷயத்திலும் இறைவனது மறக்கருணை பயன்படக் காண்கிறோம். திருத்த முடியாததைத் தீர்த்துவிட வேண்டியதுதான் என்று கூறுவோருமுண்டு. திருத்த முடியாததைத் தீர்த்துத் திருத்துகிறது இறைவனின் மறக்கருணை என்பதும் அவதாரத் தத்துவத்தின் ஓர் அம்சமாகும். ஆண்டவனது அறக்கருணையிலும் மறக்கருணையிலும் எல்லா இந்து சமயிகளுக்கும் நம்பிக்கையுண்டு. துவார பாலகனுக இருந்து சாபம் பெற்ற இரணியனுக்கு ஒரு பிறவி கழிந்து போகிறது என்பது கவனிக்கத் தக்கது.

சிங்கப் பெருமான் சீற்றம் தணிந்து சாதுக்களுக்கு அபயம் அளிக்கிருன். தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்கித் திருமகள் வந்ததும் சிங்கப் பிரான் பிராட்டியை அருளோடு நோக்குகிருன். அதனுல் லட்சுமி–நரசிம்ம மூர்த்தியை உபாசிப்பது நலம் என்பர். இந்த உபாசனையால் அசுரசக்திகளான இடையூறுகளை ஒழித்து நல்லவழியில் அபார வெற்றிகளை அடைய முடியும் என்பது உபாசகர்களின் நம்பிக்கை.

பிரகலாதன் விஷயத்தில் நரசிங்கமூர்த்தியின் அருள் சிறப்பாகப் பொங்குகிறது. திருமாமகளைக் காதலால் நோக்கியதுபோல் அன்பனை பிரகலாதனையும் நோக்குகிருன். 'உனக்கு என்ன வரம் தேவை' என்று உருகிக் கேட்கிருன். 'அன்பு பெரும் பேறு ஒன்றே அடியேனுக்கு அருளவேண்டும்' என்று வேண்டுகிருன் அன்பன்.

தன்னைப் போல் அந்த அன்பனும் நித்தியனுக வாழ்வான் என்றும், தன்னைத் தொழுது பயன் பெறுவதுபோல் அவனைத் தொழுதும் பயன் பெறலாமென்றும் நரசிங்க மூர்த்தி கூறுவதாகக் கம்பன் பாடுகிருன். 'நாளுகவே நீயும் வளர்க !' என்ற அதிவிசித்திர ஆசியுடன் நரசிங்கப் பெருமான் பிரகலாதனுக்கு முடிசூட்டி வைக்கிருனும்.

'ஒன்றுமே வேண்டாது உலகனைத்தும் ஆளுவர்காண்' என்ற பாரதி வாக்கு இங்கே நினைவிற்கு வருகிறது. அன்பு ஒன்றே பெரும் பாக்கியம் என்று கருதியவன் மூவுலகிற்கும் அரசாக இறைவனுலேயே முடிசூட்டப் பெற்ருன் என்பது கதை.

பிரகலாதன் இறைவன்மீது அன்பை மட்டும் குறிப்பிட்டு வேண்டிக் கொள்ளவில்லை.

தாயின் மண்ணுயிர்க்கு
அன்பினன்

என்பதல்லவா பிரகலாதனின் நிலை? எனவே, தாயைப்போல் எல்லா உயிர்களுக்கும் அன்பு செய்யவேண்டும், பணிபுரிய வேண்டும் என்பதுதான் பிரகலாதன் ஆசை. இந்த விருப்பத்

தைத் தெரிந்து கொண்ட சிங்கப்பிரான் மிக்க மகிழ்ச்சியுடன் அத்தகைய அன்பனும் தன்னைப் போல் மன்னுயிருக்குப் பணிபுரிவான், அன்பு பாராட்டுவான் என்றே வரம் கொடுப்பதைக் காண்கிறோம்.

> **எவ்வுயிரும் பராபரன்சந் நிதியதாகும்,**
> **இலங்கும்உயிர் உடலனைத்தும் ஈசன்கோயில்**

என்பது சைவத்தைப் போல் வைணவத்திற்கும் உரிய கொள்கை என்பதையும் பிரகலாத சரித்திரத்தின் உட்பொருளாகக் கண்டு கொள்ளலாம்.

'பரமண்டலத்திலுள்ள பரம பிதாவைப் போல் நீங்களும் பரிபூரணமாக வாழவேண்டும்' என்ற குறிக்கோளைக் கிறிஸ்து வேதத்தில் காண்கிறோம். பிரகலாத சரித்திரத்திலோ இறைவனுக்கு அன்பன் எல்லா உயிர்களுக்கும் அன்பனாகிப் பணிபுரிவான், இறைவனைப் போலவே அவ்வளவு அன்புள்ளவனாகப் பணிபுரிவான் என்ற குறிக்கோளையும் காண்கிறோம்.

ஆழ்வார்களும் நரசிங்க அவதாரமும்

இந்த அவதாரம் குறித்து ஆழ்வார்கள் வெளியிட்டிருக்கும் கருத்துக்களுக்கு ஒரு வகை விளக்க உரைபோலவே அமைந்திருக்கின்றன கம்பன் கருத்துக்களும். உதாரணமாக, முதலாழ்வார் மூவருள் முதல்வரான பொய்கையார் நரசிங்க அவதாரத்தைக் குறிப்பிடும்போது, இறைவன் உலகையளந்து அசுர இருளைப் போக்கியது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது இரணியனது மார்பைக் கிழித்தெறிந்ததும் என்று பொருள்படப் பாடியிருக்கிறார்.

அதர்மம் பயங்கரமான புரட்சி வெறியுடன் அழிக்கப்படும் என்பதைத் திருமகளும் அஞ்சும்படி அவ்வளவு கோபாவேசமாகிய தர்மாவேசத்துடன் இரணியன் வதஞ்செய்யப்பட்டான் என்ற பொய்கையார் வாக்கும் (முதல் திருவந்தாதி 23) ஆதரிக்கக் காண்கிறோம். இதே போக்கைக் கம்பன் கவிதையில் விரிவாகக் காண்கிறோம்.

கொடுமை தனக்கும் மேலான கொடுமையால் அழிக்கப்படும் என்ற கருத்தைத் திருமழிசையாழ்வாரும் நரசிங்க அவதாரத்தின் ஒரு வகை உட்பொருளாகக் காட்டுகிறார். இரணியனை அப்படி வதைத்தவன் சாதுக்களால் ஆராதிக்கப் படுகிறான் என்பது திருச்சந்த விருத்தத்தில் குறிக்கப்படுகிறது. (பாசுரம் 23). நரசிங்க மூர்த்தியைச் சிங்கமாய தேவ தேவ! என்று அழைக்கிறார் திருமழிசை ஆழ்வார் அடுத்த பாசுரத்திலே.

ஆண்டவன் தன் விஷயத்தில் தீங்கு செய்தாலும் பொறுத்துக் கொள்வான். ஆனால் தனக்கு உயிர்நிலையாக இருக்கும் அடியவருக்குத் தீங்கு செய்தால் அதைப் பொறுக்கமாட்டான் என்று உட்பொருளை நரசிங்க அவதாரக் கதையில் கண்டு காட்டுகிறார் திருமங்கை மன்னன். (பெரிய திருமொழி 5-ம் பத்து). இந்த ஆழ்வார் இரணியனைப் 'பொன்பெயரோன்' என்ற பெயராலும் குறிப்பிடுகிறார். ஹிரன்யம் என்ற வட சொல்லுக்குப் பொன் என்ற பொருள் உண்டு.

ஆழ்வார்களின் தலைவராகிய நம்மாழ்வாரும் நரசிங்க அவதாரத்தில் தத்துவம் புலப்படப் பாசுரம் இட்டிருக்கிறார்.

> **ஆடிஆடி அகம்கரைந்து, இசை**
> **பாடிப்பாடிக் கண்ணீர்மல்கி, எங்கும்**
> **நாடிநாடி 'நரசிங்கா!' என்று**
> **வாடிவாடும் இவ்வாள் நுதலே!**

[மல்கி-பெருகி. வாடிவாடும்-மிகவும் வாடுகிறாள். வாள்நுதல்-ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்.]

என்ற திருவாக்கிலே தம்மை நாயகியாக வைத்துக் கொண்டு ஆழ்வார் தம் பரம பக்தியை வெளியிடுவதைக் காண்கிறோம். இங்கே 'நரசிங்கா!' என்று பெருமானைக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

நரசிங்கமாகத் தோன்றி அன்பனான பிரகலாதனுக்கும் உலகத்திற்கும் உதவியருளிய பெருமான் நமக்கு உதவவில்லையே என்று பெண் வருந்துவதாகத் தாய் பேசுகிறாள், இந்தப் பாசுரத்திலே. அகம் கரைந்து 'நரசிங்கா' என்று அழைக்கிறாளாம். முரட்டுத் தோற்றத்திற்குள் குகன் கரைகாணாக் காதலை மறைத்து வைத்திருந்தது இராமனுக்குப் புலப்பட்டதுபோல், கோர ஸ்வரூபத்திற்குள் தன் பேரன்பை மறைத்து வைத்துக்

கொண்டு பிரகலாதனுக்கும் உலகத்திற்கும்- இரணியனுக்கும் கூட—அருள் செய்த அந் தத் தத்துவ விசித்திரத்தை நம்மாழ்வார் அகம் கரைந்து அனுபவித்திருக்கிறார் என்று ஊகிக்கலாம்.

இத்தகைய பல தத்துவங்களை நரசிங்க அவதாரத்திலே நோக்கிக் கண்டு கொள்ள லாம் என்பது வைணவர்களின் கொள்கை. ஸ்ரீ வேதாந்த தேசிகன் வடமொழியில் இயற்றியிருக்கும் '**ஸ்ரீ தசாவதார ஸ்தோத்திர**'த்தில் இந்த அவதாரம் பற்றிப் பேசும்போது, 'இரணிய கசிபுக்கு நேர்ந்த பாக்கியமே பாக்கியம். திடீரென்று பகவான் தோன்றியதால் அந்த மகாசுரனுடைய வீட்டுத் தூண் மலடாக இராமல் புத்திரவதியாகிவிட்டது!...... எவ்விதத்திலாவது பகவானுடைய தொடர்பு பெற்றவர்களுக்கு உயர்ந்த நிலைமை வருவது அதிசயமல்ல' என்கிறார்.

நரசிங்க அவதாரத்தைப் பற்றி ஆழ்வார்கள் கூறியிருப்பதன் உயிர்நிலைக் கொள்கையை ஸ்ரீவேதாந்த தேசிகனின் வாக்கிலே காண்பதாகக் கருதலாம். பகைவனுக்கும், அவன் வீட்டுத் தூணுக்கும் கூட அருள் புரிந்த கருணை உலகத்தைக் கைவிடாது என்பது குறிப்பு. தென்றல் அருள் புரிவதுபோல் பெரும் புயல்காற்றும் வான வெளியைத் தூய்மை செய்து காப்பாற்றுகிறதல்லவா?

மகாத்மா காந்தியின் பொன்மொழிகள்

தினப்படிப் பிரார்த்தனையைச் செய்ய முயலுங்கள். அதன்வழி சேமித்து வரும் பண்பாடு இணையற்றதென்னலாம்.

இறையொளி யென்றோ, உள்ளொளி யென்றோ, மனசாட்சி யென்றோ, சத்தியமென்றோ கூறுவது யாவும் ஒன்றே.

அமைதியில் உள்ளிருந்து எழும் வழி காட்டியாயுள்ள அவ்வொளியே நாம் செய்ய வேண்டிய கடமையின்னதென உணர்த்தவல்லது. எல்லோரையும் விடுத்து அதன்வழிச் செல்லும் சமயங்களை வாழ்க்கையில் ஒவ்வொருவனும் பெறுகிறான்.

மௌனப் பழக்கம் சிறிதளவு பழகினால் ஆண்டவனை அவ்வமைதி நேரங்களில் உணர முடியும்.

வாய் மௌனம் மௌனமல்ல. அதுவெறும் ஊமைத்தனமாகும். பயனில் சொல் பாராட்டாது இருத்தலே சிறந்த மௌனமாகும்.

சத்திய நெறியை மாற்றியோ புனைந்தோ கூறும் அறியாமையை விலக்க மௌனமே சிறந்த சாதனையாகும்.

வாய்ப் பேச்சு அதிகப்படின் உள்ளிருந்து சதா எழுந்து கொண்டுள்ள இறைவனுடைய உபதேச மொழிகள் கேட்கப்படமாட்டா.

பயனில் சொல் பாராட்டா மௌனி ஒருவனே சத்தியமான மொழிகளைக் கூற முடியும். அது எனது அனுபவம்.

யான் பெற்ற மௌன நிலை பிரார்த்தனையின் மூலம் கிடைத்ததொன்றேயாகும். படிப்பினாலோ மேதையினாலோ நான் மௌன இன்பம் பெற்றேனில்லை.

ஆண்டவன் ஒருவனுளன் என்ற நம்பிக்கையற்றவர்களையும் வாழவைப்பது ஆண்டவனே என்றால் அவனுடைய கருணை தான் என்னே!

மலைநாட்டுத் திருப்பதியநுபவம்

[மகாவித்வான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருமூழிக்களம்

கீழே திருவித்துவக்கோடு, திருநாவாய் என்னும் மலைநாட்டுத் திருப்பதிகளிரண்டையும் பற்றி ஆழ்வாரநுபவங்களை விரிவாக வெடுத்துரைத்தோம். இப்போது திருமூழிக் களமென்னுந் திருப்பதியைப் பற்றின ஆழ்வா ரநுபவங்களை யெடுத்துரைக்க எழுகின்றோம்.

திருநாவாய் போலவே திருமூழிக்களமும் திருமங்கையாழ்வாருடையவும் நம்மாழ்வாருடையவும் பாடல் பெற்றது. திருமங்கையாழ்வார் தமது திருநெடுந் தாண்டகத்தில் (பா–10.) "பின்னானர் வணங்குஞ்சோதி திருமூழிக் களத்தானாய் முதலானாயே" என்னும் பாசுரத்தினாலும், பெரிய திருமொழியில் (7-1-6) முனியே திருமூழிக்களத்து விளக்கே என்னும் பாசுரத்தினாலும், பெரிய திருமடலில் மூழிக்களத்து விளக்கினை என்னும் துணுக்கையினாலும் இத்தலத்தைப் பாடியுள்ளார். நம்மாழ்வார் இத்திருப்பதிக்கு ஒரு பதிகம் பாடியருளினர். அது திருவாய் மொழியில் ஒன்பதாம் பத்தில் ஏழாவது பதிகமாக விளங்குகின்றது. அத்தலத்துப் பெருமானுக்குத் தூதுவிடும் பதிகமாக அமைந்துள்ளது இது.

நம்மாழ்வார் திருவாய்மொழியாயிரத்தில் எம்பெருமான் திறத்துத் தூதுவிடும் வகையில் அமைத்தருளின பதிகங்கள் நான்கு. அவையாவன ;—முதற்பத்தில் அஞ்சிறைய மட நாராயென்று தொடங்கும் பதிகம் முதல் தூது. ஆறும்பத்தில் வைகல் பூங்கழிவாயென்று தொடங்கும் பதிகம் இரண்டாந் தூது. அப்பத்திலேயே பொன்னுலகாளீரோ வென்று தொடங்கும் பதிகம் மூன்றாம் தூது. ஒன்பதாம் பத்தில் எங்கானலகங்கழிவா யென்று தொடங்கும் பதிகம் நான்காந் தூது. இதுவே இப்போது நாம் அநுபவிக்கப் புகுந்த திருமூழிக்கள மென்னுந் திருப்பதியைப் பற்றியது.

மேலே விவரித்த விதமாக நான்கு பதிகங்களிலும் தூது விடுகிறது பொதுவாக எம்பெருமானைக் குறித்தேயாயினும் பாசுரங்களிலே உட்புகுந்து ஆராயுங்கால் சில விசேஷங்கள் தெரியவரும். எம்பெருமானது நிலைகள் ஐவகைப்பட்டிருப்பதாக நாம் நூற்களினாலறிகின்றோம். அந்த ஐந்து வகைகள் பரம், வியூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் எனப்படும். [இவற்றின் சுருக்கமான விவரணம் வருமாறு:-] 'நலமந்தமில்லதோர் நாடு' எனப்படுகிற ஸ்ரீவைகுண்டத்திலே நித்திய சூரிகளுக்கும் முக்தர்களுக்கும் போக்யனாய்க் கொண்டு எழுந்தருளியிருக்குமிருப்பு பரம் (அல்லது பரத்துவம்) எனப்படும். படைத்தல் காத்தல் அழித்தலாகிய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்துதற்காகவும் மற்றுஞ் சில செயல்களுக்காகவும் ஸங்கர்ஷண - ப்ரத்யும்ந - அநிருத்தர்களாய்க் கொண்டு திருப்பாற் கடலில் நிற்கும் நிலை வியூஹமெனப்படும். "மீனோடாமை கேழலரி குறளாய் முன்னுமி ராமனாய்த் தானாய்ப், பின்னுமி ராமனாய்த் தாமோத ரனாய்க் கற்கியுமானான்" என்று திருமங்கை யாழ்வாரருளிய படியே மத்ஸ்யம் கூர்மம் வராஹம் முதலிய அவதாரங்களை யெடுத்தது விபவமெனப்படும். உள்ளே புகுந்து ஸகலப்ரவ்ருத்திகளுக்கும் நியாமகனாயிருக்கு மிருப்பு அந்தர்யாமித்வமாகும். கோவில்களிலும் மனைகளிலும் ஆராதனைக்கு எளியனாய் எழுந்தருளியிருக்கும் நிலை அர்ச்சாவதாரமாம். ஆக இவ்வைந்து நிலைமைகளிலும் நம்மாழ்வார் தூது விடுகிறாரென்பது சொற்போக்கில் காணக்கிடக்கின்றது.

எங்ஙனே யென்னில்; முதல் தூது வியூஹத்தில் விடப்பட்டதாகும். அஞ்

சிறையமட நாராயென்கிற முதல் தூது பதிகத்தில் "கடலாழி நீர்தோற்றி அதனுள்ளே கண் வளரும் அடலாழியம்மானைக் கண்டக்கால் இது சொல்லி" என்று பேசியிருக்கையாலே அப்பதிகம் வியூஹ நிலையில் தூதுவிடுவதாகும். கடலாழி நீர்தோற்றி அதனுள்ளே கண் வளருகைதானே வியூஹாவஸ்தை யென்பது.

இனி 'வைகல்பூங்கழிவாய்' என்னுமிரண்டாந் தூது பதிகத்தில் "மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்க்கு என்னையுமுள ளென்மின்களே" என்று இலங்கை நகரெரித்த இராமபிரானிடம் சென்று செய்தி சொல்லும்படி தூது விடுகையாலே அப்பதிகம் விபவ நிலையில் தூது விடுவதாகும்; இராமாவதாரம் விபவாவதாரங்களுள் ஒன்றாதலால். இப்பதிகம் திருவண்வண்டூர்த் திருப்பதி விஷயமாகையாலே இது அர்ச்சாவதாரத்தில் தூது விடுகிறபடியல்லவோ வென்று சங்கிக்கவேண்டா; மேலே யெடுத்துக்காட்டிய பாசுரத்தின் பண்பு நோக்கி 'இது விபவாவதாரத்தில் விட்ட தூது' என்று முன்னோர் மொழிந்தது மிகப் பொருத்தம்.

இனி, 'பொன்னுலகாளீரோ' என்னும் தூதப் பதிகத்தில் பரத்துவ நிலையிலும் அந்தர்யாமி நிலையிலும் தூது விடுவதாக நன்கு தெரிகின்றது. இப்பதிகத்தில் "மாமதுவார் தண்டுழாய் முடி வானவர்கோனைக் கண்டு......... என்ன வேண்டுங் கண்டீர்" என்று கூறியிருத்தலால், வானவர்கோன்—பரமபத நிலயனை பரவாஸுதேவனாகையாலே அவன்பால் தூது விடுவதென்பது விளங்கிற்று. இப்பதிகந் தன்னிலேயே "எங்குச் சென்றாகிலுங் கண்டு இதுவோ தக்கவாறென்மினே" என்கிற பாசுரமுமுள்ளது. அப்பெருமான் தன்னை எங்கேனு மொளித்துக் கொண்டு கிடந்தாலும் அங்கும் புகுந்து சொல்லுமாறு தூது விடப்பட்டிருத்தலால் இது அந்தர்யாமி நிலையில் விட்ட தூதாகும். ஆக இவ்வொரு பதிகத்திலேயே இரண்டு நிலைகளில் தூது விட்டமை விளங்கிற்று.

இனி "எங்கானலகங்கழிவாய்" என்னும் தூது பதிகத்தில் [அதாவது, இப்போது நாம் அநுபவிக்கப் புகுந்த திருமூழிக்களமென்னுந் திருப்பதிக்குப் பாடலான பதிகத்தில்] செங்கால மடநாராய்! திருமூழிக்களத்துறையும்......குடக்கூத்தற்கு என் தூதாய்" என்று திருமூழிக்களமென்கிற திருப்பதியில் தூது விடுகையாலே இது அர்ச்சாவதார நிலையில் விட்ட தூதாகும். ஆக, தூதுவிடும் பதிகங்கள் நான்குக்கும் எம்பெருமானுடைய பரவியூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதார நிலைகள் ஐந்தும் இலக்கு என்பது விளக்கப்பட்டதாயிற்று.

ஓரிடத்திலே தூது விட்டுக் காரியமாகவில்லையென்றால் மற்றோரிடத்திலே தூதுவிடுவது எதற்காக? என்றொரு கேள்வி பிறக்கும்; இதற்கு விடை தருகின்றோம். எம்பெருமான் அளவு கடந்த திருக்கலியாண குணங்களையுடையனாகையாலே அக்குணங்களில் ஒவ்வொரு குணத்தை ஒவ்வோரிடத்திலே நினைப்பூட்டிக் காரியங்கொள்ளப் பார்க்கிறாராழ்வார். ஒரு குணம் பழுது பட்டாலும் மற்றொரு குணம் பலிக்கப் பெறலாமே; அக்குணமும் பழுதுபட்டாலும் இன்னொரு குணம் காரியம் செய்யப் பெறலாமே; அக் குணமும் விபலமானாலும் வேறொரு குணம் பயன் பெறுவிக்கத்தகுமே என்கிற நசை ஸம்பாவிதமாகையாலே பலகால் தூதுவிடுகிறாராழ்வார். எனவே, தூது விடும் பதிகமொவ்வொன்றுக்கும் ஒவ்வொரு திருக்குணத்தை விளங்கச் செய்வதிலே நோக்காயிருக்கும் என்றதாயிற்று. இதனைச் சிறிது விவரிப்போம்.

முதல் தூதின் விவரணம். "அஞ்சிறைய மடநாராய்" என்னும் முதல் தூது பதிகத்தில் "என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்று எம்பெருமானைக் கேட்குமாறு சொல்லியனுப்பப் படுகிறது. இப்பாசுரத்தின் கருத்தாவது, [**திருவடியின் தகவினுக்கு என்பிழைத்தாள்?**] ஸ்வாமியான தேவரீருடைய கருணைக்குப் போதும்படி என்ன பிழை செய்தாள்? என்றவாறு. உண்மையில் தான் பிழை செய்தது உண்டாகிலும் எம்பெருமானது பொறுமையின் பெருமையைக் காணுமிடத்து 'அந்தப் பொறுமையின் வயிறு நிறையுமாறு நாம் பிழை செய்யவில்லையே, நாம் செய்த பிழை அக் குணத்திற்கு எந்த மூலைக்கு? அதன் வயிற்றிற்கு ஒரு கவளத்திற்கும் போதாதே', என்று நினைக்க வேண்டும்படியாக இருத்தலால் இங்ஙனஞ் சொல்லக் குறையில்லை. ஆக இச் சொல்வகையால் பகவானது பொறுமைக் குணம் [க்ஷமா] நிரூபிக்கப்பட்டதா

யிற்று. பொறுமைக் குணத்தை அப்பெருமானுக்கு நினைப்பூட்டுங்களென்று சொல்லித் தூது விட்டதென்க.

இதற்குமேல் ஒரு கேள்வி பிறக்கும். பொறுமைக் குணம் தனக்குள்ள தென்பதை எம்பெருமான் தானறியானோ? இத்தலை நினைப்பூட்ட வேண்டிய அவசியம் என்கொல்? என்று. இக் கேள்விக்கு ஆழ்வார் பாசுரத்திலிருந்தே நன்கு ஸமாதானம் கிடைக்கின்றது. "என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்றதற்கு முன்னே "என் பிழையே நினைந்தருளி யருளாத திருமாலார்க்கு" என்றிருக்கையாலே தம்முடைய பிழைகள் அப்பெருமானுடைய பொறுமைக் குணத்தை மறப்பித்ததாகத் தெரிவித்தவாறு. ஆகவே, அக் குணத்தை நினைப்பூட்ட வேண்டுவது அவசியமாயிற்று. "என் பிழையே நினைந்தருளி" என்றதில் 'பிழையே' என்னுமேகாரத்தினால்-எனது பிழைகளை மட்டும் நினைந்தாரேயல்லது பிழை பொறுக்கவல்ல தமது பொறுமைக் குணத்தை நினைந்தாரில்லையே; அதனை மறந்தாப்போலே எனது பிழைகளையும் மறந்தாலாகாதோ? என்ற கருத்து வெளிவரும். "அருளாத திருமாலார்க்கு" என்றதனால்—பிழையுடையார் திறத்து அருள் செய்யாவிடில் இவர் எங்ஙனம் திருமாலாக இருக்க முடியும்? என்கிறாள்.

இரண்டாந் தூதின் விவரணம். "வைகல் பூங்கழிவாய்" என்னு மிரண்டாந் தூதுப் பதிகத்தில் "புணர்த்த பூந்தண்டுழாய் முடி நம்பெருமானைக் கண்டு புணர்த்த கையினராய் அடியேனுக்கும் போற்றுமினே" என்பது உயிரான பாசுரம். எம்பெருமான் திருமுடியில் தனிமாலை யிட்டிருப்பது இடர்க்கடலில் வீழ்ந்தாரை எடுத்தாள்வதற்குத் தானே கடமைப் பட்டிருப்பவனென்று காட்டுதற்கன்றோ. "ஆர்த்தியே வடிவெடுத்த ஆழ்வாரை இப்படித் துடிக்கவிட்டு நீர் புணர்த்த பூந்தண்டுழாய் முடியராயிருப்பது தகுதியோவென்று கேளுங்கள் என்று சொல்லித் தூது விடுகிறபடி.

மூன்றாந் தூதின் விவரணம். பொன்னுலகாளீரோ வென்கிற மூன்றாந் தூது பதிகத்தில் தன் மன்னு நீள் கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான் என்கிற பாசுரம் உயிரானது. "தோளிணைமேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடிமேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான்" என்கிறபடியே திருத்தோள் முதலான பல அவயவங்களிலும் எம்பெருமான் திருத்துழாய் அணிந்து கொள்வன். எதை ஆர்க்குக் கொடுத்தாலும் அடிமேலணிந்து கொள்ளுமது அடியார்களுக்குக்கேயாதலால் திருவடிகளில் சாத்தின திருத்துழாயை நமக்கன்றி மற்றையோர்க்குத் தந்திட மாட்டானென்று இங்கு அறிவிக்கப்படுகிறது. ஐசுவர்யம் என்கிற குணம் இது. அதாவது அடியார்களது இன்பமும் தனது இன்பமும் வேற்றுமைப் படாது ஒற்றுமையுற்றிருத்தல். இக்குணத்தை நினைப்பூட்டும்படி தூதுவிடப் படுகிறது இப் பதிகத்தில்.

நான்காந் தூதின் விவரணம். இப்போது நாமநுபவிக்க எடுத்துக்கொண்ட திருமூழிக்களத்தில் விடப்படும் தூதுதான் நான்காந் தூது; முடிவான தூது. எங்கான லகங்கழிவாயென்னுமிப் பதிகத்தில் "செக்கமலத்தலர் போலுங் கண்கைகால் செங்கனிவாய் அக்கமலத்திலை போலுந் திருமேனி யடிகளுக்கு—தக்கிலமே கேளீர்கள்" என்றும், "பூந்துழாய் முடியார்க்குப் பொன்னாழிக் கையாருக்கு" என்றும் அடுத்தடுத்து வடிவழகு பேசப்பட்டுத் தூது விடுகையாலே திருமேனி யழகையுணர்த்தி விட்ட தூது இது என்று தெரியவருகின்றது. பிரிந்தார்க்குப் பிராணன் கொண்டிருக்கவொண்ணாதபடியான தன் வடிவழகை மறந்து நம்மை நினையாதிருந்தான் திருமூழிக்களத்தப்பன்; இவ்வழகிய வடிவைப் பிரிந்தார் தரித்திருப்பாரோ வென்று அவ்வழகை நினைப்பூட்டிவிட்டால் வாராதிரார் என்று கொண்டு அதை யறிவிக்கிறபடி.

தம் வடிவழகைத் தாம் அறியாரோ? இவர் உணர்த்த வேண்டும்படி மறந்திருக்கைக்குக் காரணமென்? என்னில்; இது அப்பதிகத்திலேயே ஆழ்வார் தம்மால் தெரிவிக்கப்பட்டுளது — "தமரோடு அங்கு உறைவார்க்கு" என்பதனால். தம்மை யுகந்த பாகவதர்களோடு சேர்ந்து வாழ்கிற பெருமானுகையாலே அந்த பாகவதர்களோடுண்டான சேர்த்தியில் இனிமையாலே தன் வடிவழகையும் மறந்து கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டதாயிற்று. இனிப் பாட்டுத்தோறும் தூது விடப்படுகிற பறவைகளைப் பற்றின உள்ளுறை பொருள்களை விளக்குவாம்.

(தொடரும்)

பேரூர் ஆடவல்லானின் அருள்மேனி

உலகத்துள்ள உயிர்கள் அனைத்தினையும் வாழ்விக்க ஒரு பேரிறைவன் உளன். அவன் உயிர்களை வாழ்விப்பதற்குத் திருமேனி கொண்டருளுகின்றான். கொண்டருளுகின்ற திருமேனி ஐந்தென்றும், ஐயைந்தென்றும், எட்டென்றும், எட்டெட்டென்றும், ஒன்பதென்றும் பலவாக நூல்கள் பகருகின்றன. அனையவற்றை ஈண்டு விரித்தல் அமையாது. ஒன்பது என்ற வகையில் சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவம், திகழும் ஈசன், உருத்திரன், மால், அயன் என்றவற்றில் திகழும் ஈசன் என்பதனை மகேசன் என்று கூறுவார்கள். இம் மகேசுவரத் திருமேனி இருபத்தைந்து வகைப்படும். இவை முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்ற தொழில்களின் நிமித்தமாகச் சத்தியோசாதம், வாமம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்ற ஐந்து திருமேனிகளிலிருந்து வெளிப்பட்டன. இவ்வாறு வெளிப்பட்ட திருமேனிகளில் ஒன்றே இங்கு நாம் எடுத்துக் கொண்ட திருக்கூத்தர் திருவுருவம்.

இந்தத் திருஉருவம் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நமது இன்பத் தமிழகத்துப் பெரும் பொருளாக மதித்து, வழிபாடாற்றி, வரப்பெற்றது. மணிவாசகப் பெருமானார் போன்ற பேரருளாளர்கட்கு இத் திருமேனியிடத்திருந்த ஈடுபாடு அவர்கள் திருவாக்குகளிலிருந்து வெளியாகின்றது. நம் நாட்டாரே யன்றி அறிவியல் உலகத்திலேயே வாழ்நாட்களைப் பயன்படுத்தும் மேனாட்டறிஞர்கள் பலரின் கருத்துக்களைத் தன்னிடத்தே ஈர்த்து மதிக்க வொண்ணாத மாண்பினைக் கொண்டது அவ் வழகு வடிவம். இதற்குச் சான்று இங்குள்ள திருக்கூத்தர் திருவுருவங்களுக்குப் பெரும்பொருள் கொடுத்து அதனைப் பெற்றுச் சென்று கண்களுக்கு விருந்தூட்டும் காட்சியரங்குகளிலே வைத்துப் போற்றினர் என்பதும், இத்திருவுருவத்தினைப் பற்றிப் பல நூல்கள் எழுதினர் என்பதும் ஆகும்.

இத்தன்மை வாய்ந்த ஆடல்வல்லானின் அழகுத் திருவுருவம் தமிழகத்தில் பல உள்ளன. அவற்றுள் கொங்கு நாட்டின் அணியெனத் திகழும் திருப்பேரூரில் அமைந்துள்ள ஆடலரசின் மேனியில் உள்ள அரும்பெரும் நலம் சில இங்கு எடுத்துக் காட்டப் பெறுகின்றது.

ஓருருவில் ஈருருவம்

சிவமும் சக்தியும் என்றுமே எவ்வாற்றானும் பிரிக்கலாற்றாப் பிணிப்புடையவை என்று நூல்கள் கூறுகின்றன. இதனைப் "பண்ணுமின்னிசையும் நீரும் பாலும் பாலில், நண்ணுமின்சுவையும் பூவும் பூவின் நாற்றமும் மணியும் அங்கேழ், வண்ணமும்" போன்றது என்று பேசுவார்கள் அருளாளர்கள். ஆடுமவன் அழகுருவும், அவ்வுருவைச் சூழ்ந்து நிற்கும் திருவாச்சியும் பிரிக்க முடியாத நிலையிலே இத்திரு மேனியில் அமைந்திருக்கிறது. ஆடும் அவன் சிவம் எனவே அவனைச் சூழ்ந்து நிற்கும் திருவாச்சியைச் சத்தியென்று கூறலாமன்றோ? இப் பகுதி சக்தியின் பகுதியாய் இருத்தலாற்றானே இதற்குத் திருவாச்சியெனப் பெயர் வழங்கினர். இன்றும் நாம் பெண்பாலாரில் அறிவு அனுபவங்களில் முதிர்ந்தவர்களை ஆச்சியென்று அழைக்கின்றோம். எனவே, சத்தியைத் திருவாச்சியெனக் கூறுதல் சாலப் பொருந்துவதே. சிவமும் சக்தியும் இணைந்திருத்தலின் அசைவு உண்டாகின்றது. அவ்வசைவால் ஒலிதோன்றுகின்றது. ஆகவே தான் அவனுருவம் அசைகின்ற நிலையிலும், கழலாத சிலம்பு ஒலிக்கின்ற நிலையிலும் இருந்து வருகின்றன என்பதைச் சேரமான் பெருமானார் சிலம்பொலிகேட்ட செய்தியிலிருந்து தெள்ளிதின் உணருகின்றோம். சிவசக்தி உயிர்கட்கு வெளிப்படுங்

தீய உளம் படைத்த கொடியவர்களும் தூய ஹிருதயம் பெற்று மேன்மையடைய பிரார்த்தனை ஒன்றே வழியாகும்.

—மகாத்மா காந்தி.

காலத்து ஒலிவடிவாகவும் (நாதம்) வரிவடிவாகவும் (விந்து) தோன்றுகின்றது. சிவம் ஒலி வடிவு எனின் சக்தி வரிவடிவு ஆவாள். அவனுருவம் அசையும் உருவமெனவே அது அசைவால் ஒலிவடிவு ஆகிறது. அப்போது சக்தி வரிவடிவாகின்றாள். அவ்வடிவே திருவாச்சியின் வட்டவடிவம். வட்டமான புள்ளியே விந்து தத்துவம் என்பர். இதனால் தான் சில நீர்த்துளிகளைப் பிந்து என்று கூறுகின்றோம். ஒரு நீர்த்துளி நிலத்தில் விழுமாயின் அது கொள்கின்ற வடிவமே இங்கு பிந்து என்று கூறப்படுகின்றது. நீர்த்துளி நிலத்தில் விழுந்தால் கொள்ளும் வடிவத்திற்கும், இத் திருவாச்சியின் வடிவத்திற்கும் சற்றும் வேறுபாடிராது. விந்து தத்துவத்தை வரிவடிவென்றோம். இன்றும் நாம் எந்த வரி வரையவேண்டுமாயினும் அது ஒரு புள்ளியிலிருந்து தான் தொடங்குகிற தென்பதனை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே, எவ்விதமான வரிகட்கும் புள்ளி முதற்காரணமாக அமைகிறது என்பது வெள்ளிடை மலை. அப் புள்ளியினின்றும் பல்வேறு வரிகள் தோன்றுகின்றதைப் போல திருவாச்சியிலிருந்தும் பல ஒளியிலைகள் (நெருப்புச் சுவாலை) அமைந்திருக்கின்றன. நீர்த்துளி நிலத்தில் விழுந்த போது விழுந்த இடத்தை நோக்கினால் ஒரு புள்ளியும், அதனைச் சூழ அதனோடு பிணைந்த பல சிறு புள்ளிகளுமாகஇருக்கக் காண்பதைப் போலவே இத்திருவாச்சியின் வட்ட வடிவும், அதனோடு பொருந்தியுள்ள ஒளியிலைகளும் அமைந்திருக்கின்றன. வரிவடிவுகள் ஒலியினை அளவு செய்கின்ற நிலையிலேயே அமைந்திருக்கிற தென்பதை எழுத்தறிந்த யாரும் உணர்வர். ஒளியினை அனவிடும் காலத்து அதனை ஐம்பத்தொரு வகைக்குள்ளாக அடக்கி விடலாமென்ற எண்ணத்தினாலோ என்னவோ தான் அகரம் முதலாக க்ஷகர இறுதியாக எழுத்து ஐம்பத்தொன்று எனக் கணக்கிட்டனர் போலும். இதைப் பற்றி விரிவாக நாம் உணர வேண்டுமாயின் ஒலி நூல்கள் மிகவும் துணை செய்யும். சிவம் ஒலி, சக்திவரி. சிவம் ஒன்று. சக்தி அருளால் பல வேறு வடிவுகளையுடைத்து என்ற உண்மையைச் சக்தியின் பகுதியாகிய திருவாச்சியைச் சூழ உள்ள ஒளியிலைகள் பலவாய், அதுவும் ஐம்பத்தொன்றாய் அமைந்திருக்கின்றன. அவ்வட்டத்துள் ஆடும் பிரான் ஒருவனைப் பல வேறு தொழில்களை ஒரே காலத்தில் செய்பவனைக் காட்சியளிக்கின்றான். இது காறும் கண்டது திருவுருவம் ஒன்றேயாயினும் அவ்வுருவத்திலேயே சிவம் சக்தி என்னுமிரண்டும் ஒன்றுபட்டு இருக்கின்ற தென்றும், சிவம் அசையவே அதைச் சூழ இருந்த திருவாச்சியாகிய சக்தி அகரம் முதல் க்ஷகரம் இறுதியாகச்சொல்லப்படுகின்ற எழுத்துக்களை மலரச் செய்தன என்றும், இவை இரண்டுங்கூடி ஒலி யுலகையும் (சத்த பிரபஞ்சம்), வரி யுலகையும் (அர்த்தப் பிரபஞ்சம்) வெளிப்படுத்தின வென்பதுமாகும்.

திருக்குறிப்பு:

ஒரு உருவத்திற்குத் திருமுகம் மிகச் சிறப்பு வாய்ந்த பகுதி. அத்திரு முகத்திலேயும் நோக்கம் தானே வந்து தலையளித்து அருள் செய்யும் தகுதியில் இருத்தலே மிக மிகச் சிறப்பு வாய்ந்தது. அத்திரு முகத்தை நாம் நோக்கும்போது அது நம்மிடம் பேசுதல் வேண்டும், அதுவும் எப்போது வந்தனை? யாது கருதி வந்தனை என்று அருள் நகையோடு வினவுவதாக இருப்பினன்றோ நம் மனம் அதனிடத்திலேயே நிலைக்கும். எனவே இத் தன்மைகள் எல்லாம் நிறைவுற்ற நிலையிலே அமைந்துளது இங்குள்ள கூத்தர் திருவுருவத்தின் திருமுகம். இவ்வாறு எல்லாம் நாம் எதிர்பார்ப்பது நம் சிற்றறிவாலல்ல. திருநாவுக்கரசர் போன்ற பெருமக்கள் அனுபவிக்கத் தூண்டுகின்றார்கள். அவர்களது அனுபவம் தேவாரத் திருவாக்குகளாக உருவாகியுள்ளது. ஆடல்வல்லானின் அருள் முகத்தின் திருக்குறிப்பு அவன் திருவடியை அடைந்த நம்மை "என்று வந்தாய்" என்று கேட்பது போல அமைந்திருக்கிற தென்பதை.

"என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே"

—என்ற வாக்கு

ஹிருதயமற்ற வார்த்தைகளைவிட வார்த்தைகளற்ற ஹிருதயமே மேல். உண்மை ஏக்கத்தினால் எழும் பிரார்த்தனையின் மூலம் எதையும் பெறலாம்.

—மகாத்மா காந்தி.

காட்டுகின்றது. மேலும் அவன் நம்மை உற்று நோக்குகின்றானும். அங்ஙனம் உற்று நோக்குங் காலத்துப் புருவம் வளையுமன்றோ? எனவே அவன் குனித்த புருவங்களையுடையவன் என்றும், உற்று உருத்து நோக்காது அருளோடு நோக்குகின்றான் என்று கூறுதற்குக் "கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்" எனவும் உணர்த்தி நம்மையும் அவ்வாறு காணச் செய்தார் அந் நாவரசுப் பெருமானார். இங்கு கூறிய திருநோக்கம், திருப்புருவம், செவ்வாய் ஆகியவைகள் இங்கு கூறியவற்றையெல்லாம் கடந்த பேரழகு வாய்ந்தனவாய் இருக்கின்றன. இதனைக் காண்போமாயின் நாவரசர் கூறியது போல,

"சிற்றம் பலவன் சிரித்த
முகங்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்ப
தென்னே"

என நாமும் கூறி மகிழ்வமன்றோ?

திருச்சடை :

கூத்தர் திருவுருவங்களில் சடையும் ஒரு சிறந்த பகுதி. இது பக்கங்களிலே விரிந்தனவாயும், எடுத்துக் காட்டப் பெற்றனவாயும், இன்னும் பலவாறாகக் காண்கின்றோம். ஆனால் இத்திரு மேனியிலே ஒன்பது சடைகளும், அவை கொன்றைக் காய்களைப்போல் உருண்டு நீண்டனவாகவும், பின்புறம் தாழ்ந்தனவாகவும் இருக்கின்றன. இவ்வாறு, இருக்கின்றவற்றை நமது தெய்வத் திருமுறைகள் இனிதே எடுத்து இயம்புகின்றன.

சடை ஒன்பது என்பதை, "ஒன்பது போலவர் கோலக் குழற்சடை" என்றும் அவை பின்புறம் சாய்ந்திருப்பதே சிறப்பு வாய்ந்தது என்பதைப் "பிறப்பில் பெருமானைப் பின் தாழ் சடையானை" என்றும் திருமுறைகள் பேசுகின்றன. அவனுடைய சடை பின்புறம் தாழ்ந்திருப்பது, அவன் தன்னை எல்லாரும் வணங்கத் தான் வணங்குதற்குத் தனக்குமேலொரு பொருளில்லானைப் தனிப்பெருந் தலைவனாய் உளன் என்பதை நம் நினைவிற்குக் கொண்டு வரச் செய்கின்றது. இவ்வண்ணம் அமைந்த சடை திருத்தோள்களிலே இரண்டிரண்டும், பின்புறம் ஐந்தும் ஆக அமைந்திருக்கின்றது. வலது தோளிலே புரளும் சடையிலே கங்கை நடுவில் இருந்து மேற்பகுதி கைகூப்பிய பெண் வடிவாகவும் (இடுப்பிலிருந்து) நடுவில் கீழ்ப் பகுதி நீர் வடிவமாகவும் உள்ள தோற்றம் மிக அழகாக இருக்கின்றது. முடியில் பிறைமதி, நகுவெண் தலை ஆகியவைகளும் அமைந்திருக்கின்றன.

அமைத்தகை :

இதன் அமைப்பு காண்பார்க்கு உண்மையிலேயே ஒரு பெரும் பேறு அளிக்க வல்லதாய் உள்ளது. இத்திருக்கையின் மணிக்கட்டிலே ஒருநாகப்பாம்பு அவன் திருமுகத்தை நோக்கிய வண்ணமாக இருக்கின்றது.

துடிபற்றியகரம் :

இத்திருக்கரம் துடியைப் பிடித்துள்ள காட்சி; சுட்டுவிரல், சிறு விரல் ஒழிந்த ஏனைய விரல்களால் பிடித்த வண்ணமாக அசைந்து ஒலிப்பது போல உள்ளது.

இடது பக்கக்கைகள் :

எடுத்த ஒருகை திருவடியைச் சுட்டுவதாக உள்ளது. சுட்டும்போது அதுவே உயிர்கட்கு உறுதிப் பொருள் என்ற உறுதியெழுமாறு சுட்டுகின்ற நிலை உன்னி உணர்தற்பாலது.

அனல் ஏந்திய கை :

இது நெருப்பு ஒரு அகலிலே இருப்பதும் அகலினை ஏந்திய வண்ணமாகவும் இருக்கின்றது. இவ்வாறு பல வடிவங்களிலே அமைவது இல்லை. கையிலேயே அனல் இருப்பது போல இருக்கிறது. ஆனால் இத்திருவுருவத்தில் இவ் வண்ணம் இருக்கிற தென்பதை நம்பி ஆரூரர் பெருமான்,

"கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரியகலும்" என்று கூறியதிலிருந்து

கண்ணினிமைகளைப் பிரார்த்தனை மூலம் தாளிட்டு நித்திரை கொள்ள வேண்டும். விழித்தெழுமுன் தொழுதெழுதல் இன்றியமையாதது.

—மகாத்மா காந்தி.

நெருப்பு அகலிலே அமைந்ததாக இருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இவ்வாறெல்லாம் இத்திருவுருவத்தில் ஒன்றுபட்டு நோக்கிய திறத்தாலன்றோ? "பேரூர்ப் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே" எனப் பல காலங்களுக்குப் பின்னர் பலகல் தொலைவுகளுக் கப்பால் கண்ட காட்சியிலே முன் கண்ட காட்சி நினைவுக்கு வருவதாயிற்று.

ஊன்றிய திருவடி :

இத்திருவடி முயலகன் என்னும் அசுரனின் முதுகின்மீது ஊன்றப் பட்டதாய் இருக்கின்றது. முயலகன் முகம் இறைவனுடைய தூக்கிய திருவடியின் அடிப்புறத்தை நோக்குவதாக இருக்கின்ற நிலை நமக்குப் பல சித்தாந்தக் கருத்துக்களை நினைவூட்டுவதாக இருக்கின்றது. உயிர்களைப் பற்றியிருக்கின்ற ஆணவ மலமே முயலகன். அதனையே மேல் எழவொட்டாமல் இறைவன் அமிழ்த்தி வைக்கின்றான். அவன் அடியைச் சார்ந்த அவ்வாணவ மலம் உயிரை நோக்காது உயிர் சென்றடைந்த திருவடியையே நோக்குகிறது. இவ்வாறு நோக்கி நிற்பதைத் தான் ஆணவ மலம், உயிரானது திருவடிப்பேறு அடைந்த போது வலி இழந்து நிற்கிறது என்று கூறுகின்ற கருத்தை நமக்கு உணர்த்துகின்றது. தான் பற்றி நின்ற பொருள் சென்ற வழியிலே சிந்தையைச் செலுத்திக் காண்பது என்ற காட்சி இன்றும் உலகில் கண் கூடாகக் காண்கின்றோம். இதுதான் ஆணவமலமாகிய முயலகன் செயலாகவும் உள்ளதென்பதை இனிதே யுணர்த்தி நிற்கின்றது இத்திருவுருவத்தின் அமைப்பு. மேலும் ஊன்றிய திருவடியின் பின் புறத்திலே ஒரு நாகம் படம் விரித்து இருக்கிறது. அப் பகுதியிலேதான் இறைவன் குதிங்காற் பகுதியும் இருக்கிறது. ஆண்டவனது அசைவில் நிற்கின்ற இடம் அதுவாக இருக்கிறது. இதுவும் ஒருபெரும் பேருண்மையினை உணர்த்துகின்றது. நமது மூச்சுக் காற்றுத் தோன்றுகிற இடத்திலே வளைந்து கிடக்கும் பாம்பின் வடிவிலே குண்டலினி சக்தி உளது என்றும், அங்கிருந்து தான் மூச்சுத் தோன்றுகிற தென்றும், உடற்பகுதியைப் பற்றிச் சமய நூல்கள் கூறும் உண்மை ஆண்டவனது அசைவும் குண்டலினி சக்தியை இடமாகக் கொண்டு நிகழ்கின்றது என்ற நினைவை நமக்கு உண்டாக்குகிறது.

எடுத்த திருவடி :

இதுதான் உலகத்து உயிர்கட்குப் பேரின்பப் பெருவாழ்வை அளிக்க வல்லது என்றும், அதனை உயிர்கள் பெற்று நுகர்வதற்காக அத்திருவடி மிகத் தாழ்ந்து வந்து உயிர்கட்கு இன்பத்தினை அளித்துக் கொண்டு இருக்கிறதென்றும், அவனடியார்கள் அருளிய அருள்மொழியினின்றும் அறியலாம். இந்தத் திருவடியை திருநாவுக்கரசப் பெருந்தகையார்,

"இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும்"—என்று சிறப்பித்துப் பேறு பெற்றனர். இத்திருவடிகளிலே திருவிரல்கள் மிக அழகு வாய்ந்தவை. பெருவிரலை அடுத்த விரல் பெருவிரலினும் சற்று நீண்டிருக்கிறது. இவ்வாறு நீண்டிருப்பது இதனையுடையவனது செல்வ மிகுதியைக் குறிக்கும் என்பர் ஆன்றோர். இதனாற்றானே அவனது கழலைக் குறிக்க எழுந்த தேவாரம்,

"செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே"—என்று கூறிய இடத்தில் அவன் கால்களைச் "செல்வன் கழல்" என்று குறித்துப் போந்தது போலும்.

இன்னும் நுணுகி அவனருளே கண்ணாகக் காண்போமாயின்; அவன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதிக் காட்ட முடியாது போயினும், தாம் தாமே நுகர இயலும். சுருங்கக் கூறுவோமாயின் சைவத்திருமுறைகளிலே கூறப்பட்ட குறிப்புகள் பலவற்றிற்கேற்பத் இத் திருமேனி அமைந்திருக்கின்றது. நாமும், என்ன இது! ஆடுங்கோலம் என்ற காட்சியோடு கண்டு விலகிவிடாமல், இத்திருவினை நன்கு கண்கள் குளிரக் கண்டு, கண்டதோடமையாது நம் முன்னோர்கள் எவ்வாறு கண்டார்கள் என்பதற்குத் திருமுறைகளைப் பயின்று, அக் கருத்துக்களோடு இணைந்துகாண அவன் அருள் செய்வான் என்று வாழ்த்தி வணங்குவோமாக.

திருநீலகண்டநாயனார்

திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியேன்

—சுந்தரர், திருத்தொண்டத்தொகை.

சொல்லச் சிவன்திரு வாணைதன்
னாமொழி தோணசையை
ஒல்லைத் துறந்துரு மூத்ததற்
பின்னுமை கோனருளால்
வில்லைப் புரைநுத லாளொ
டிளமைபெற் றின்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக்
குயவனுஞ் செய்தவனே

—நம்பியாண்டார்நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி.

எல்லையற்ற புகழ்பெற்ற தில்லையம்பதியில் குயவர் குலத்தில் தோன்றிய பெரியார் ஒருவர் இருந்தார். அவர் கூத்தப்பிரானின் ஆடுங் கழலிடம் அயரா அன்புடையவர்; பொய்யொழித்து அறவழியிலே வாழ்கின்றவர்; சிவனடியார்களுக்கு எந்தப் பணிவிடையும் செய்யும் விருப்புடையவர்; சைவ மெய்ந்நெறியைச் சார்ந்து ஒழுகும் தன்மையர். தமது குலத் தொழிலை விடாது மட்கலங்கள் செய்து வாழ்க்கைக்கு வேண்டிய அளவு ஆக்கிக்கொண்டு, சிவனடியார்களுக்கு பிச்சை யோடுகளைக் கொடுத்து வந்தார்.

இவ்வாறு இருக்க, இளமை காரணத்தால் இன்பத் துறையில் எளியரானார். அவர் மனைவியார் கற்பும் பொற்பும் மிக்கவர். இப்பெரியார் சிவபெருமானின் **திருநீலகண்டத்**திடம் அன்பு பூண்டு இடையறாது வழுத்தி வருவார். ஒருநாள் இவர் பரத்தை வீடுபோய் விட்டுத் தம் வீடு திரும்பினார். அதையறிந்த மனைவியார் மானம் பொறாது ஊடல் கொண்டார். எனினும், தங்கடமையை வழுவாது புரிந்து வந்தார். புலவி தீர்க்கும் பொருட்டு நாயனார் அவரை நண்ண, "எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று மனைவியார் ஆணையிட்டனர். "என்னை என்னாமல் எம்மை என்றதால் உம்மையேயன்றி மற்ற மாதரார் தம்மையும் மனத்தினாலும் தீண்டேன்" என்று சூள் உரைத்தார் வேட்கோவர். ஆணையைக் காத்து இவ்விருவரும் மெய்யுறு புணர்ச்சியின்றி, இந்நிகழ்ச்சி அயலார் அறியாதபடி ஒரே வீட்டில் உடன் உறைந்து இல்லறம் நடத்தி வந்தனர். இவ்வாறு ஆண்டுகள் பல கழிந்தன; மூப்பெய்தி உடல் தளர்ந்தனர்; எனினும் இறையன்பில் சற்றும் தளர்ந்தாரில்லை.

இவர்களுடைய பேரன்பை உலகினர்க்குணர்த்த எம்பெருமான் திருவுளங் கொண்டார். ஒரு சிவயோகியராய் அவர் வீடடைந்து, அவரிடம் திருவோடு ஒன்றைக் கொடுத்து, "இது மிக்வும் அருமையானது; தன்னகத்துப் படுத்துவதைத் தூய்மையாக்க வல்லது; இதை வைத்திரும்; யாம் வேண்டும் போது கொடுக்க" என்று சொன்னார். அவ்வாறே திருநீலகண்டரும் அவ்வோட்டை வாங்கிப் பாதுகாவல் உள்ள இடத்தில் வைத்தார். பல நாட்கள் கழிந்தன. இறைவன் ஓடு வைத்த இடத்தை விட்டுப் போகும்படி திருவுளம் பற்றினார். பழய சிவயோகியார் வேடத்தில் குலாலப் பெருமகனார் வீட்டைக் குறுகினார். திருவோட்டைக் கேட்டார். நாயனார் வைத்த இடத்தில் பார்த்தார்; காணவில்லை. பதைபதைத்துத் திகைத்தார். யோகியாரிடம் வந்து ஓடு கெட்டுப்போய் விட்டதைச் சொல்லி மற்றொரு நல்ல ஓடு தருவதாகச் சொன்னார். தான் கொடுத்த ஓடுதான் வேண்டும் என்றார் சிவயோகியார். நாயனார் என்ன சொல்லியும் கேட்கவில்லை. ஓடு கெட்டுப் போனது உண்மையானால் நாயனார் மகனைக் கையில் பற்றிக்கொண்டு குளத்து நீரில் மூழ்கி உறுதி கூற வேண்டுமென்றார் முனிவர். நாயனார், தனக்கு மகன் இல்லையென, யோகியார் மனைவி கைப் பிடித்து அவ்வாறு செய்ய வேண்டுமென வற்புறுத்தினர். திருநீலகண்டர், மனைவிக்கும் தமக்குமுள்ள ஒரு சபதத்தால் அவ்வாறு செய்வதற்கில்லை யென்றும் தாமே மூழ்கித் தருவதாகவும் சொன்னார். யோகியார் கோபம் கொண்டு தில்லைவாழ் அந்தணரிடம் முறையிட்டார். அவர்களும் அவை

கூடி இருவர் வழக்குரைகளையும் கேட்டு, யோகியார் கேட்டவண்ணமே நாயனார் மனைவி கைப்பற்றி குளத்தில் மூழ்கி உறுதி செய்து கொடுப்பதே நீதிமுறை எனத் தீர்ப்புக் கூறினர். பொருந்தும் வகையால் செய்வதாகச் சொல்லிவிட்டு வந்து, நாயனார் திருப்புலீச்சரத்தின் முன்னுள்ள திருக்குளத்திலிறங்கி ஒரு மூங்கில் தண்டின் இருதலையும் மனைவியாரும் தானும் பற்றிக்கொண்டு மூழ்கப் போயினர். நாயனார் மனைவியார் கையைப் பற்றி மூழ்க வேண்டும் என்றார் யோகியார். அப்போது தமது பழஞ்செயலை வெளிப்பட எடுத்துச் சொல்லி மூழ்கிக் கொடுத்தனர் நாயனார். மூழ்கி எழுந்து கரையேறுகையில் இருவரும் இளமை பெற்று வனப்புடன் திகழ்ந்தனர். யோகியார் மறைந்தனர். விண்ணின் மேல் விடை மீது உமையம்மையுடன் இறைவன் காட்சியருளி, "ஐம்புலனை வென்றவர்களே! இவ்விளமையுடன் என்றும் நம்பால் இருக்க" எனத் திருவாய் மலர்ந்தனர். செயற்கரிய செய்கைகள் புரிந்து இவ்விருவரும் சிவலோகம் சேர்ந்து என்றும் நீங்கா இளமையுடன் பேரின்ப மடைந்தார்கள்.

முற்றத்துறந்த முனிவராகிய பட்டினத்தடிகள், "மாதுசொன்ன சூளால் இளமை துறக்க வல்லே னல்லேன்" என்று திருநீலகண்டரின் பெருமையைப் போற்றிப் புகழ்கின்றார். சேக்கிழார் பெருமான், திருநீலகண்ட நாயனார் வரலாற்றை 44 பாடல்களில் அழகுபெற அமைத்துத் தந்திருக்கிறார். 'எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்', 'மனத்தினும் தீண்டேன்' என்பவை உலக வழக்கச் சொற்களாகி விட்டன.

திருநீலகண்ட நாயனார் ஓர் இரவு மழைக்காக ஒரு வேசி வீட்டுப்புறம் ஒதுங்கி நிற்க, அவள் வெற்றிலை பாக்கு சந்தனம் கொடுத்து உபசரித்தனுப்ப, மனைவியார் அது கண்டு ஊடினார் என்ற ஒரு கதை வழங்குகிறது. அதற்குப் பெரிய புராணத்தில் எந்தவிதமான ஆதாரமுமில்லை. 'இளமை மீதூர இன்பத் துறையில் எளியரானார்', 'ஆங்கோர் பரத்தைபால் அணைந்தார்' என்ற வாக்குகளே காணப்படுகின்றன. 'தகர நறுமலர் பொதுளிய குழலியர் கலக கெருவித விழிவலை படவிதி தலையில் எழுதி' என்று அருணகிரியார் கூறியாங்கு நாயனார் கன்ம வசத்தால் இவ்வாறு நடக்க நேர்ந்தது என்று சொல்வதே தகுதியுடையது.

திருநீலகண்ட நாயனார் வரலாற்றில் பல உண்மைகளையும், நுட்பங்களையும் தெரிந்து கொள்ளலாம். நாயனார் மனைவியார் கணவருக்கு எல்லாத் தொண்டுகளையும் செய்து மெய்யுறு புணர்ச்சிக்கு (Cohabitation) மட்டும் இசையவில்லை. ஒழுக்கத்தில் தவறிய தம் கணவரைத் திருத்த அவ்வம்மையார் கையாண்டது ஒரு சிறந்த முறை. அதை, அறிவு செறிந்த ஒத்துழையாமைப் புலவி (Intelligent non-cooperation) என்பர் அறிஞர். அவ்வாறு செய்வது கற்புடைய பெண்ணின் ஒழுக்கத்திற்கு இழுக்காகாது. அதுவும், அயலார் அறியாமல் அமைதியான சீர்திருத்த முறையை விடச் சிறந்ததொன்று வேறில்லை.

இனி, நாயனார் திறத்தில் பார்த்தால் இச்செய்கை மிக்கு விளங்கிக் காணப்படுகிறது. ஒருவன் தன் மனைவியையன்றி வேறொரு பெண்ணைத் தொட்டால் அரச தண்டனை கிடைக்கும். அவனே அப் பெண்ணை மனத்தால் நினைத்தால் கடவுளை யன்றி யாரே அறியவல்லார்! நாயனார் வாக்காக 'மற்ற மாதரார் தம்மை என் தன் மனத்தினும் தீண்டேன்' என்று சேக்கிழார் கூறியிருப்பது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பெறும் பெற்றியது.

இவ்வரலாற்றில் முக்கியமாகக் குறிக்கத்தக்கது இவர்கள் அயலார் அறியாது வாழ்ந்த முறைதான். கணவன் வழுவிய காலத்தில் மனைவி திருத்துவதும், மனைவி தவறு செய்தபோது கணவன் திருத்துவதும் மற்றவர் அறியாது நடைபெற வேண்டியவை; மிகவும் நாகரிகமான துங்கூட. அயலார் அறிந்தால் இருவர்க்கும் மானக்குறைவேயாகும்; இல்லறத்தின் மாண்பு இறந்தே போகும்.

மெய்யுறு புணர்ச்சியின்றி செம்மையாக இல்லறம் நடத்தும் முறையை மேல்காட்டுப் பேரறிஞர்கள் **துணைமுறைமணம்** (companionate marriage) என்பர். அவ்வித வாழ்க்கையை மேற்கொண்டவர்களும் அங்கு உண்டு. பல நூற்றாண்டுகள் முன்பே தமிழ் நாட்டில் சிவனடியார் ஒருவர் அத்தகைய வாழ்க்கை நடத்தினார் என்றால் அது மிக்கப் பெருமை யுடைத்தன்றோ!

திருத்தளியான் காண் அவன் என் சிந்தை யானே'' என்று சொல்லியிருக்கிறார். ஒரு பாடலில் "நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண்'' என்று மதுரைச் சொக்கநாதர் தருமி என்ற அந்தணனுக்காகப் புலவர் வேடங்கொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் சென்று அங்குள்ள பொன் முடிப்பைப் பெற்றுக் கொடுத்த திருவிளையாடலைக் குறிக்கிறார். 'சங்கம்' என்ற சொல் 1300 ஆண்டுகட்குமுன் தேவாரத்தில் குறிக்கப் பெற்றிருப்பது ஆராய்ச்சியாளர்க்குப் பெருந்துணையாய் நிற்கின்றது.

இக்கோயிலில் பல தமிழ், கிரந்தம், வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவைகளில் பல வகையான அரிய செய்திகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. மாறஞ் சடையன், பாண்டியன் ஸ்ரீவல்லபதேவன், பராக்கிரம பாண்டியன், பாண்டியன் குலசேகரதேவன், வீர பாண்டியன், மாறவர்மன் குலசேகரன், சுந்தரபாண்டியன், இராஜராஜ சோழன், வீரராஜேந்திரசோழன், விஜய நகர சாளுவ இம்மடி நரசிம்ம மகாராயர், கிருஷ்ணதேவராயர், அச்சுததேவ மகாராயர் முதலிய அரசர்கள் காலத்தியனவாகத் தெரிகின்றன. கேரள சிங்கவள நாட்டுப் பிரமதேயமான திருப்புத்தூர், கொளுவூர்க் கூற்றத்துப் பிரமதேயமான திருப்புத்தூர் என்று கூறப்பட்டிருக்கிறது. இறைவன் பெயர்கள் - திருக்கற்றளிப்பட்டாரர், ஸ்ரீ தளிப்பரமேசுவரர், திருத்தளியாண்ட நாயனர், கைலாசமுடைய நாயனர், திருத்தளிப் பெருமானடிகள் என்று வருகின்றன. நடராஜரைக் கூத்தாடுதேவர் என்று கூறுகினறது. அம்பிகையைத் திருக்காமக்கோட்ட முடைய நாச்சியார், திருப் பள்ளியறை நாச்சியார் என்றும் குறிக்கின்றன. நியமம், கூத்தக்குடி, சூரக்குடி, காரையூர், நாரணமங்கலம், சதுர்வேத மங்கலம், அருவியூர், பொன்னமராபதி முதலிய ஊர்களின் பெயர்களும் காணப்படுகின்றன. இந்த கிராமங்கள் இப்பெயர்களோடு திருப்புத்தூரைச் சுற்றி இப் போதும் இருக்கின்றன. கல்வெட்டுக்களில் காணும் செய்திகளைச் சுருக்கமாகக் கீழே தருகிறோம்.

கோயில் விளக்குக்கு 40 கழஞ்சு பொன் கொடுத்தது; விளக்கெரிப்பதற்காக 50 ஆடுகள் வழங்கியது; கோயில் திருவிழாவுக்கு நெல் அளந்தது; கோயிலுக்கு நெல்லும் பொன்னும் ஒருவணிகன் அளித்தது; திருப்புத்தூர்ச் சபையார் ஜயங்கொண்ட விண்ணகராள்வார் கோயில்கூடி நரலோகவீரன் சந்தி என்று கோயிலில் ஏற்படுத்தியது; திருப்பதியம் விண்ணபிக்க (தேவாரம்பாட)த் தானம் வழங்கியது; பாண்டியன் குலசேகரனைக் காணத் திருப்புத்தூர்ச் சபையார் மதுரை செல்ல வழிச் செலவு கொடுத்தது; தயா பஞ்சரம் என்னும் மண்டபத்தில் கூட்டம் கூடியது; உறங்காப் புளியடியில் சபைக்கூட்டம் நடந்தது; விளக்குக்காகப் பொருள், நிலம், 25 பசுக்கள், ஒரு எருது இவைகள் தானம் செய்தது; ஆளுடைய பிள்ளையார் (சம்பந்தர்) சந்நிதியில் பூசைக்காகப் பொருள் கொடுத்தது; பாண்டியன் ஸ்ரீவல்லபதேவன் அரசி உலகமுழுதுடையார், கோயில் மடைப்பள்ளி கட்டியது; கணிகைமாது ஒருத்தி கோயிலில் திருநாவுக்கரசர் திருவுருவம் எடுப்பித்தது; கோயிலில் மகம்மதியர் புகுந்து அசுத்தப் படுத்தியதைக் கும்பாபிஷேகம் செய்து தூய்மைப் படுத்தியது; பைரவர் கோயிலுக்கு நிலம் விட்டது; கோயில் நிலங்களைக் குத்தகைக்கு விடப்பட்டது; திருப்புத்தூரிலிருந்த திருஞானசம்பந்தர் மடத்து ஆச்சாரியராயிருந்த ஸ்ரீகந்த சிவன் என்பார்க்கு நிலம் விற்றது; நந்தவனப் பராமரிப்புக்கு நிலம் விற்றுக் கொடுத்தது; சூரிய தேவர் சந்நிதியேற்படுத்தியது. திருத்தொண்டத் தொகையான் மடம் என்ற ஒன்றிருந்ததாகத் தெரிகிறது.

இன்னும் இவ்வூரில் உள்ள அங்காளம்மன் கோயிலிலும், நின்ற நாராயணப் பெருமான் கோயிலிலும் கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகள் விளக்குக்காக ஆடு, நிலம் இவைகள் தானம் செய்யப்பட்டதை அறிவிக்கின்றன. திருப்புத்தூர் மாரியம்மன் கோயிலில் பூச்சொரிதல் என்ற திருவிழா சித்திரை மாதத்தில் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

பாம்பன் சுவாமிகள்

பாம்பனெனும் பதிமுளைத்த பவளக் குன்றே
பழம்பாண்டித் தமிழ்ப்பொழிலே பண்பா ரில்லத்
தீம்பயிரே அன்புகொழி திரையே தெய்வத்
திறங்கண்ட அறநிலையே செகத்தி லுற்ற
கூம்பலற எழுகதிரே குழந்தை வேலன்
குகனெறியே நெறியென்ற குருவே நீதி
ஓம்புகவென் றுரைத்தொழுகி உலகில் வாழ்ந்த
உயர்குமர குருதாச ஒளியே போற்றி.

—திரு. வி. கலியாணசுந்தரனர்.

பண்டைத் தமிழர் முருகக் கடவுளை வழிபட்டனர் என்பதைப் பல சங்க இலக்கிய நூல்களால் நாம் அறிகிறோம். சிறப்பாக, திருமுருகாற்றுப்படையில் முருகன் உறைகிற இடங்களை ஆறுபடை வீடுகளாக அமைத்து அவனை வழிபடும் முறைகளை அழகு பெறப் பாடியவர் நக்கீரர் என்னும் புலவர் பெருந்தகையார். அஞ்சா நெஞ்சம் படைத்த அவர் முருகன் அடியார்களில் தலைசிறந்தவர். அருணகிரியார், குமரகுருபரர், கச்சியப்பசிவாசாரியர், சம்பந்தசரணலயர், சிதம்பரசுவாமிகள், பகழிக்கூத்தர், இராமலிங்க அடிகள், தண்டபாணிசுவாமிகள் இவர்களை நக்கீரர் பரம்பரையினர் என்றே சொல்லிவிடலாம். அந்த வரிசையிலேயே வைத்து எண்ணப்படும் பெருமை வாய்ந்த முருகன் தொண்டர் பாம்பன்—குமரகுருதாச சுவாமிகள் ஆவர்.

பாம்பன் என்னும் பெயரைக் கேள்விப்படாதாரில்லை. அது இராமேசுவரம் தீவிலுள்ள சிற்றூர். அவ்வூரில் சாத்தப்ப பிள்ளை யென்பாரும் அவர் மனைவியார் செங்கமல அம்மாளும் இல்லறம் என்னும் நல்லறத்தை நடாத்தினர். அவர்களுக்கு இராமேசுவரம் என்னும் பெரும் பதியிலே ஒரு ஆண் மகவு அவதரித்தது. அது இற்றைக்குச் சற்றேறக்குறைய 110 ஆண்டுகள் முன்னர். அதாவது 1850-ல். அக்குழந்தைக்கு அப்பாவு என்ற பிள்ளைத் திருநாமம் இட்டனர். பாம்பனில் வளர்ந்து படித்துக்கொண்டிருந்தது. அவருடன் அறிவும், ஒழுக்கமும், ஆண்டவனிடம் அளவற்ற அன்பும் வளர்ந்துகொண்டு வந்தன. அவ்வூரிலுள்ள கிறிஸ்துவர் கோயிலையும், முகமதியப் பள்ளி வாசலையும் கூட வணங்குவதுண்டு. அவருடைய இந்த இளமைப் பழக்கம் முதுமை வரையில் இருந்ததாகக் கூறுவர். சென்னையிலிருக்கும்போது மவுண்ட் ரோடிலுள்ள நாகூர் ஆண்டவர் பள்ளிவாசலைக் காணும்போதெல்லாம் வணங்கிச் செல்வராம். ''எல்லோர்க்கும் ஆண்டவன் ஒருவனே; நாமெல்லோரும் அவன் மக்கள்'' என்று கூறுவாராம்.

அப்பாவு இளமையிலே சிலம்பம், மற்போர், நீர்நீத்து முதலியவைகளை நன்கு பழகி உடலோம்புதல் செய்தார். உடலை வளர்த்தால்தான் உயிரை வளர்க்க முடியும்; 'அப்போது தான் உடம்பிலே உத்தமனைக் காண முடியும் என்பதை அவர் கண்டு கொண்டார். அவர் 'சிவந்தமேனியர்; உயர்ந்த உருவினர்; பரந்த நெற்றியர்; விரிந்த மார்பினர்'. அவர் தோற்றம், நடை, பேச்சு இவைகளில் வீரம் செறிந்து நிற்கும். 'நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே' என்று சிவபெருமான் முன்பு அஞ்சாது கூறிய நக்கீரர் என்ற புலவர் பரம்பரையில் வந்தவர் என்பதை அது நினைவூட்டுவதாக இருந்தது.

அவர் இளைஞராக இருக்கும்போது கை பார்த்த ஒருவர், 'அவர் ஒரு பெரும் புலவராகப் புகழ்பெற்றுத் திகழ்வர்' என்றார். குறிபார்த்த ஒருத்தி 'அவர் உயிர்த்துணை ஆண்டியே; அவனை மறவாதிருந்தால் எல்லா நன்மையும் உண்டாகும்' என்றாளாம். இன்னுமொரு இரேகை நூல் வல்லவர், 'அவருடையகையில் கபாலி முக்கோண கயிலாச ரேகை இருக்கிறது; ஆதலால் அவர் வேலவரைப் பாடுவர்; நூல்கள் பல இயற்றுவர்; பலரை மாணவர்களாகக் கொள்வர்; சித்து விளையாடாத் துறவியுமாவர்' என்று கூறினராம்.

அப்பாவு பள்ளிக்கூடத்தை விட்டு நீங்கு முன் சில நண்பர்களுடன் நாகநாதர் கோயில் திருவிழாக் காணச் சென்றனர். தோணியேறிப் போக நேர்ந்தது. தோணிக்குள் இருந்த துறவி ஒருவர் சிவசிவ என்று இடைவிடாது சொல்லிக் கொண்டிருந்ததை உற்றுக் கவனித்தார். அம்மந்திரத்தை இடைவிடாது மூன்று நாள்கள் பயின்றார். முருகக் கடவுளைப்பற்றிய நூலொன்றைப் பார்க்க விரும்பினர். தேவராயசுவாமிகள் இயற்றிய கந்தர்சஷ்டிக் கவசத்தை நாள்தோறும் முப்பத்தாறு தடவைகள் படித்தார். இவ்வாறுமுழுகு நாட்களில் ஒருநாள் தம் தென்னந்தோப்புக்குச் சென்றார். அங்கு இறைவனைப் பாட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது; பாடவே, பாடியே அறியாத அவர் வாக்கில் 'கங்கையைச் சடையிற்பரித்து' என்ற மங்கலச் சொற்றொடர் எழுந்தது. அதையே முதலாகக்கொண்டு பின் வரும் பாடலை ஒலியில் எழுதினர்:

கங்கையைச் சடையிற் பரித்துமறி மழுவங்
கரத்திற் றரித்துருத்ரங்

காட்டுழுவை யதளசைத் தனிமன்றி லாடுகங்
காளற் கபின்னமாய
சங்கரி சடாதாரி சருவாணி கல்யாணி
தற்பரி பவானி தந்த
தந்திமுக னேடுமற் றைந்துபெயர் நீர்மையுந்
தன்னகத் துளதெய்வமே
மங்கையர்த மின்பமெனுந் துன்பினை விரும்புமட
மார்க்கத்தை விட்டதீதர்
வாழ்வுக்கும் வாழ்வாய வாழ்வினை யளிக்குமுன்
மலரடி தியானிக்கவும்
அங்கையினி னெல்லியங் கனியெனத் திருவருளை
யடையவுங் கருணை நல்காய்
அருமறை புகழ்ந்தநிரு முருகசிவ சரவணத்
தாதியே அமரர்கோவே.

அது முதல் நாள்தோறும் உணவு கொள்ளு முன் ஒரு பாடலைப் பாட வேண்டுமென்ற முறையைக் கைக்கொண்டார். பாடசாலைப் படிப்பால் அவர் கவிபாடும் வன்மைபெறவில்லை; ஆண்டவன் திருவருள் விளக்கத்தாற் பெற்றதேயாகும்.

வடமொழி தென்மொழிகளில் வல்லவரான இராமேசுவரம் சேதுமாதவர் கோயில் அர்ச்சகர் சேதுமாதவய்யர் என்பவரிடம் தாம் அதுவரையில் பாடியுள்ள பாடல்களைக் காட்டினர். அவற்றின் உள்ளுறைப் பொருள் கடவுள் என்பதை அறிந்த அப்பெரியார் அப்பாவுவுக்கு ஆறெழுத்து மந்திரத்தை உபதேசித்தார். அதுமுதல் அப்பாவுவும் முருகன் பெருமையைப் பேசாதே நாளே இல்லை.

தமக்கு மணம் வேண்டாம் என்று மறுத்தார். ஆனல் அவருடைய குருவின் ஆணைக்கிணங்க இருபத்தைந்தாம் வயதில் காளிமுத்தம்மாள் என்ற பெண்ணை வதுவை புரிந்துகொண்டார் அவருக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தன. அவருடைய இல்வாழ்க்கை நாயன்மார்களுடைய இல்வாழ்க்கை போன்றே இருந்தது. எத்தொழிலைச் செய்தாலும் முத்தர் மனம் மோனத்தே என்றபடி வாழ்ந்தார். இறைவனை இடைவிடாது எண்ணி விடுதலை விழைந்தார். பல தலங்களை வணங்கி அறுமுகச் செவ்வேள் அடிமலர்களுக்குப் பாமாலை சூட்டினர்.

இல்லறத்திலிருக்கும்போதே உணவு நியதியைக் கைக்கொண்டார். உப்பும் புளியும் இல்லாத உணவை உச்சிப்போது ஒருமுறையே உண்டு வந்தார். வாழ்நாள் முழுமையும் அப்படியே செய்தார். 'இறையைத் தேட இரையைத் தேடு' என்று அவர் சொல்வது வழக்கமாம். உடற்பயிற்சியும் உணவு நியதியும் தவருது ஒழுகினமையின் அவர் நல்ல உடற்கட்டுடன் விளங்கினர்.

1894-ஆம் ஆண்டிலே பாம்பனுக்கு அண்மையிலுள்ள பிரப்பன்வலசை என்னும் ஊரில் மயான வெளியிலே குழி தோண்டி அதிலமர்ந்து ஆண்டவனைத் தியானம் செய்தார். ஐந்து நாள் வரை மனம் அடங்கவில்லை: ஆருவது நாள் அடங்கிற்று. முருகனையே குருநாதனுகக் கொள்ள வேண்டுமென்று கடுந்தவம் செய்தார். ஏழாம் நாள் இரண்டு முனிவர்களோடு ஒரு இளைஞர் தோன்றி இரகசிய மொழியொன்றை உபதேசித்துப்போனர். பின்னரும் 35 நாட்கள்வரை யோக நிட்டையிலிருந்து எழுந்தார். இவ்வளவு நாட்களும் ஆகாரம் இல்லாதிருந்தும் அவர் உடலுக்கு ஒரு ஊறும் நேரவில்லை. இதெல்லாம் அவர் இல்லறத்திலிருந்தபோது நடந்தவை.

அவருடைய நாட்டம் துறவறத்திலேயே இருந்தது. ஒரு நாள் எவருக்கும் சொல்லாது புறப்பட்டார். அதையறிந்து பின் தொடர்ந்த மகனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு அவர் தாயார் இருந்த பிரப்பன் வலசைக்குச் சென்று, வணங்கி, விடைபெற்று இராமநாதபுரம், திருவாதவூர் மதுரை வழியாகச் சென்னை சேர்ந்தார். ஒரே வெள்ளை வேட்டியுடன் புறப்பட்டு வந்தார். துவராடையும், அக்கமணியும் திருவருளால் கிடைத்தன. துறவறம் மேற்கொண்டபின் சுவாமிகள் தம்முடைய ஊராகிய பாம்பனுக்குச் செல்லவில்லை. அது முதல் அவர் பாம்பன் - குமரகுருதாச சுவாமிகள் என்றழைக்கப்பட்டார்.

சென்னையிலிருக்கும்போது பல நூல்களை இயற்றினர்கள். அவை சாத்திர தோத்திரமாகவும் வசனமாகவும் அமைந்துள்ளன. மொத்தப் பாடல்கள் 6666. இதுவே அவர் தலைசிறந்த முருகன் தொண்டர் எனபதற்குச் சான்ருகும். அவர்கள் அருளிய நூல்கள், திருப்பா, ஸ்ரீமத் குமார சுவாமிபம், குமரகுருதாச சுவாமிகள் பாடல், திருவலங்கல் திரட்டு, தகராலய ரகசியம், பரிபூரணனந்தபோதம், ஸ்ரீ சுப்பிரமணிய வியாசம், சிவயாதனவியாசம், வேதவியாசம், சிவஞானதீபம், பத்துப் பிரபந்தம், செக்கர்வேள் செம்மாப்பும்—இறுமாறுப்பும், சிறுநூற்றிரட்டு, சண்முக சகச்சிர நாமார்ச்சனை, குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி, சேந்தன் செந்தமிழ், செவியறிவுறூஉ, சண்முக கவசம், பஞ்சாமிர்தவண்ணம் முதலியன. சுவாமிகள் தம்முடைய பாடல்களை ஆறு மண்டலங்களாகப் பிரித்தார்கள். அவை அவர்கள் காலத்திலேயே அழகாக அச்சிடப்பெற்றுள்ளன.

சுவாமிகள், மகாதேஜோமண்டலம் என்ற ஒரு சபையை அமைத்தார்கள். அவர்கள் மாட்டு அன்பு பூண்ட பல பெரியோர்கள் அதில் அங்கத்தினரானர்கள். 'எந்தை அருணகிரி', 'அப்பா அருணகிரி' என்று தாயுமான அடிகளும், 'எம்மான்' என்று சிதம்பர சுவாமிகளும் துதித்த அருணகிரிநாதரிடம் பாம்பன் சுவாமிகள் பரம பக்தி பூண்டார்கள். சென்னை புதுப்பாக்கம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய பக்தஜன சபையில் அருணகிரிநாதர் குருபூசை விழாவை முதல் முதலில் நடத்

திக்காட்டினார்கள். அதற்குப் பின்னரே அத்தகைய விழாக்கள் நாடெங்கும் பரவலாயிற்று. இராயப்பேட்டையிலுள்ள பாலசுப்பிரமணிய பக்தஜன சபைக் கட்டிடத்தின் கால்கோள் விழாவை 1903-ஆம் ஆண்டு அடிகளாரே நிகழ்த்தினார்கள். அச்சபை தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய தொண்டுகள் மிகப்பல.

சுவாமிகளிடமிருந்து நாம் தெரிந்துபின்பற்ற வேண்டிய பண்பாடுகள் பல. மூட்டைப் பூச்சியை ஒருவர் கொன்றதைப் பார்த்த அவர்கள் இழவு ஏற்பட்டதென்று அன்று உணவுகொள்ளவில்லை. இது உயிர்களிடம் கருணைகாட்ட வேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்துகின்றது. 'செய்வன திருந்தச் செய்' என்பதை மிகவும் சிறந்த முறையில் கையாண்டு காட்டினார்கள். நூல்களை அச்சிடல், விழாக்கள் நடத்தல், பூசை வழிபாடாற்றல் முதலியவைகளை அவர்கள் நேரே நின்று ஆற்றியதைப்பற்றிய செய்திகள் பலவற்றை நாம் அன்பர்கள் மூலம் கேள்விப்படுகிறோம். அவர்கள் பட்டினிகிடப்பினும், நோய்வாய்ப்பட்டிருப்பினும் இறை வணக்கத்தை முறையாகக் கொண்டிருந்தார்கள். அவர்கள் புகழை விரும்பவில்லை. சொற்பொழிவுகள் செய்வதைப் பெரும்பாலும் தவிர்த்தார்கள். ஆனால், பல மணி நேரங்கள் அன்பர்களுடன் அளவளாவி நல்லுபதேசங்கள் செய்வது அவர்களுடைய பழக்கம்.

அவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதச் செயல்கள் பல. கனவில், ஒருவர் சுவாமிகளை அழைத்துப் பாலன்னம் இட்டதாகக் கண்டார்கள். அது முதல் பாடும் சக்தி அதிகம் கொண்டார்கள். 27-12-1923-ல் சுவாமிகளுடைய கால் குதிரை வண்டியால் முறிந்தது. மருத்துவ நிலையத்தினர் எலும்பு முறிவு கூடாதெனக் கலங்கினர். இரண்டு மயில்கள் நடனமிடுவதாகவும், தம்மருகே ஒரு குழந்தை படுத்திருக்கவும் கனக்கண்டார்கள். கூடியவிரைவில் எலும்பு முறிவு கூடியது. இதையொட்டியே சுவாமிகள் ஆண்டுதோறும் மயூரவாகன சேவை என்பதைத் தாங்களே முன்னின்று நடத்திவந்தார்கள். காஞ்சித்தல யாத்திரை சென்று சில பெரிய கோயில்களைப் பார்த்துவிட்டு புகை வண்டி நிலையத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். வழியில் ஒருவர் வந்து, 'குமரகோட்டம் சென்று வழிபட்டதுண்டோ?' என்று கேட்டார்கள். அக்கோட்டத்தைப்பற்றிச் சுவாமிகள் பாடியிருந்தும் அதைப் பார்க்காமையின் வந்தவர் வழிகாட்டக் குமரகோட்டம் சென்றார்கள். வழிகாட்டி குமரகோட்டத்தருகே மறைந்துவிட்டார். இன்னும் பல அற்புத நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. சுவாமிகளுடைய சமயம் அறுமுகச்சிவன் வழிபாடு. வாக்குமனாதீத மௌனம்தான் முடிபு. இதை அவர்கள் இயற்றியுள்ள தகராலயரகசியம், செவியறிவுறூஉ என்ற நூல்களில் பரக்கக்காணலாம்.

சுவாமிகள், சுக்கில ஆண்டு, வைகாசித் திங்களில் (30-5-1929) அமரப்பக்கச் சஷ்டியும் அவிட்டமும் கூடிய நன்னாளில் அறுமுகச் செவ்வேள் அணிமலர்ப்பதம் நண்ணினார்கள். சென்னைக்குத் தெற்கேயுள்ள பாடல்பெற்ற பதியான திருவான்மியூர்த் தியாகேசர் கோயிலுக்கு வடபால் சுவாமிகள் சமாதி நிலையம் அமைந்திருக்கிறது

''இந்நாளிலும் செம்பொருளைக் கண்ட பெரியோர் சிலருளர். அவருள் பாம்பன்-குமரகுருதாச சுவாமிகளும் ஒருவராவர். அவர் செம்பொருளை முருகன் என்னும் பெயரால் வழிபட்டும் பேறெய்தியவர். பாம்பன் - குமரகுருதாச சுவாமிகள் வடமொழியிலும் தென் மொழியிலும் பெரும்புலமை வாய்ந்தவர். அவர் தம் புலமை பெரிதும் முருகன் திருவடியைப் பாமலரால் போற்றுவதிலும், அவன் மாண்பு விளங்க ஞான நூல் பல ஆக்கியதிலும் செலவாயிற்று. பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடியெனுங் கரை ஏறுதற்குச் சுவாமிகளின் வாழ்வும், அவர் தம் வாய்மையும் புணை போன்று துணை செய்யும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை'' என்று சுவாமிகளிடம் பேரன்பு பூண்டொழுகின திரு. வி. கலியாணசுந்தரனார் கூறியுள்ளார். அவர் அடிகளாரின் மீது யாத்த அன்புச் செய்யுள் ஒன்று இக்கட்டுரையின் தலைப்பை அணி செய்கின்றது.

கமழ்க டம்பணி பூணறுங் கண்டனே
 கரையில் விண்மண்ணு நிற்கும கண்டனே
இமிழ்சி லம்பணி தாங்கிரு காலனே
 எவையுந் தந்துபின் வாங்கொரு காலனே
தமிழ்நெ டுங்கவி பாடுநர் நாதனே
 தந்தைக் குங்குரு வானவ நாதனே
அமிழ்த ராசைகொள் பேரின்பக் கட்டியே
 அடிய னேனையும் ஆள்நலங் கட்டியே

—பாம்பன் சுவாமிகள்.

திருப்புகலூர், ஸ்ரீ அக்கினிசுவரசுவாமி கோயிலில் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழாவும் இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழாவும் 7-8-59 வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

திருநாட்டியத்தன்குடி ஸ்ரீ மங்களாம்பிகை உடன்கூடிய ஸ்ரீ இரத்தினபுரீசுவரசுவாமி கோயிலில் நடவு மகோற்சவம் 12, 13-8-59 தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

மகாத்மா காந்தியின் பொன்மொழிகள்

இறைவனுடைய உணர்ச்சி உள்ளத்தெழு ஞாயிறே போன்று எழஎழ பிரார்த்தனைப் பழக்கம் தினம் உட்கொள்ளும் உணவைவிட அவசியமாக அமைந்துவிட்டது. ஒருவன் அவ்வுணர்ச்சி பெற்றுவிடில் உண்டியின்றிருப்பினும் இருக்கலாம். பிரார்த்தனை அல்லது வழிபாடின்றி வாழ முடியாது.

உண்ணாவிரதம் உறுதியுடன் பன்னாட் பழக ஊக்கமளித்தது. வார வழிபாடென்றே கூறுவேன். தினம் இறைவனைச் சிறிது நேரமாகிலும் அன்பாய் வழிபடுதலே வாரவழிபாடாகும்.

சத்தியநெறியில் தோல்வி யென்பதே யில்லை. தோல்வி தோன்றுவதற்குக் காரணம் ஆணவத்தோடு கூடி செய்யும் பிரார்த்தனையே யாகும். பண்டமாற்று போன்று பிரார்த்தனை செய்யின் அதுவும் பயனளிக்காது.

தன்னம்பிக்கை இழந்து, தேற்றுவோரின்றி, துன்பத்தில் தயக்கமுற்று வாடிக்கிடக்கும் நேரத்திலும் ஆண்டவனின் உதவியைப் பெறலாம். எங்கிருந்து அவன் உதவுகிறான், எப்படி உதவுகிறான் என்பது எனக்குத் தெரியாது. பிரார்த்தனை வெறும் மூடநம்பிக்கையல்ல; உண்ணுவது உறங்குவது, நடப்பது போன்று உண்மையில் பயன் தரும் செயலேயாகும்.

பிரார்த்தனைக்குப் பேச்சு வேண்டுவதில்லை. ஹிருதய எழுச்சி ஒன்றே போதும். மனமாசுகள் ஒழிய பிரார்த்தனையைத் தவிர வேறு வழியில்லை.

எல்லா உண்மைகளும் அவன் தருவதேயன்றி வேறில்லை. அவனன்றி ஓரணுவும் அசையாது. எனினும் அவன் நேரே வழங்குவதில்லை. யார் மூலமேனும் உதவி புரிவான்.

நம்பினவர்களுக்கு அவன் இருப்பு மாத்திரமாகவே இருக்கிறான். கொடிய செயல்களுக்கிடையிலுமிருக்கிறான். அவன் பெருமையோடு இருந்தபோதிலும் தீமைகளை யகற்றுவதில் கொடியனாகக் காணப்படுவான்.

செய்திகள்

சைவப்புலவர் இளஞ்சைவப் புலவர் தேர்வுகள்—சைவசித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் 15-11-1959 நடைபெறுகின்றன. விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர், சமாஜ செயலாளர் 28, இராமகிருஷ்ண மடத்து தெரு சென்னை 4 என்ற முகவரிக்கு எழுதவும்.

கும்பகோணம் ஆதி கும்பேசுவரர் கோயிலில் நவராத்திரி விழாவில் 30-9-59 கௌரி பூஜை, 1-10-59 தேவேந்திர பூஜை, 2-10-59 முதல் 10-10-59 கொலுக் காட்சி, 11-10-59-ல் சுவாமி புறப்பாடு இவைகள் நடைபெறும்.

திருநாகேசுவரம்-ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீனிவாசப் பெருமாளின் பிரமோற்சவம் 2-10-59 முதல் 12-10-59 முடிய நடைபெறும்.

திருநெடுங்களம் ஸ்ரீ ஒப்பிலா நாயகி உடன்கூடிய ஸ்ரீ திருநெடுங்களநாதசுவாமி கோயிலில் சென்னை அரசாங்க நிதியிலிருந்து கிடைக்கப்பெற்ற தொகை ரூ.6000 மற்றும் அன்பர்கள் நன்கொடை வசூல் முதலியவைகளைக்கொண்டு திருப்பணி செய்யப்பெற்று, 9-9-59 காலை 11-மணிக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. திருச்சி உதவி ஆணையர் திரு டி. இ. ஜனார்த்தனம், பி. ஏ., அவர்களும் கலந்துகொண்டார்கள். திருச்சி பழ கமிஷன் மண்டி உரிமையாளரும் திருப்பணிக் குழு செயலாளருமான திரு டி. இராசகோபால் பிள்ளை தனது செலவில் அன்று ஏழைகளுக்கு உணவளித்தது பாராட்டத்தக்கது.

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவெம்பாவை

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்பனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

[கரிய குவளை மலர்களுடைமையாலும், செந்தாமரை மலர்களுடைமையாலும், நீர்ப்பறவைகளுடைமையாலும், அலையொலிகளையுடைமையாலும், தம்மிடத்துள்ள அழுக்கைக் கழுவக்கருதுவார் வந்தடைதலினாலும், எங்கள் இறைவியும் இறைவனையும் போன்ற பொய்கையில், கைவளையல், சிலம்பு இவை ஒலிக்கவும், நகில்கள் குலுங்கவும், நீர்மேலெழவும் குதித்து நீராடுவோமாக.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

புள்ளின்வாய்கீண்டானைப் பொல்லாவரக்கனைக்
கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமைபாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று
புள்ளுஞ்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்
குள்ளக்குளிரக் குடைந்துநீராடாதே
பள்ளிக்கிடத்தியோ பாவாய் நீநன்னாளால்
கள்ளம்தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

[பகாசுரன் வாயைக்கிழித்த, இராவணனைக் கிளையொடும் அழித்த அவனுடைய வீரப் புகழைப் பாடிக்கொண்டு எல்லாப் பெண்களும் குறித்த இடம் சேர்ந்தார். வெள்ளி புறப்பட்டு, வியாழன் மறைந்தது. இரைதேடச் செல்லும் பறவைகளும் கூவின. பெண்ணே! நன்றாகக் குடைந்து நீராடாமல் படுத்துக்கிடக்கிறாயோ? கபடத்தை விடுத்து எங்களோடு கலந்து அனுபவிப்பாயாக.]

அடியவர் திருநட்சத்திரங்கள்

விகாரி—ஐப்பசி

சைவம்

8உ—சத்திநாயனார்
15உ—மெய்கண்டதேவர்
16உ—பூசலார் நாயனார்
18உ—ஐயடிகள் காடவர்கோன் நாயனார்
7உ—திருமூல நாயனார்
28உ—நின்றசீர் நெடுமாற நாயனார்
29உ—இடங்கழி நாயனார்

வைணவம்

21உ—பொய்கையாழ்வார்
22உ—பூதத்தாழ்வார்
23உ—பேயாழ்வார்



குன்றக்குடி மலைக்கோயில்

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-2.